'தமிழன்' பத்திரிகை வீடுகளுக்கு நேரடியாக விநியோகிக்கப்படும். QR ஐ ஸ்கேன் செய்து தகவல்களை பெற்றுக்கொள்ளுங்கள்.



Follow us

# தமிழன்

THAMILAN தமிලන්

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 04, இதழ்: 45 சோபகிருது வருடம், ஆவணி மாதம் 06ஆம் திகதி புதன்கிழமை (23.08.2023) ஹிஜ்ரி 1445, ஸபர் - 06, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50

## சிங்கப்பூர் பிரதமருடன் ஜனாதிபதி ரணில் சந்திப்பு



02பக்கம்

## மாத்தளை தோட்டத்தில் தமிழர்களுக்கு அநீதி!

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பாராளுமன்றத்தில் சாடல்



பெருந்தோட்ட மக்கள், உழைக்கும் மக்கள் மீதான கொடூரமான அடக்கு முறைகளை எதிர்க்கட்சி வன்மையாகக் கண்டிப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று (22) பாராளு மன்றத்தில் தெரிவித்தார்.

மாத்தளை - எல்கடுவ, ரத்வத்த கீழ் பகுதியில் வசித்து வந்த 03 குடும்பங் களைச் சேர்ந்த 14 பேர் தோட்ட உதவி முகாமையாளரால் கடந்த 19ஆம் திகதி வெளியேற்றப்பட்டமை தொடர்பில் பாராளுமன்றத்தில் கருத்துத் தெரிவிக் கும்போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது,

தற்காலிகமாக அவர்களுக்கு தங்க அனுமதிக்கப்பட்டிருந்த குடியிருப் புகளும்... 02 பக்கம்

## மாத்தளை அதிகாரியை கைது செய்யுங்கள்

### தமிழ் எம்.பிக்கள் சபையில் அமர்ந்து போராட்டம்



நா.தினுஷா

மாத்தளை, ரத்தோட்டை பிரதேசத் திலுள்ள அரசுக்கு சொந்தமான தோட் டத்திலிருந்து மூன்று குடும்பங்களைச் சேர்ந்த 14 பேரை, அந்த தோட்டத்தின் பிரதானி பலவந்தமாக வெளியேற் றியமைக்கு எதிர்ப்பு தெரிவித்தும் குறித்த அதிகாரியை... 02 பக்கம்

## உதவி முகாமையாளர் கைது செய்யப்படாதது ஏன்?

### சபையில் மனோ ஆவேசம்



அப்பாவி தொழிலாளர் குடும்பத்தின் மீது மனிதாபிமானமற்ற முறையில் அராஜகம் புரிந்து, குழந்தை அழுகின்ற வேளையிலும், வீட்டை உடைத்து துவம்சம் செய்த மாத்தளை, ரத்வத்தை தோட்ட உதவி முகாமையாளர் இடமாற் றம்தான் செய்யப்பட்டுள்ளாராம். பணி நீக்கம் செய்யப்படவில்லையாம். பாராளுமன்றத்தில் எமது ஆர்ப்பாட்டத்துக்கு பதிலளித்த பெருந் தோட்டத்துறை அமைச்சர் ரமேஷ் பத்திரண கூறினார்.

அப்படியானால், யாரை ஏமாற்ற இந்த நாடகம்? அத்துமீறிய குடியேற்றமாக இருந்தாலும் அதை சட்டப்படித்தான் அணுக வேண்டும் என அமைச்சரே கூறுகிறார். அப்படியானால், சட்டத்தை கையிலெடுத்து வீட்டை உடைத்தது குற்றம் இல்லையா என தமிழ் முற் போக்கு... 02 பக்கம்

## மயிலத்தமடு சென்றோர் பலவந்த தடுத்துவைப்பு

### பௌத்த தேரர் கொண்ட குழுவினர் அட்டகாசம்



02பக்கம்

### உஷ்



கோட்டா கோ கம போராட்டத்தை நடத்திய குழு சரத் பொன்சேகாவை வைத்து மற்றுமொரு புரட்சிக்கு தயாராகிறதாம்.

பொன்சேகாவின் பிறந்தநாள் டிசம்பரில் வருவதால் அதற்கு முன்னர் ஒக்டோபர் முதல் பெரும் பேரணிகளை நடத்தி பிறந்த நாளன்று அவரது புதிய அரசியல் திட்டத்தை அறிவிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

ஏற்கனவே, ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற குழுக்கூட்டங்களில் பொன்சேகா கலந்துகொள்வதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## கைப்பற்றப்பட்ட 1000 வாள்கள் ஆழ்கடலில் கொட்டப்பட்டன



ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பின்னர் பல்வேறு இடங்களிலிருந்து பாதுகாப்புப் படையினரால் கைப்பற்றப்பட்ட 1,000 வாள்கள், வெடிகுண்டு துண்டுகள், ஈட்டிகள் உள்ளிட்ட ஆயுதங்கள் நீதிமன்ற உத்தரவுப்படி ஆழ்கடலில்... 02 பக்கம்

## தோட்ட உரிமையாளர்கள் தன்னிச்சை செயற்பாட்டில்

### உரிய நடவடிக்கை எடுக்க சபாநாயகர் வலியுறுத்தல்



மாத்தறை தோட்டப் புறங்களிலும் பல பிரச்சினைகள் காணப்படுகின்றன. தோட்ட உரிமையாளர்கள் தன்னிச்சையாக செயற்படுகி றார்கள். 02 பக்கம்

## வறட்சியின் பாதிப்பு தீவிரமடைந்தது

### சிறுவர்களை கவனிக்க வலியுறுத்து

கே. சுபானி

நாட்டில் நிலவும் கடும் வறட்சியால் குடிநீரின்றி 17 மாவட்டங்களைச் சேர்ந்த 2 இலட்சத்து 48 ஆயிரத்து 531 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடும் வறட்சியால் யாழ்ப் பாணம், இரத்தினபுரி, மட் டக்களப்பு, அம்பாறை, குருணாகல், ஹம்பாந்தோட்டை மற்றும் மொனராகலை உள் ளிட்ட மாவட்டங்களில் அதிக எண்ணிக்கையிலானோர் குடிநீரின்றி தவித்து வருவதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் நேற்று (22) வெளி யிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, நிலவும் வறட்சி யான காலநிலை காரணமாக சிறுவர்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும் என சிறுவர் நோய்கள் தொடர் பான நிபுணர்கள் சுட்டிக்காட்டி யுள்ளனர். 02 பக்கம்

## இப்பொழுதே இப்படியென்றால் 13 கிடைத்தால் என்ன செய்வார்கள்?

### கொதிக்கிறார் விமல்



13ஆவது அரசியலமைப்புத் திருத்தம் முழுமையாக அமுல்ப டுத்தப்படுவதற்கு முன்னரே தமிழ்க்கட்சிகள் குருந்தூர் மலையில் பொங்கல் பொங்கி வழிபாடு நடத்துகிறார்கள் என்றால், 13ஆவது திருத்தம் அமுல்படுத்தப்பட்டால் வடக்கு,... 02 பக்கம்

## ரணில் தலையிடாவிடின் விரைவில் இராஜினாமா

### இராஜாங்க அமைச்சர் பிரேமலால் ஜயசேகர அறிவிப்பு



"இராஜாங்க அமைச்சுக் களின் அலுவலகங்களுக்காக பெருந்தொகை நிதி செலவி டப்படுகிறது. துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் இராஜாங்க அமைச்சின் அலுவலகத்துக்காக கடந்த 11 மாதங்களில் மாத்திரம் 80 இலட்சம் ரூபா செலுத்த வேண்டியுள்ளது. மேலும், எனக்கு... 02 பக்கம்

## லைக்காவின் பணத்தில்தான் மின்கட்டணம் செலுத்தினோம்

### சபையில் சொன்னார் பந்துல



சனல் ஐ அலைவரிசைக்கும் லைக்கா நிறுவனத்துக்குமான ஒளிபரப்பு ஒப்பந்தத்தில் ஊழல் மோசடிகள் இடம்பெற்றுள்ளதாக நிரூபிக்கப்பட்டால் தனது அமைச்சுப் பதவியை இராஜினாமா செய்வேன் என வெகுசன ஊடக போக்குவரத்து மற்றும் நெடுஞ் சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்தன... 02 பக்கம்

### கமெண்ட் கந்தர்...



தமிழ் நீதிபதியை பார்லிமெண்ட்டில் திட்டித்தீர்க்கிறார் சரத் வீரசேகர.. இதையே சிங்கள நீதிபதியை தமிழ் எம்.பி ஒருவர் ஏசியிருந்தால் பொங்கி எழுந்திருப்பாங்கள்... அதிலேயே தெரியுதல்லெ இவங்கட சமத்துவம்..!

உங்கள் விருப்பம்போல Internet ஐ உபயோகிங்கள்

உங்களுக்கு உரிய மொபைல் Plan ஐ தெரிவுசெய்யுங்கள்



ரூ. 77/- முதல்

100GB வரை ஏராளமான Data Plans

ரீலோட் அல்லது MyDialog App ஊடாக செயற்படுத்துங்கள்

நிபந்தனைகளுக்கு உட்பட்டது TRC/D/PRO/22/07

Dialog

எதிர்காலம் இன்றே.

## மயிலத்தமடு சென்றோர்...

கனகராசா சரவணன்

மட்டக்களப்பு மாவட்ட கால்நடை மேய்ச்சல்தரை மயிலத்தமடு மாதவனை பகுதி பண்ணையாளர் எதிர் நோக்கும் பிரச்சினை மற்றும் அத்துமீறி பௌத்த விகாரை அமைப்பது காணி அபகரிப்பு தொடர்பாக ஆராய்வதற்கு நேற்று செவ்வாய்க்கிழமை (22) சென்ற சர்வமதத் தலைவர்கள், பண்ணையாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் உட்பட 18 பேரை பௌத்த மதகுரு தலைமையிலான காணி அபகரிப்பு குழுவினர் வழிமறித்து தடுத்து வைத்தனர்.

குறித்த பிரதேசத்தில் காணி அபகரிப்பு மற்றும் விகாரை அமைப்பது தொடர்பாகவும் பண்ணையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் மட்டக்களப்பு மாவட்ட சமய மதத் தலைவர்கள், ஊடகவியலாளர்கள் கொண்ட குழுவினர் சம்பவதினமான நேற்று காலை மயிலத்தமடு மாதவனை பிரதேசத்துக்கு வாகனங்களில் வணபிதாக்கள், மௌலவி ஒருவர், இந்து குருக்கள், 03 ஊடகவியலாளர்கள் உட்பட 18 பேர் சென்று பண்ணையாளர்களை சந்தித்து கலந்துரையாடிவிட்டு பகல் ஒரு மணியளவில் திரும்பிக் கொண்டிருந்தனர்.

இந்நிலையில், மட்டக்களப்பு எல்லை பகுதியில் அமைந்துள்ள கம்பி பாலத்துக்கு அருகாமையில் வாகனங்களில் திரும்பிக் கொண்டிருந்த சர்வ மதத் தலைவர்களின் வாகனங்களை கம்பி பாலத்தில் குறுக்கே தேரர் ஒருவருடனான நூற்றுக்கு மேற்பட்டவர்கள் ஒன்றிணைந்து வீதி தடையை போட்டு வாகனங்களை தடுத்து நிறுத்தி வாகனங்களின் திறப்புகளை பிடுங்கி எடுத்து, அவர்களை தடுத்து வைத்ததுடன் இந்து குருக்கள் ஒருவரை தாக்க முற்பட்டதையடுத்து அங்கு பெரும் பதற்றநிலை ஏற்பட்டது.

இச்சம்பவத்தையடுத்து, கரடியனாறு மற்றும் அரந்தலாவ பொலிஸ் பொறுப்பதிகாரிகள் கொண்ட பொலிஸ் குழுவினர் அந்தப் பகுதிக்கு சென்று பௌத்த தேரர் உடனான குழுவினருடன் பேச்சில் ஈடுபட்டனர். ஊடகவியலாளர்களின் கெமராவில் பதிவு செய்த காட்சிகள் அனைத்தையும் தேரர் அச்சுறுத்தி அழித்ததுடன் இந்தச் செய்தியை பிரசுரிக்கக் கூடாது என கடிதம் ஒன்றை வற்புறுத்தி பெற்றுள்ளனர்.

தொடர்ந்தும் பௌத்த தேர் உடனான குழுவுடன் பொலிஸார் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். 06 மணித்தியாலயங்கள் இவர்கள் தடுத்துவைக்கப்பட்டு நேற்று மாலை விடுவிக்கப்பட்டனர்.

## ரணில் தலையிடாவிடின்...

வழங்கப்பட்டுள்ள பொறுப்புகளை நிறைவேற்ற அதிகாரிகள் இடமளிப்பதுமில்லை. அமைச்சரும் இதுதொடர்பில் கவனம் செலுத்துவதில்லை. இதுதொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலையிட்டு விரைவான நடவடிக்கை எடுக்காவிட்டால் பதவியை இராஜினாமா செய்ய நேரிடும்" என்று துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் இராஜாங்க அமைச்சர் பிரேமலால் ஜயசேகர அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

அமைச்சின் அலுவலகத்தில் நேற்று (22) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் இராஜாங்க அமைச்சு பதவிக்கு, கடந்த செப்டெம்பர் மாதமே ஜனாதிபதியால் நான் நியமிக்கப்பட்டிருந்தேன். இந்த அமைச்சை பொறுப்பேற்று 11 மாதங்களாகின்றன. இது பரந்துபட்ட, பொறுப்புக்கூற வேண்டிய, நாட்டுக்கு பாரிய வருமானத்தை ஈட்டிதரும் அமைச்சு என்ற அடிப்படையில், இராஜாங்க அமைச்சரின் உதவியை பெற்றுக்கொள்வது அமைச்சரின் பொறுப்பாகும். பல்வேறு சந்தர்ப்பங்களில் முதலீட்டாளர்களை அழைத்து வந்து புதிய வேலைத்திட்டங்களை ஆரம்பிக்கவும் நடவடிக்கை எடுத்திருந்தேன். அதற்கும் பல்வேறு இடையூறுகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. அதிகாரிகளும் அமைச்சரின் கட்டளைக்கமையவே பணியாற்றுகிறார்கள். இராஜாங்க அமைச்சரை கணக்கில் கூட எடுத்துக்கொள்வதில்லை.

பல்வேறு சந்தர்ப்பங்களில் தொழிற்சங்க உறுப்பினர்களுடனும் கலந்துரையாடியிருந்தோம். அவர்களுக்கு இருக்கும் பிரச்சினைகள் குறித்து எங்களுக்கு தெளிவுபடுத்தியிருந்தார்கள். அந்த பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுக்கொடுக்க கூட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. 10- 15 வருடங்களுக்கு மேலாக சேவையாற்றும் அதிகாரிகளே இன்னும் சேவையில் இருக்கிறார்கள்.

பொறுத்திருந்து பொறுத்திருந்தே இந்த விடயங்களை நாட்டுக்கு பகிரங்கப்படுத்த தீர்மானித்தேன். நான் பொறுப்பேற்றது முதல் 11 மாதங்களில் 80 இலட்சம் ரூபா நிதியை செலுத்தவேண்டியுள்ளது. ஆனால், இன்னும் அந்த நிதி தொகையை மீள செலுத்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை. நாடு பெரும் பொருளாதார நெருக்கடியை சந்தித்துள்ள பின்னணியில், அமைச்சின் கீழ் தனியாக இடமொன்றை பெற்றுக்கொடுக்குமாறு கோரியிருந்தேன். எனது அமைச்சையும் கிடப்பில் போட்டிருக்கிறார்கள். எனது அமைச்சின் கீழ் 80 இலட்சம் ரூபா மீள செலுத்தவேண்டியுள்ளது. இந்த அமைச்சின் அலுவலகத்தை வேறு இடத்துக்கு மாற்றித்தருமாறும், இதற்கென இவ்வளவு தொகை நிதியை செலவு செய்வதில் எனக்கும் விருப்பம் இல்லை என்பதையும் செயலாளருக்கு அறிவித்திருந்தேன். அமைச்சில் இடமில்லை என்று கூறுகிறார்கள். ஆனால், அமைச்சில் தேவையானளவு இடவசதி இருக்கிறது. அந்த இடங்களில் மற்றைய அதிகாரிகளை பணிக்கு அமர்த்தியிருக்கிறார்கள்.

ஒலுவில் துறைமுகத்தை எனக்கு கொடுத்திருந்தார்கள். ஆனால், அந்த துறைமுகம் தற்போது செயற்பாட்டில் இல்லை. பலாலி விமான நிலையமும் முதலீட்டாளர் ஒருவர் இல்லாமல் மூடப்பட்டுள்ளது. இந்த நிறவனங்களில் முதலீடு செய்ய முதலீட்டாளர்களை அழைத்துவரும்போது அதற்கும் அதிகாரிகளினால் இடையூறு ஏற்படுத்தப்படுகின்றது. எனவே, இந்த பிரச்சினை தொடர்பில் ஜனாதிபதி செயலகத்துக்கு பல முறை அறிவித்திருக்கிறேன். இதுதொடர்பில் நடவடிக்கை எடுக்காவிட்டால் பதவியை இராஜினாமா செய்யப்போவதாகவும் அறிவித்திருக்கிறேன். ஜனாதிபதி இந்த விடயம் தொடர்பில் கவனம் செலுத்தி விரைவான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றார்.

## சிங்கப்பூர் பிரதமருடன்...

சிங்கப்பூருக்கான இருநாள் விஜயம் மேற்கொண்டிருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் சிங்கப்பூர் பிரதமர் லீ சியன் லூங் (Lee Hsien Loong) ஆகியோருக்கிடையிலான சந்திப்பு நேற்று (22) பிற்பகல் இஸ்தானா மாளிகையில் இடம்பெற்றது.

இதன்போது சிங்கப்பூர் பிரதமரால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு வரவேற்பளிக்கப் பட்டது.

இருநாட்டு தலைவர்களுக்கும் இடையிலான சிநேகபூர்வ பேச்சுகளை தொடர்ந்து இருதரப்பு பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகின.

சிங்கப்பூர் மற்றும் இலங்கைக்கு இடையில் காணப்படும் ஒத்துழைப்புகளை மேலும் பலப்படுத்திக்கொள்வது தொடர்பில் தலைவர்கள் அவதானம் செலுத்தியிருந்ததோடு, பரந்த பொருளாதார ஒருமைப்பாட்டினை ஏற்படுத்திக்கொள்வது தொடர்பிலும் கலந்தாலோசிக்கப்பட்டது.

பெரிஸ் ஒப்பந்தத்தின் பிரிவு 6இற்கு அமைய, காபன் சீராக்கல் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் சிங்கப்பூர் பிரதமர் முன்னிலையில் கைச்சாத்திடப்பட்டது. சிங்கப்பூர் வர்த்தக மற்றும் கைத்தொழில் நிரந்தரச் செயலாளர்(அபிவிருத்தி) பெக் ஸ்வன் (Beh Swan Gin) மற்றும் சிங்கப்பூருக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் சசிகலா பிரேமவர்தன ஆகியோர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

பெரிஸ் ஒப்பந்தத்தின் பிரிவு 6க்கு அமைய, சர்வதேச காபன் வணிகத்தின் கீழ் பசுமை வீட்டு வாயு வெளியேற்றத்தை மட்டுப்படுத்தும் நோக்கில் இலாபகரமான முறையில் ஒத்துழைப்புடன் செயற்படுவதற்கான வாய்ப்பு கிடைக்கும். அதற்கமையவே இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

தேசிய பாதுகாப்பு தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக் குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, காலநிலை மாற்றம் தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேவர்தன, பொருளாதார அலுவல்கள் தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ஆர்.எச்.எஸ்.சமரதுங்க ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.

அதேநேரம், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் சிங்கப்பூர் நிலைபேறு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் கிரேஸ் பூ ஹாய் இயன் (Grace FU Hai yien) ஆகியோருக்கிடையிலான சந்திப்பொன்றும் நேற்றுமுன்தினம் (21) பிற்பகல் இடம்பெற்றிருந்தது.

## தோட்ட உரிமையாளர்கள்...

ஆகவே, இப்பிரச்சினைகள் குறித்து உரிய நடவடிக்கை எடுங்கள் என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன பெருந் தோட்டத்துறை அபிவிருத்தி அமைச்சர் ரமேஷ் பத்திரணவிடம் சபையில் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை (22) மாத்தளை ரத்வத்தை தோட்டத்தில் தற்காலிக குடியிருப்பு ஒன்றை அந்த தோட்டத்தின் உதவி முகாமையாளரை பலவந்தமான முறையில் அகற்றிய சம்பவம் தொடர்பில் விடயதானத்துக்கு பொறுப்பான அமைச்சர் ரமேஷ் பத்திரண விசேட உரையாற்றினார். அமைச்சரின் உரையை தொடர்ந்து சபாநாயகர் மேற்கண்டவாறு கோரிக்கையை முன்வைத்தார்.

சபாநாயகர் மேலும் கூறுகையில்,

இவ்வாறான பிரச்சினை எமது மாவட்டத்திலும் இடம்பெறுகின்றன. தோட்ட உரிமையாளர்கள் தன்னிச்சையான முறையில் செயற்படுகிறார்கள்.

தோட்ட மக்களை இருக்கவிடுவதில்லை. மின்சாரம், நீர் உள்ளிட்ட வசதிகளை பெற்றுக்கொடுப்பதற்கும் அவர்கள் தடைகளை ஏற்படுத்தியுள்ளார்கள்.

ஆகவே, எமது மாவட்டத்தில் உள்ள தோட்டப்புற மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது குறித்து உரிய நடவடிக்கை எடுங்கள் என்றார்.

## மாத்தளை தோட்டத்தில்...

நாசமாக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்துக்குச் சொந்தமான தேயிலைத் தோட்டத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதுடன், சம்பவத்துக்கு அமைச்சரே பொறுப்புக்கூற வேண்டும்.

அமைச்சர்கள் சம்பவ இடத்துக்குச் சென்று செயற்பட்டும் பயனில்லை.

நாட்டில் உள்ள பெருந்தோட்ட சமூகத்தை அரசாங்கம் எவ்வாறு நடத்துகிறது என்பதை இந்த சம்பவம் எடுத்துக் காட்டுகிறது. தோட்ட மக்களுக்கு நீதி வழங்குவதில் அரசாங்கம் வெற்றிகாணவில்லை.

பெருந்தோட்ட சமூகத்தினரின் கடின உழைப்பினால் நாட்டுக்கு டொலர்கள் கிடைக்கின்றன.

அம்மக்களின் சுகாதார மற்றும் கல்விப் பிரச்சினைகள் பல இருக்கின்றன. தோட்ட மக்களின் வாக்குகளைப் பெறும்போது அரசாங்க அமைச்சர்கள் முதலைக் கண்ணீர் வடிக்கின்றனர்.

மலையக பெருந்தோட்ட சமூகம் அனைத்து தரப்பிலிருந்தும் குறைந்த கரிசனைகளையே பெற்று வருகின்றன.

பெருந்தோட்ட மக்களுக்கு நீதி கிடைக்காத காரணத்தினாலேயே மக்கள் பிரதிநிதிகள் பாராளுமன்றத்துக்கு இதை கொண்டு வந்துள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குறிப்பிட்டார்.

## உதவி முகாமையாளர்...

கூட்டணி தலைவர் மனோ கணேசன் கேள்வி எழுப்பினார். மாத்தளை மாவட்ட எல்கடுவ பெருந்தோட்ட ரத்வத்தை தோட்ட விவகாரம் தொடர்பில் நேற்று பாராளுமன்றத்தில் ஏற்பட்ட அமளியின் போது, இடைமறித்து சபாநாயகரின் அனுமதியுடன் தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் மேலும் கூறியதாவது;

இங்கே அரசு தரப்பினர் தங்கள் அமைச்சர்தான் முதலில் அங்கே போனார் என்றும் நான் போகவில்லை என்றும் கூறுகிறீர்கள். நான், அன்று முல்லைத்தீவில் இருந்தேன். உங்கள் அமைச்சர் அங்கே போனது நல்லதுதான். ஆனாலும் அங்கே போய் சும்மா சண்டை போட்டு என்ன பயன்? எதுவுமே நடக்கவில்லை.

நான் 19ஆம் திகதி நள்ளிரவு ஒரு மணியளவில், முல்லைத்தீவில் இருந்து பெருந்தோட்டத்துறை அமைச்சர் ரமேஷ் பத்திரணவிடம் பேசினேன். மாத்தளை மாவட்ட எம்.பி.ரோஹிணி கவிரத்னவிடம் பேசினேன். கந்தேநுவர பொலிஸ் பொறுப்பதிகாரியிடம் பேசினேன். இதற்கு மேல் அங்கே போய் நானும் சண்டை போட்டிருக்க வேண்டும் என நீங்கள் கூறுகிறீர்களா?

நான் மனோ கணேசன். சிவாஜி கணேசன் இல்லை. ரஜனிகாந்த்தும் இல்லை. அஜித்குமாரும் இல்லை. அங்கே போய் சண்டை போட்டு அதை வீடியோவில் போட்டு நான் காட்டவில்லை. கடைசியில் அப்படியே சண்டை போட்டும் என்ன பயன்? ஒன்றும் இல்லை.

நானும் நமது மக்களிடம் அடித்தால் திருப்பி அடியுங்கள் என்று கூறினேன். அது சட்டப்படி நியாயமானது. இங்கே பிரதமர் இருக்கிறார். அவரது குணவர்த்தன வீட்டை எரித்தார்கள். அமைச்சர் பிரசன்ன வீடும் அமைச்சர் ரமேஷ் பத்திரண வீடும் எரிக்கப்பட்டன. அவை பிழையான காரியங்கள். ஆனால், அவை எரிக்கப்பட்டபோது உங்களிடமும் ஒரு கூட்டம் இருந்திருந்தால், நீங்கள் கட்டாயம் திருப்பி அடித்திருப்பீர்கள். அது நியாயம் தானே? தற்பாதுகாப்பு தானே?

நமது மக்கள் திருப்பி அடிக்கவில்லை. அதை பலவீனமாக நினைக்க வேண்டாம். அன்று இங்கே நாம் முழுநாள் விவாதம் நடத்தினோம். ஆளும்கட்சி, எதிர்க்கட்சி என்று எல்லோரும் ஆதரவாக பேசினீர்கள். அது நடந்து ஒரு வாரத்துக்குள் இந்த பிரச்சினை. அதில் நான் ஒன்று சொன்னேன். அமைச்சரே, அது உங்களுக்கு ஞாபகம் இருக்கும் என எண்ணுகிறேன். அன்றைய பிரிட்டிஷ் வெள்ளையர் ராஜ்யம் இன்று பெருந்தோட்ட கறுப்பு ராஜ்யமாக மாறி உள்ளது. அவ்வளவுதான் மாற்றம்.

இந்த பெருந்தோட்ட நிலங்கள், பெருந்தோட்ட நிறுவனங்களுக்கு சொந்தம் இல்லை. அவர்கள் அங்கே நீண்ட குத்தகையில்தான் இருக்கிறார்கள். நாம் இலங்கையர். எமது பிரஜாவுரிமை முழுமை அடையவில்லை. நாம் இலங்கைக்கு உள்ளேயே எமது பிரச்சினைகளை தீர்க்க முயல்கிறோம். தயவு செய்து இந்த பிரச்சினையை இலங்கை பிரச்சினையாக பாருங்கள்.

நாம் அரசியல் செய்வதாக இங்கே ஒரு அமைச்சர் குற்றஞ்சாட்டுகிறார். இது சட்ட பிரச்சினை என்கிறார். அவரது பேச்சையிட்டு நான் வருந்துகிறேன். இது எமது மக்களின் மனிதாபிமான பிரச்சினை.

நாம் அரசியல் செய்யவில்லை. நாம் 2015இல் ஆட்சிக்கு வந்து 04 வருடங்களில் பல காரியங்களை செய்துள்ளோம். அதற்கு முன் ஜெயவர்தன, பிரேமதாச, சந்திரிகா, ராஜபக்ஷ, விக்கிரமசிங்க அரசுகளில் பங்காளியாக 40 வருடங்கள் இருந்தவர்கள் செய்தவர்கள் செய்தவற்றை விட பலமடங்கு அதிகம் நாம் செய்துள்ளோம்.

## கைப்பற்றப்பட்ட 1000 வாள்கள்...

மூழ்கடிக்கப்பட்டு அழிக்கப்பட்டன. கடற்படையின் ரங்கல தளத்திலிருந்து சுரனிமல கப்பலில் சென்ற நீதித்துறை அதிகாரிகள், 1000 கடல் மைல் தொலைவிலும் 1000 அடி ஆழத்திலும் ஆழ்கடலில் இந்த ஆயுதக் குவியலை மூழ்கடித்துள்ளனர்.

கொழும்பு பிரதம நீதவான் பிரசன்ன அல்விஸின் உத்தரவுக்கமைய, மேலதிக நீதவான் பசன் அமரசிங்க, நீதிமன்ற பதிவாளர் மற்றும் நீதிமன்ற ஊழியர்களின் மேற்பார்வையின் கீழ் இந்த ஆயுதங்கள் மூழ்கடித்து அழித்துள்ளனர்.

இதன்மூலம் 1000 வாள்கள், கத்திகள், ஈட்டி உள்ளிட்ட கூரான ஆயுதங்கள், வெடிகுண்டு பாகங்கள், 08 துப்பாக்கிகள் மற்றும் 10 கல்கட்டஸ் ரக துப்பாக்கிகள் அழிக்கப்பட்டுள்ளன.

## இப்பொழுதே இப்படியென்றால்...

கிழக்கில் தொல்பொருள் சின்னங்களுக்கு ஏற்படும் சேதத்தை நினைத்தும் பார்க்க முடியாது என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவங்ச காரசாரமாக தெரிவித்துள்ளார். ஊடகமொன்றிடம் அவர் மேலும் கூறியுள்ளதாவது,

"1987இல் இந்திய-இலங்கை அமைதி ஒப்பந்தம் எனப்படும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு 13ஆவது திருத்தத்தை நிறைவேற்றி கூட்டாட்சி அரசை உருவாக்குவோம் என ராஜீவ் காந்தி பிரபாகரனுக்கு வாக்குறுதி அளித்தார் என்பது அனைவரும் அறிந்த உண்மை. கூட்டாட்சி அரசின் பிறப்பு என்பது ஈழ அரசின் கருவாகும். அதாவது, ஒரு கூட்டாட்சி மாகாணத்தை உருவாக்குவது ஒரு தனி நாட்டை உருவாக்குவதற்கான முழுமையான நிபந்தனையின் ஒரு பகுதியாகும். அதைத் தடுக்க வீரர்கள் தங்கள் உயிரைத் தியாகம் செய்து, தங்கள் கை, கால், கண், சதை, இரத்தத்தை அர்ப்பணித்தனர். அதாவது 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதன் மூலம் பிரிவினைவாதிகளின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படுவதைத் தடுப்பதாகும். போர் வீரர்கள் இறுதியாக பிரிவினைவாதிகளை இராணுவ ரீதியாக தோற்கடித்தனர். யுத்தம் மூலம் முடியாததை தட்டில் வைத்து வழங்குவதா? முன்னைய 07 ஜனாதிபதிகள் செய்யாததை தற்போதைய ஜனாதிபதி செய்ய முயல்கிறார் என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது.

அதன்படி, 30,000 போர்வீரர்கள் எதற்காக உயிர் தியாகம் செய்தார்கள்? மேலும் 29,000 பேர் கை, கால், கண், இரத்தம், சதை எதற்காக கொடுத்தார்கள்? கேள்விகள் கேட்கப்பட வேண்டும். போருக்கு தலைமை தாங்கிய முன்னாள் ஜனாதிபதி இது தொடர்பில் மௌனமாக இருப்பது வேதனையளிக்கிறது. எனவே, இந்த மாபெரும் துரோகத்துக்கு பங்களிக்க வேண்டாம் என அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களையும் கேட்டுக்கொள்கிறோம்.

குருந்தூர் ஆலயத்தின் கீழ், குளம், அதனைச் சுற்றி விவசாய நிலம் உள்ளது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் கூறியபோது, "குருந்தூர் ஆலயத்துக்கு 300 ஏக்கர் எதற்கு என தொல்பொருள் பணிப்பாளர் நாயகத்திடம் கேள்விகேட்டு, இந்த விளைநிலத்தை விவசாயம் செய்பவர்களுக்கு உடனடியாகக் கொடுங்கள்" என்று கூறும் அளவுக்கு ஜனாதிபதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நெருக்கமாக உள்ளார். அத்துடன், கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் குருந்தூர் விகாரையில் இந்து ஆலயம் அமைக்கும் கனவுக்கு ஜனாதிபதி உயிர் கொடுத்து வருகிறார் என குறிப்பிட்டுள்ளார்.

## லைக்காவின் பணத்தில்தான்...

நேற்று (22) பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நிலையியற் கட்டளைகள் 27 (2) இன் கீழ் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பந்துல குணவர்தன மேலும் தெரிவிக்கையில்,

இவ்விடயம் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு சந்தர்ப்பம் வழங்கிய அநுரகுமார திசாநாயக்கவுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்த செனல் எந்த நிறுவனத்துக்கும் விற்கப்படவில்லை அல்லது குத்தகைக்கு விடப்படவில்லை.

மாதத்துக்கு 150 மில்லியன் வாடகைக்கு வி.ஐ.எஸ். ப்ரோட்காஸ்டிங் நிறுவனத்துக்கு ஒளிபரப்பு நேரம் ஆறு மாதங்களுக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. நான் எந்த சட்டவிரோத இடமாற்றத்தையும் அறிவுறுத்தவில்லை. எனக்கு சட்டப்பூர்வ அதிகாரம் இருப்பதால் இது அங்கீகரிக்கப்பட்டது. கையெழுத்திட்ட ஒப்பந்தம் தாக்கல் செய்யப்படுகிறது. நீங்கள் இப்போது புரிந்துணர்வு ஒப்பந்தத்தை சரிபார்க்கலாம். இதனை நாம் அமைச்சரவையில் முன்வைத்த போது இதனை அமைச்சரவைக்கு கொண்டு வரக்கூடாது என ஜனாதிபதி தெரிவித்தார். வணிகம் செய்ய இயக்குநர் குழுவுக்கு உரிமை உண்டு.

தொலைக்காட்சி நிறுவனம் 2018 முதல் வங்குரோத்தாகி விட்டது. இந்த காலகட்டத்துக்கு 166 கோடி ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது. இந்த நிறுவனத்தால் கடைசியில் மின் கட்டணத்தை செலுத்த முடியவில்லை. தேசிய தொலைக்காட்சிக்கு கூட மின்வெட்டை நிறுத்த வழியில்லை. இந்தத் தொகையைப் பெற்றவுடன் நான் முதலில் செய்த வேலை மின்கட்டணத்தை செலுத்தியதுதான். இல்லை என்றால் இது நின்றுவிடும். மோசடி, ஊழல் நடந்தால் நீதிமன்றம் செல்லலாம். அப்படி நடந்தது நிரூபிக்கப்பட்டால் பதவி விலகுவேன் - என்றார் பந்துல.

## வறட்சியின் பாதிப்பு...

அத்துடன் நிலவும் வறட்சியான காலநிலை காரணமாக நிலத்தடி நீரின் சுவை, மணம் மற்றும் நிறத்தில் மாற்றம் காணப்படுமாயின் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை அலுவலகத்தில் பரிசோதிக்குமாறு குறித்த சபை பொதுமக்களிடம் வலியுறுத்தியுள்ளது.

இந்நிலையில், அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

நாட்டில் நிலவும் கடும் வறட்சியால் இரத்தினபுரி, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, புத்தளம், குருணாகல், யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, பதுளை, மொனராகலை, ஹம்பாந்தோட்டை, கம்பஹா, மாத்தளை, பொலன்னறுவை மற்றும் அநுராதபுரம் உள்ளிட்ட 17 மாவட்டங்களில் 72 ஆயிரத்து 100 குடும்பங்களைச் சேர்ந்த 2 இலட்சத்து 48 ஆயிரத்து 531 பேர் குடிநீரின்றி தவித்து வருகின்றனர்.

இதேவேளை, யாழ்ப்பாணம், இரத்தினபுரி, மட்டக்களப்பு, அம்பாறை, குருணாகல், அம்பாந்தோட்டை மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களில் அதிக எண்ணிக்கையிலானோர் குடிநீரின்றி பாதிக்கப்பட்டுள்ளனர்.

அந்தவகையில், யாழ்ப்பாணத்தில் 21 ஆயிரத்து 999 குடும்பங்களைச் சேர்ந்த 70 ஆயிரத்து 238 பேரும் இரத்தினபுரியில் 12 ஆயிரத்து 201 குடும்பங்களைச் சேர்ந்த 49ஆயிரத்து 288 பேரும் மட்டக்களப்பில் 8 ஆயிரத்து 892 குடும்பங்களைச் சேர்ந்த 29 ஆயிரத்து 508 பேரும் அம்பாறையில் 7 ஆயிரத்து 739 குடும்பங்களைச் சேர்ந்த 25ஆயிரத்து 891 பேரும் குருணாகலில் 6 ஆயிரத்து 190 குடும்பங்களைச் சேர்ந்த 20ஆயிரத்து 610 பேரும் ஹம்பந்தோட்டையில் 3 ஆயிரத்து 867 குடும்பங்களைச் சேர்ந்த 17 ஆயிரத்து 372 பேரும் மற்றும் மொனராகலையில் 4 ஆயிரத்து 869 குடும்பங்களைச் சேர்ந்த 14 ஆயிரத்து 641 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, திருகோணமலையில் 7 ஆயிரத்து 870 பேரும் புத்தளத்தில் 2 ஆயிரத்து 321 பேரும் வவுனியாவில் ஆயிரத்து 120 பேரும் மன்னாரில் 3 ஆயிரத்து 244 பேரும் முல்லைத்தீவில் 835 பேரும் பதுளையில் 656 பேரும் கம்பஹாவில் 2 ஆயிரத்து 890 பேரும் மாத்தளையில் ஆயிரத்து 215 பேரும் பொலன்னறுவையில் 150 பேரும் அநுராதபுரத்தில் 14 பேரும் குடிநீரின்றி பெரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சிறுவர்கள் தொடர்பில் அவதானம் தேவை

இந்நிலையில், சிறுவர்கள் வெளிக்கள செயற்பாடுகளில் ஈடுபடும்போது அதிகளவில் வியர்வை வெளியேறுவதால் நீர்ச்சத்து குறைவடையும் வாய்ப்பு காணப்படுவதாக லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் சிறுவர் நோய்கள் தொடர்பான விசேட வைத்தியர் தீபால் பெரேரா சுட்டிக்காட்டியுள்ளதுடன் நீர், இளநீர், எலுமிச்சை, தோடம்பழம் மற்றும் மாதுளம்பழச் சாறு, ஜீவனி போன்ற நீராகாரங்களை சிறுவர்களுக்கு அதிகமாக வழங்குமாறு அவர் அறிவுறுத்தியுள்ளார்.

## மாத்தளை அதிகாரியை...

உடனடியாக கைதுசெய்யுமாறும் தெரிவித்து தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட எதிர்க்கட்சியினர் நேற்று (22) சபையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

உரிமைகளை பறிக்க வேண்டாம் என்றும், குறித்த அதிகாரியை கைதுசெய்யவேண்டும் என்றும் கோரி எம்.பிக்கள் இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்ததுடன் அரசாங்கம் அதிகாரிகளுக்கா அல்லது மக்களுக்கா என்று குறிப்பிடப்பட்ட பதாதைகளை ஏந்தி சபையின் மத்தியில் அமர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

பாராளுமன்ற அமர்வுகள் ஆரம்பமாகியதன் பின்னர் இடம்பெற்ற, வாய்மூல விடைக்கான நேரத்தின்போதே இவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தார்கள்.

பாராளுமன்ற உறுப்பினர்களான வடிவேல் சுரேஷ், வேலுகுமார், உதயகுமார், வி.இராதாகிருஷ்ணன், சிவஞானம் சிறிதரன், காவிந்த ஜயவர்தன உள்ளிட்ட பலர் சபைக்கு நடுவில் வந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்ததுடன் எதிர்க் கட்சி தலைவர் சஜித் பிரேமதாச உள்ளிட்ட எதிர்க் கட்சி உறுப்பினர்களும் இந்த ஆர்ப்பாட்டத்துக்கு ஆதரவளித்திருந்தார்கள்.

இதன் காரணமாக, நேற்றைய சபை அமர்வுகள் ஆரம்பமானபோது அமைதியின்மையும் நிலவியது. குறுகிய நேரம் சபை செயற்பாடுகள் தடைப்பட்டிருந்ததையும் அவதானிக்கக்கூடியதாக இருந்தது. இதன்போது கருத்து தெரிவித்த எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, பெருந்தோட்ட துறைக்கு பொறுப்பான அமைச்சருடன் கலந்துரையாடி தீர்வைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று தெரிவித்ததுடன் குறித்த தோட்டப்புறம் அரசாங்கத்துக்கு சொந்தமானது என்று பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்திருந் தார். இந்தச் சம்பவம் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்கள் பின்வருமாறு உரையாற்றியிருந் தார்கள்,

### வடிவேல் சுரேஷ் எம்.பி.

பெருந்தோட்ட மக்களின் பிரச்சினைகள் குறித்து பேசுவதற்கு வாய்ப்புத் தாருங்கள். மாத்தளை, ரத்வத்தை தோட்டப்பகுதியிலிருந்து 14 பேர்கொண்ட மூன்று குடும்பங்களை அடாவடித்தனமாக வெளியேற்றியிருக்கிறார்கள். சமைத்த உணவைக்கூட வீணடித்துள்ளார்கள். சிறிய குழந்தைகள் என்று கூட பார்க்காமல் அவர்களை அங்கிருந்து நீக்கியுள்ளார்கள். ஆனால், குறித்த அதிகாரியை இன்னும் அங்கிருந்து நீக்கவில்லை. அந்த மக்கள் இந்த நாட்டுக்கு வந்து 200 வருடங்கள் நிறைவடைகின்றன. இந்தியாவுக்கு சென்று சகல உதவிகளையும் பெற்றுக் கொள்கிறார்கள். ஆனால் அந்த மக்களை பற்றி சிந்திப்பதில்லை. அவர்களுக்கு எதிரான குற்றங்களையே செய்கிறார்கள். அவரை இன்னும் கைது செய்யவும் நடவடிக்கை எடுக்கவில்லை. இவ்வாறு மக்களை பலவந்தமாக நீக்குவதற்கு சட்டத்தில் இடமிருக்கிறதா, எதற்காக இவ்வாறு அநீதி இழைக்கப்படுகிறது, பெருந்தோட்ட மக்களுக்கு வேறு சட்டமா அமுல்படுத்தப்படுகிறது?

### வி.இராதாகிருஷ்ணன் எம்.பி.

ரத்வத்தை தோட்டத்தில் 14 பேர் கொண்ட மூன்று குடும்பங்களை அங்கிருந்து நீக்குவதற்கு அந்த தோட்டத்தின் அதிகாரி நடவடிக்கை எடுத்திருந்தார். எந்தவொரு ஏற்பாடுமின்றி, முன்னறிவித்தலும் இன்றியே அவர் இவ்வாறு செய்துள்ளார். நாட்டில் சட்டம் என்றவொன்று இருக்கிறதா?

### மனோ கணேசன் எம்.பி.

அரசுக்கு சொந்தமான எல்கடுவ, ரத்வத்தை என்ற தோட்டத்தில் கடந்த 19ஆம் திகதி இடம்பெற்ற அநீதியை முழு உலகமும் பார்த்தது. இது எமது மக்களுக்கான அநீதி மாத்திரமல்ல, முழு நாட்டு மக்களுக்கும் இலுக்கை ஏற்படுத்தியுள்ளது. அந்த அதிகாரி அடாவடித்தனமாகவே செயற்பட்டிருந்தார். அவரை அங்கிருந்து நீக்கவேண்டும்.

யாரோவொரு பாராளுமன்ற உறுப்பினர் அங்கு சென்றிருந்தாராம். எனக்கும் அங்கு சென்றிருக்க முடியும் என்று தெரிவித்து கடுமையான எதிர்ப்பையும் வெளியிட்டிருந்தார்.

### இதனை தொடர்ந்து கருத்து தெரிவித்த சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன,

இதுபோன்ற சம்பவங்கள் தென் மாகாணத்திலும் இடம்பெறுகிறது. அந்தப் பிரச்சினைகள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வருகிறோம். ஆனால், இதுதொடர்பில் பேசவோ ஆர்ப்பாட்டம் செய்யவோ இல்லை. எனவே, இதுதொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து சம்பந்தப்பட்ட பெருந்தோட்ட அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### அமைச்சர் ஜீவன் தொண்டமான்

இந்த மக்கள் இருக்கும் இடங்களில் உரிமையை பெற்றுக்கொடுப்பதனூடாகவே இந்த பிரச்சினைக்கு தீர்வைப் பெற்றுக்கொடுக்க முடியும். இந்தச் சம்பவம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் பிரதமர் தினேஷ் குணவர்தனவுக்கும் அறிவித்திருக்கிறோம். அமைச்சர் ரமேஷ் பத்திரணவும் இதுதொடர்பில் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளார்.

### ஆளுங்கட்சி பிரதம கொறடா அமைச்சர் பிரசன்ன ரணதுங்க

இந்தச் சம்பவத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவரும் சம்பந்தப்பட்டுள்ளதாக தகவல் கிடைத்துள்ளது. அதனால், முழுமையான விசாரணைகளை முன்னெடுத்து சம்பந்தப்பட்ட சகலருக்கும் எதிராக சட்டத்தை அமுல்படுத்த வேண்டும்.

### அமைச்சர் ரமேஷ் பத்திரண

இந்தச் சம்பவத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு எனது கவலையை தெரிவித்துக் கொள்கிறேன்.

இடம்பெறக்கூடாத சம்பவமே இடம் பெற்றுள்ளது. தேவையற்ற முறையில் நிர்மாணங்களை மேற்கொண்டதாக தெரிவித்து சம்பந்தப்பட்ட குடும்பங்களை அகற்றுவதற்காக அந்த தோட்டத்தைச் சேர்ந்த முகாமையாளர் நேரடியாக சம்பந்தப்பட்டுள்ளார். இது இடம்பெற்றிருக்க கூடாது.

அதனால், அதுதொடர்பில் சட்டரீதியான நரவிசாரணைகளும் இடம்பெற்று வருகின்றன.

சம்பவம் இடம்பெற்று முதலாவது 24 மணிநேரத்துக்குள் அமைச்சர் ஜீவன் தொண்டமான் உள்ளிட்ட அதிகாரிகள் அங்கு சென்றிருந்தனர்.

இதன் காரணமாகவே அந்த மக்களுக்கு 10 ஏக்கர் காணியை வழங்க வேண்டும் என்றும் அறிவிக்கிறோம். இந்தமுறையில் சிக்கல் இருக்கிறது என்பதை ஏற்றுக்கொள்கிறோம். அதில் மாற்றம் ஏற்பட வேண்டும் என்பதே எங்களின் நிலைப்பாடுமாகும் என்று சுட்டிக்காட்டினார்.

# காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கலில் தாமதம்

## ஆராய்ந்து நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் ஹரின் ஆலோசனை





காணி உரிமையாளர்களுக்கு உறுதிப்பத்திரங்கள் வழங்குவதில் ஏற்பட்டுள்ள தாமதம் தொடர்பில் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ ஆலோசனை வழங்கியுள்ளார்.

சுற்றுலா மற்றும் காணி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தலைமையில் அண்மையில் (09) கூடியது. இதன்போதே அமைச்சர் மேற்கண்ட ஆலோசனையை முன்வைத்தார்.

காணி உரிமையாளர்களுக்கு உறுதிப்பத்திரங்கள் வழங்கலில் 50 வருடங்களுக்கும் மேலாக தாமதமடைவது தொடர்பில் ஆணைக்குழுவின் அதிகாரிகளிடம் இதன்போது வினவப்பட்டது.

இக் காணிகள் பல்வேறு தரப்பினருக்கும் வழங்கப்பட்டுள்ளதாகவும் தற்பொழுது அவர்களின் குழந்தைகள் மற்றும் பேரக்குழந்தைகளினால் இக் காணிகள் பயன்படுத்தப்பட்டு வருவதாகவும் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் அதிகாரிகள் இதன்போது தெரிவித்தனர். இதனால் ஆவணங்களை வழங்குவதில் சிக்கல் எழுந்துள்ளதாக அந்த அதிகாரிகள் தெரிவித்ததுடன் தற்பொழுது அந்த நடவடிக்கைகள் முறைமைப்படுத்தப்பட்டு வருவதாகவும் கூறினர்.

இதன்போது அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ குறிப்பிடுகையில், காணி உரிமையாளர்களுக்கு உறுதிப்பத்திரங்கள் வழங்கலில் ஏற்பட்டுள்ள தாமதம் தொடர்பில் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். தற்பொழுது காணப்படும் நடவடிக்கைகளை விட விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டியது முக்கியமானது. அதற்கமைய, சிக்கல்களைத் தீர்ப்பதற்கு முன்னோடித் திட்டமாகக் கண்டி மாவட்டத்தில் ஆரம்பித்து படிப்படியாக ஏனைய மாவட்டங்களுக்கும் சென்று உறுதிப்பத்திரங்களை வழங்குவதற்கான வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்க வேண்டும் என்றார்.

பலாங்கொடை, தமன பிரதேசத்தில் கருங்கல் உடைக்கும் தொழிலில் ஈடுபடும் சுமார் 7000 பேருக்கு புதிய அனுமதிப்பத்திரம் வழங்குவது பற்றி முன்வைக்கப்பட்ட கோரிக்கை தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், புதிய சுற்றுலாத் தலங்களை அடையாளம் காண்பது மற்றும் மேம்படுத்துவதற்கு ஒவ்வொரு சுற்றுலா பிரதேசத்திலும் பாராளுமன்ற உறுப்பினர்களின் தலைமையில் இடம்பெற்ற அனைத்துக் குழுக்களினதும் முன்னேற்றம், தெனியாய சுற்றுச்சூழல் சுற்றுலா வலயத்தின் அபிவிருத்தியின் முன்னேற்றம் என்பன தொடர்பிலும் இதன்போது ஆராயப்பட்டது.

இக் கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர் கீதா சமன்மலி குமாரசிங்க, பாராளுமன்ற உறுப்பினர்களான கபில அத்துகோரல, செல்வம் அடைக்கலநாதன் உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் கலந்துகொண்டனர்.

# நீதிமன்றத்துக்கு அழுத்தம் பிரயோகிக்கவில்லை; சட்ட ஆலோசனைகளுக்கமையவே செயற்பட்டேன்

## சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவிப்பு



நீதிமன்றத்துக்கு ஒருபோதும் அழுத்தம் பிரயோகிக்கவில்லை. சட்ட ஆலோசனைகளைப் பெற்றே தேசிய கடன் மறுசீரமைப்பு தொடர்பான அறிவிப்பை சபையில் முன்வைத்தேன். ஆகவே அறிவிப்பு குறித்து எவரும் உயர்நீதிமன்றத்தை நாடலாம் என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

தேசிய கடன் மறுசீரமைப்பு தொடர்பில் சபாநாயகர் சபையில் விடுத்த அறிவிப்பு நீதிமன்றத்துக்கும் நீதிமன்றத்தின் செயற்பாடுகளுக்கும் அழுத்தம் பிரயோகித்துள்ளது. தேசிய கடன் மறுசீரமைப்பு யோசனை சட்டமூலமல்ல. ஆகவே அதனை ஏன் உயர் நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்த முடியாது என பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்கள் சபாநாயகரை நோக்கி நேற்று (22)பாராளுமன்றத்தில் கேள்வியெழுப்பினர். இதற்கு பதிலளித்த போதே சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை முன்வைத்து உரையாற்றிய தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவங்ச, தேசிய கடன்களை மறுசீரமைக்கும் யோசனையை அரசாங்கம் பாராளுமன்றத்துக்குக் கொண்டு வந்து மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றியது.

அது சட்டமூலமல்ல, தேசிய கடன் மறுசீரமைக்க எடுத்த தீர்மானத்தால் ஊழியர் சேமலாப நிதியத்துக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது என தொழிற்சங்கத்தினர் உயர்நீதிமன்றத்தை நாடினார்கள்.

இவ்விடயம் குறித்து பாராளுமன்றத்தில் ஆளும் தரப்பினர் கேள்வியெழுப்பியபோது பாராளுமன்றத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்த முடியாது என நீங்கள் (சபாநாயகர்) சபையில் குறிப்பிட்டீர்கள்.

நிறைவேற்றப்பட்டது சட்டமூலம் என்றால் நீங்கள் (சபாநாயகர்) கூறுவது சரி. ஆனால் யோசனை ஒன்றை நிறைவேற்றி விட்டு அதை சட்டம் என்று குறிப்பிட முடியாது.

அரசாங்கத்தினால் கொண்டு வரப்பட்டு பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட யோசனையை நீதிமன்றத்தில் ஏன் சவாலுக் குட்படுத்த முடியாது. தேசிய கடன் மறுசீரமைப்பு, ஊழியர் சேமலாப நிதியத்துக்கு ஏற்படும் பாதிப்பை ஏன் உயர்நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்த முடியாது? என சபாநாயகரிடம் கேள்வியெழுப்பினார்.

இதற்கு பதிலளித்த சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, இந்த விடயம் தொடர்பில் கடந்த பாராளுமன்ற அமர்வில் கேள்வி எழுப்பினீர்கள், நான் பதிலளித்தேன். உரிய சட்ட ஆலோசனைகளுக்கு அமையவே நான் அந்த அறிவிப்பை பாராளுமன்றத்தில் விடுத்தேன். ஆகவே இவ்விடயம் தொடர்பில் தொடர்ந்து பேசுவது அவசியமற்றது என்றார்.

மீண்டும் எழுந்து உரையாற்றிய தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவங்ச, ஆளும் தரப்பினர் ஒரு யோசனையை கொண்டு வந்தால் அதை பாராளுமன்றத்தில் சவாலுக்குட்படுத்த முடியாதா? என்று குறிப்பிடுகின்றீர்கள் என்றார்.

இதற்கு பதிலளித்த சபாநாயகர் தேசிய கடன் மறுசீரமைப்பு விவகாரத்தில் எவரும் உயர்நீதிமன்றத்தை நாடலாம். அதற்கு தடையில்லை என்றார்.

இதன்போது எழுந்து உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர, தேசிய கடன் மறுசீரமைப்பு தொடர்பில் நீங்கள் (சபாநாயகர்) சபைக்கு விடுத்த அறிவிப்பை தொடர்ந்து ஊழியர் சேமலாப நிதியம் தொடர்பில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவிருந்த வழக்குகளை உயர் நீதிமன்றம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளாமல் இரத்துச் செய்தது.

பாராளுமன்றத்தில் நீங்கள் (சபாநாயகர்) விடுத்த அறிவிப்பு நீதிமன்றத்துக்கும் நீதிமன்றத் தின் செயற்பாட்டுக்கும் அழுத்தம் பிரயோகித்துள்ளது.

பாராளுமன்றத்துக்கும் நீதிமன்றத்துக்கும் இடையிலான இடைவெளி தீவிரமடைந்துள்ளது என்றார்.

இதற்கு பதிலளித்த சபாநாயகர் நீதிமன்றத்துக்கும் நீதிமன்றத்தின் செயற்பாட்டுக்கும் அழுத்தம் பிரயோகிக்கவில்லை. இவ்விடயம் குறித்து நீங்கள் நீதிமன்றத்தை நாடுங்கள் என்றார்.

# சட்டவிரோதமாக துப்பாக்கி வைத்திருந்த ஒருவர் கைது

*அநுராதபுரம் நிருபர்*

சட்டவிரோதமான முறையில் துப்பாக்கியொன்றை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பதவிய பொலிஸார் தெரிவித்தனர்.

பதவிய பொலிஸாருக்குக் கிடைத்த தகவலொன்றுக்கமைய கடந்த 21ஆம் திகதி மாலை போகஹவெவ பகுதியில் பொலிஸார் நடத்திய சுற்றிவளைப் பின்போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டதாகவும் அவரிடமிருந்து துப்பாக்கியொன்று மீட்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. கைது செய்யப்பட்டவர் 23 வயதுடைய பதவிய, போகஹவெவ பகுதியைச் சேர்ந்தவர் என்பது ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

சந்தேக நபர் துப்பாக்கியை பயன்படுத்தி குற்றச்செயல்களில் ஈடுபட்டுள்ளாரா என்பதை அறிந்து கொள்வதற்காக குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் பல கோணங்களிலும் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## தினசரி பலாபலன்கள்

**சோபகிருது வருடம் ஆவணி மாதம் 06ஆம் நாள் புதன்கிழமை**

**மேஷம்:** நீங்கள் எதிர்பார்த்த பணம் உங்கள் கையில் கிடைக்கப்போகிறது. காதலில் வெற்றி.

**ரிஷபம்:** தாயால் அல்லது தாய் உறவுகளால் அதிக இலாபங்கள். நீண்டநாள் வழக்குகள் நிறைவடையப் போகின்றது.

**மிதுனம்:** புத்திரர் செயற்பாடுகளால் கவலையடைவீர்கள். தொழில் வகையில் குறைக்கேட்க வேண்டிவரும்.

**கடகம்:** தாயால் கவலைகள் ஏற்படலாம். நீங்கள் பயன்படுத்தும் பொருட்கள் உங்கள் கையால் பழுதடையும்.

**கன்னி:** மனத்துணிவுடன் அனைத்து சவால்களையும் முறியடிப்பீர்கள். நண்பர்களால் மன நிறைவு கொள்வீர்கள்.

**சிம்மம்:** தேவையற்ற பேச்சுகள் வீண் வம்புகளை ஏற்படுத்தும். நம்பியவர்களால் ஏமாற்றப்படுவீர்கள்.

**துலாம்:** குடும்ப உறவில் மகிழ்ச்சி கூத்தாடும். புகழ், செல்வம், செல்வாக்கு அனைத்தும் சிறப்புறும்.

**விருச்சிகம்:** தேவையற்ற பயணங்களால் தொல்லைகளைச் சந்திப்பீர்கள். வேலையிடத்தில் அவமானம் ஏற்படலாம்.

**தனுசு:** மூத்த சகோதரரால் அதிக நன்மைகளைப் பெறுவீர்கள். அனைத்துவித இலாபங்களையும் பெறுவீர்கள்.

**மகரம்:** தொழில் வகையில் நீங்கள் எதிர்பார்த்த வரப்பிரசாதங்களை பெறுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

**கும்பம்:** சகோதர வர்க்கத்தார்களுடன் வீண் பிரச்சினைகள் வரலாம். தந்தையாருடன் விதண்டா வாதம் வேண்டாம்.

**மீனம்:** தேவையற்ற மன அழுத்தத்தால் உடல் நலத்தை கெடுத்துக்கொள்வீர்கள். எதற்கும் அவசரம் வேண்டாம்.

**திதி:** சப்தமி பி.இ.3.31 வரை பின் அஷ்டமி

**நட்சத்திரம்:** சுவாதி மு.ப.8.08 வரை பின் விசாகம்

**யோகம்:** மரண யோகம் மு.ப.8.08 வரை பின் சித்த யோகம்

**வார சூலை:** வடக்கு திசை நோக்கி சுபகாரியம் கூடாது

**நல்லநேரம்:** மு.ப. 9.07– 10.07 மணிவரை

**ராகுகாலம்:** 12.07 – 1.37 மணிவரை

**எமகண்டம் :** 7.37 – 9.07 மணிவரை

**குளிகை :** 10.37 – 12.07 மணிவரை

**சந்திராஷ்டமம்:** மீன ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும்

**தனஅதிஷ்டம்:** திருவாதிரை, சுவாதி, சதயம் (பிறந்தவர்களுக்கு)

**விசேட தினம்:** ------

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739

# முல்லைத்தீவு நீதவான் மனநிலை பாதிக்கப்பட்டவர்

## பாராளுமன்றத்தில் சரத் வீரசேகர தெரிவிப்பு



குருந்து விகாரையில் பொங்கல் வைத்து வழிபட முல்லைத்தீவு நீதவான் அனுமதி வழங்கியது தவறான உத்தரவாகும். தொலைநோக்கற்ற இதுபோன்ற உத்தரவுகளினால் நாட்டில் இனவாத மோதல்கள் ஏற்பட்டால் அதற்கான பொறுப்பை நீதவானும் தமிழ் அரசியல்வாதிகளும் ஏற்கவேண்டும். முல்லைத்தீவு நீதவான் மனநலம் பாதிக்கப்பட்டவர் என்பதை அவரின் மனைவியே உறுதிப்படுத்தியுள்ளார். அவ்வாறு அவர் மனநிலை பாதிக்கப்பட்டவர் என்றால், அவருக்கு நீதவானாக இருக்கும் தகுதியில்லை. எனவே, உடனடியாக அவரை அங்கிருந்து நீக்கி விட்டு புதிய நீதவான் ஒருவரை நியமிக்க நீதி அமைச்சரும் நீதிச்சேவை ஆணைக் குழுவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர நேற்று (22) சபையில் கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற சுற்றுலாத்துறை மீதான விவாதத்தின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

தொல்பொருள் ஆதாரங்கள் எமது உரிமைகளாகும். இந்த உரிமைகளே எமது தேசிய அடையாளங்களாகும். அவற்றை அழித்து தேசிய அடையாளத்தை திரிவுபடுத்த முயற்சிக்கிறார்கள் என்றால் அது தேசத்துரோகமாகும்.

குருந்து பௌத்த விகாரை கட்டடத் தொகுதியில் பொங்கல் வைத்து வழிபடுவதற்கு முல்லைத்தீவு நீதவான் அனுமதி வழங்கியிருந்தார். இது, வெள்ளவத்தை சிவன் கோவிலில் பிரித் பாராயணம் செய்வதற்கு கல்கிஸை நீதவான் உத்தவிட்டது போன்ற செயற்பாடாகும். முல்லைத்தீவு நீதவான் தொல்பொருள் கட்டளைச் சட்டத்தை மீறும் வகையிலேயே இந்த உத்தரவை வழங்கியுள்ளார். தொல்பொருள் கட்டளைச் சட்டத்தில் அது பௌத்த தொல்பொருள் ஆதாரங்களைக் கொண்ட இடமாக இருந்தால் பௌத்த மக்களின் மனதை கஷ்டப்படுத்தும் வகையில் அல்லது அவர்களை கோபப்படுத்தும் வகையில் ஏதாவது இடம்பெறுமாக இருந்தால் அது தண்டனைக்குரிய செயற்பாடாகவே கருதப்படும்.

சட்டம் இருக்கும்போதே இதுபோன்ற தவறான உத்தரவை பிறப்பித்தது பிரச்சினைக்குரிய விடயமாகும். தூரநோக்கின்றி முன்னெடுக்கப்படும் இதுபோன்ற செயற்பாடுகளினால், பிரச்சினைகள் மேலும் வலுவடைந்தால் இனவாதப் பிரச்சினை உருவாவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. அவ்வாறு இனவாத மோதல்கள் உருவாகினால் அதற்கான முழுப் பொறுப்பையும் குறித்த நீதவான் உள்ளிட்ட தமிழ் அரசியல்வாதிகளே ஏற்கவேண்டும்.

குறித்த நீதவான் மனநலம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. அவரின் மனைவியே இத்தகவலை வெளியிட்டுள்ளார். குறித்த நீதவான் தனது வீட்டிலுள்ள பொருட்கள் திருடப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். இந்த முறைப்பாடு தொடர்பான விசாரணைகளின் போது அவரின் மனைவி பொலிஸாரிடம், அவர் மனநலம் பாதிக்கப்பட்டுள்ளதால் தனது கணவரை மனநல வைத்தியர் ஒருவரிடம் அழைத்துச் செல்வதாக அறிவித்திருக்கிறார்.

அவ்வாறு அவர் உண்மையில் மனநலம் பாதிக்கப்பட்டவர் என்றால் அவருக்கு சிகிச்சை வழங்கும் எதிர்பார்ப்பிலேயே நாங்கள் இருக்கிறோம். இருந்தபோதும், இவ்வாறான குறைபாடுள்ள ஒருவருக்கு நீதவானாக கடமையாற்றும் தகுதி இருக்கிறதா என்பதே பிரச்சினையாகும். எனவே, அவர் சரியான தீர்மானமொன்றை எடுக்க முடியாத நிலைமையிலேயே இருக்கிறார். ஆகவே, இவரை அந்த நீதவான் நீதிமன்றத்திலிருந்து மாற்றி வேறொரு நபரை நியமிக்குமாறு நீதி அமைச்சர், நீதிச்சேவை ஆணைக்குழுவிடமும் வேண்டுகோள் விடுக்கிறோம் என்றார்.

# நாட்டில் இவ்வருடம் இதுவரை 60 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள்

## பொலிஸார் வெளியிட்ட அதிர்ச்சித் தகவல்

*நா.தினுஷா*

போதைப்பொருள் வியாபாரிகளுக்கு இடையிலான முரண்பாடுகளினால் இடம்பெறும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாகவும் இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் இடம்பெற்ற 60 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் 36 பேர் வரையில் உயிரிழந்துள்ளதாகவும் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

மேலும், தனிப்பட்ட பிரச்சினைகளினால் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களிலும் சிலர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

பொலிஸ் தலைமையகத்தில் நேற்று (22) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில், இரத்மலானை பிரதேசத்தில் நேற்று (நேற்று முன்தினம்) இரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் கோழி இறைச்சி வியாபாரியொருவர் உயிரிழந்திருந்தார். இரத்மலானை பிரதேசத்தைச் சேர்ந்த 40 வயதுடைய நபரொருவரே இவ்வாறு உயிரிழந்திருந்தார். மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே இந்த துப்பாக்கிச் சூட்டை நடத்தியிருந்ததாக தகவல் கிடைத்துள்ளது. குறித்த இறைச்சி விற்பனை நிலையத்துக்குள் வைத்தே இந்த துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப் பட்ட போதிலும் சந்தேகநபர்கள்யார் என்பது இதுவரையில அடையாளம் காணப்படவில்லை. இந்த கொலைக்கான காரணமும் இதுவரையில் உறுதியாக வில்லை. தொடர் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. இதற்காக பல்வேறு குழுக்களும் நியமிக்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவத்தில், உயிரிழந்த நபரின் இதற்கு முன்னர் செய்த குற்றங்கள் தொடர்பில் பொலிஸாரிடம் எந்த முறைப்பாடும் கிடைத்திருக்கவில்லை. ஒருவேளை புலனாய்வுப் பிரிவினரிடம் இவர் தகவல்கள் இருக்கின்றனவா என்பது தொடர்பில் ஆய்வு செய்யவேண்டும்.

என்னிடம் இருக்கும் அறிக்கைகளுக்கமைய, இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் 60 வரையான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இந்தச் சம்பவங்களில் 36 பேர் வரையில் உயிரிழந்திருக்கிறார்கள். 28 பேர் காயங்களுக்குள்ளாகியுள்ளார்கள். காயம் அல்லது உயிரிழப்புக்கள் எதுவும் இடம்பெறாத துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் 06 இடம்பெற்றுள்ளன. கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது, சமமான சம்பவங்களே இதுவரையில் பதிவாகியுள்ளன. காணிப் பிரச்சினை, குடும்பப் பிரச்சினை போன்ற தனிப்பட்ட பிரச்சினைகளுக்காக இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் இறந்தவர்களின் எண்ணிக்கையும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன என்றார்.



தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2023 ஒகஸ்ட் 23ஆம் திகதி, புதன்கிழமை

## வறட்சியை கவனிக்க வேண்டும் அரசு!

கடும் வறட்சி காரணமாக குடிநீரின்றித் தவிப்பவர்களின் எண்ணிக்கை இரண்டு இலட்சத்தைத் தாண்டியுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவிக்கின்றது.

இதன்படி 17 மாவட்டங்களில் 72,100 குடும்பங்களைச் சேர்ந்த 2,48,531 பேர் குடிநீரின்றி பாதிக்கப்பட்டுள்ளதாக அந்த நிலையம் குறிப்பிட்டுள்ளது.

கடும் வறட்சி காரணமாக வடக்கு, கிழக்கு மாகாணங்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் வடக்கு மாகாணத்தில் 23,643 குடும்பங்களைச் சேர்ந்த 75,437 பேரும், கிழக்கு மாகாணத்தில் 18,992 குடும்பங்களைச் சேர்ந்த 63,269 பேரும் பாதிக்கப்பட்டுள்ளதாக அந்த நிலையம் தெரிவித்துள்ளது.

கடும் வறட்சி காரணமாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 21,999 குடும்பங்களைச் சேர்ந்த 70, 238 பேரும், வவுனியா மாவட்டத்தில் 450 குடும்பங்களைச் சேர்ந்த 1,120 பேரும், மன்னார் மாவட்டத்தில் 952 குடும்பங்களைச் சேர்ந்த 3,244 பேரும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 242 குடும்பங்களைச் சேர்ந்த 832 பேரும், இரத்தினபுரி மாவட்டத்தில் 12,201 குடும்பங்களைச் சேர்ந்த 49,288 பேரும், திருகோணமலை மாவட்டத்தில் 2,361 குடும்பங்களைச் சேர்ந்த 7,870 பேரும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 8,892 குடும்பங்களைச் சேர்ந்த 29, 508 பேரும், அம்பாறை மாவட்டத்தில் 7,739 குடும்பங்களைச் சேர்ந்த 25,891 பேரும், புத்தளம் மாவட்டத்தில் 786 குடும்பங்களைச் சேர்ந்த 2,321 பேரும், குருநாகல் மாவட்டத்தில் 6,190 குடும்பங்களைச் சேர்ந்த 20,610 பேரும், பதுளை மாவட்டத்தில் 329 குடும்பங்களைச் சேர்ந்த 1,324 பேரும், மொனராகலை மாவட்டத்தில் 140 குடும்பங்களைச் சேர்ந்த 485 பேரும், ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் 3,867 குடும்பங்களைச் சேர்ந்த 17,372பேரும், கம்பஹா மாவட்டத்தில் 922 குடும்பங்களைச் சேர்ந்த 2,890 பேரும், மாத்தளை மாவட்டத்தில் 263 குடும்பங்களைச் சேர்ந்த 1,215 பேரும் பொலன்னறுவை மாவட்டத்தில் 35 குடும்பங்களைச் சேர்ந்த 150 பேரும், அநுராதபுரம் மாவட்டதத்தில் 3 குடும்பங்களைச் சேர்ந்த 14 பேரும் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் மட்டுமல்ல, உலகத்தையும் வெப்பம் ஆட்டிப்படைக்கிறது.மத்தியதரைக் கடலில் பல வாரங்களாக கடும் வெப்பம் வாட்டி வதைக்கிறது. அல்ஜீரியா முதல் கிரீஸ் வரையிலான பிராந்தியத்தில் குறைந்தது ஒன்பது நாடுகளில் காட்டுத் தீ பரவியது. ஆனால், உயரும் வெப்பநிலை நிலத்தில் உள்ள மக்களுக்கும் சுற்றுச்சூழல் அமைப்புகளுக்கும் ஆபத்தானது மட்டுமல்ல, அவை கடல் வாழ் உயிரினங்களுக்கும் தீங்கு விளைவிக்கும்.

ஜூலை மாத இறுதியில், மத்தியதரைக் கடல் மேற்பரப்பு வெப்பநிலை 28.7 பாகை செல்சியஸ் என்ற சாதனையை எட்டியது. சில கிழக்குப் பகுதிகள் 30 பாகை செல்சியஸுக்கும் அதிகமாக இருந்தது. அந்த வெப்பநிலை இந்த மாதத்தில் மேலும் உயரக்கூடும். இது பொதுவான வெப்பமாக இருக்கும்.

வெப்பமயமாகும் உலகில், கடல்வாழ் உயிரினங்கள் மூச்சுத் திணறல் அபாயத்தில் உள்ளன. ஒட்சிசன் மற்றும் கார்பன் டையொக்சைட் போன்ற வாயுக்கள் குளிர்ந்த வெப்பநிலையில் சிறப்பாகக் கரைகின்றன. எனவே, தண்ணீர் வெப்பமானால், சுவாசிக்க குறைந்த ஒட்சிசன் கிடைக்கும்.

கடல்கள், ஏரிகள் அல்லது ஆறுகளின் அடிப்பகுதியில் வாழும் விலங்குகளுக்கு அதிக நீர் வெப்பநிலை மிகவும் தீங்கு விளைவிக்கும். இந்த பெந்திக் இனங்களில் பவளப்பாறைகள், கடற்பாசிகள், நட்சத்திர மீன்கள் மற்றும் கடல் புற்கள் போன்ற தாவரங்கள் அடங்கும். மேலும், அவை பெரும்பாலும் பாறை அல்லது திடமான நிலத்தில் இணைக்கப்படுகின்றன. வெப்பம் அதிகமாக இருக்கும்போது அவைகளால் இடம்பெயர முடியாது. கடந்த சில ஆண்டுகளாக பருவமழையின் அளவு குறைந்து கொண்டே வருகிறது. நிலத்தடி நீர்மட்டம் குறைவு, விவசாய முறைகள், பெருங் கடலின் வெப்பம் அதிகரிப்பு என பல்வேறு காரணங்களும் இதில் உள்ளன.

ஆனால், இவற்றைவிடவும் முக்கிய காரணமாக இருப்பது நீர் முகாமைத்துவத்தில் இலங்கை பின்தங்கி இருப்பதுதான். மழை நீரை தேக்கிவைக்க அணைகள், ஏரிகள், குளங்கள் போன்ற அமைப்புகள் மிக முக்கியமானவை. நீர் முகாமைத்துவ திட்ட அமுலாக்கலுக்கு அரசு முயற்சி செய்தது. ஆனால், இதன் நோக்கம் திசை மாறி வறட்சியை குறைப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்காமல் வெறும் வேலைவாய்ப்பை வழங்கும் திட்டமாக அவை மாறிப்போனதுதான் மிகப்பெரிய பின்னடைவு.

பிரிட்டிஷ் ஆட்சியில் முன்னைய மன்னர் ஆட்சியில் செயற்படுத்திய அளவுக்கு கூட சுதந்திர இலங்கை பஞ்சத்தை எதிர்கொள்வதற்கான எந்த நடைமுறையையும் இதுவரை கொண்டு வரவில்லை. பெரிய அணைக்கட்டு திட்டங்கள் முன்னர் மேற்கொள்ளப்பட்டன. பிரிட்டிஷ் ஆட்சியில் நீர் முகாமைத்துவம் சிறந்திருந்தது.

மறுபுறம் அப்போதைய சூழ்நிலைக்கு இந்த நடைமுறைகள் பொருந்திப்போனாலும் தற்போது இவற்றை மாற்ற வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. ஏனெனில், தற் போது தனிநபர் நுகர்வு, மின்சார ஆலை போன்ற தொழில்துறைக்கான தண்ணீரின் தேவையும் அதிகரித்துள்ளது.

இன்னொருபக்கம் விவசாயிகள் அதிக நீரை செலவிடும் பணப்பயிர்களை நாடிச் செல்கின்றனர். இதனால் விவசாயத்திலும் தண்ணீரின் தேவை அதிகரித்து விட்டது.அரசாங்கமும் விவசாய முறையை மாற்றச் சொன்னாலும், பெரிய அளவில் மாற்றம் இல்லை. தவிர, விவசாயத்துக்கு கொடுக்கப்படும் நிவாரணமும் தண்ணீர் பற்றாக்குறைக்கு காரணம் என்று சிலர் கூறுகின்றனர். மின்சாரத்திற்கு நிவாரணம் , விவசாயப் பொருட்களுக்கு நிவாரணம் என பல்வேறு நிவாரணங்களை விவசாயிகள் பெறும்பொழுது நிலத்தடி நீரை அதிகமாக உறிஞ்சி விவசாயம் செய்து வருகின்றனர்.

பருவமழைப் பொழிவு, வறட்சி, பஞ்சம் இந்த மூன்று சொற்களும் ஒன்றோடொன்று தொடர்புடையன. இதனால் உணவுச் சங்கிலியிலும் சிக்கலாகும். வறட்சியால் உணவுப் பொருட்களின் உற்பத்தி குறையும்.

இப்போது ஏற்பட்டுள்ள வறட்சியால் அரிசி உற்பத்தி குறையும் என்று கணிக்கப்பட்டுள்ளது. இதனால் சர்வதேச அளவில் உணவுப்பொருட்களின் விலை உயர வாய்ப்புள்ளது. அதுமட்டுமல்லாமல், உணவுப் பொருட்களின் இருப்பு குறையும். இருப்பு குறைவதால் உணவுப் பொருட்கள் பற்றாக்குறை ஏற்படும். உணவுப் பொருட்களின் உற்பத்தி குறையும் பொழுது அது நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் எதிரொலிக்கும்.

அவுஸ்திரேலியா, அமெரிக்கா போன்ற நாடுகளில் தண்ணீர் பற்றாக்குறை ஆண்டு முழுவதும் இருக்கிறது. ஆனால், அங்கு நீர் முகாமைத்துவ திட்டங்களை அந்நாட்டு அரசுகள் சரியாக செயற்படுத்தி வருகின்றன. அவசியமில்லாத தண்ணீர் பயன்பாட்டை இந்த நாடுகள் குறைத்துள்ளன. இதுதான் இலங்கைக்கும் தேவை.

மேலும் விவசாயம் முதல் தொழிற்சாலைகள் வரை தண்ணீர் பயன்பாட்டைக் குறைக்கவேண்டிய காலத்தில் இருக்கிறோம். ஓர் ஆண்டில் இவ்வளவு தண்ணீர் பயன்பாட்டைக் குறைக்க வேண்டும் என்று தீர்மானித்து அதற்குரிய நடவடிக்கைகளை எடுத்தால் மட்டுமே குறைக்க முடியும்.

நாட்டில் வறட்சி இனி எப்போதும் நிரந்தரமானது. சூழலியல் காரணங்களும் அதை உறுதிப்படுத்தும் வகையில்தான் உள்ளன. ஆனால், அதை நிரந்தரமாக எதிர்கொள்ள சிறந்த நடவடிக்கைகள் எடுத்தால் மட்டுமே நாட்டைக் காப்பாற்ற முடியும். இல்லையேல் வறட்சிக்கு பலியாகும் எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு அதிகரிப்பதைத் தடுக்க முடியாது - தவிர்க்கவும் முடியாது.



# எதிர்காலத்துக்கான வாக்குறுதிகளை விடவும் அரசாங்கத்தின் செயற்பாடுகளே முக்கியம்

நாட்டின் நிலைவரத்தை குறிப்பாக, பொருளாதார மற்றும் அரசியல் நிலைவரத்தை உறுதியானது அதேவேளை, மந்தநிலையில் உள்ளது என்று வர்ணிக்கமுடியும். பொருளாதாரம் உறுதியானதாக இருக்கிறது என்று இங்கு கூறப்படுவதன் அர்த்தம் சர்வதேச வங்குரோத்து நிலை பிரகடனப்படுத்தப்பட்ட கடந்த வருட நிலைவரத்துடன் ஒப்பிடும்போது மேலும் பொருளாதார வீழ்ச்சி ஏற்படவில்லை என்பதேயாகும்.

ஆனால், பொருளாதாரம் தொடர்ந்து சுருக்கமடைந்து வருகிறது.இந்த வருடத்தின் தொடக்கத்தில் பொருளாதாரம் பதினொன்றுக்கும் அதிகமான சதவீதத்தினால் சுருக்கமடைந்தது. கடந்த வருடம் மக்களை ஆத்திரமடையவைத்து வீதிகளில் இறக்கிய பொருட்கள் மற்றும் எரிபொருட்கள் தட்டுப்பாடு மீண்டும் ஏற்படவில்லை.இது ஒரு நிவாரணமாக அமைந்திருக்கிறது. சர்வதேச வங்குரோத்து நிலை ஏற்பட்ட உலகின் வேறு பல நாடுகளில் அடுத்தடுத்து பல சுற்றுகள் பொருளாதார வீழ்ச்சியைக் காணக்கூடியதாக இருந்தது.

விலை அதிகரிப்புகளின் விளைவாக பொருட்களின் கிராக்கி குறைவடைவதால் வாழ்க்கைத்தரம் தொடர்ந்தும் பலவீனப்பட்டுக்கொண்டுபோகின்ற போதிலும், பணவீக்கவீதத்தைக் குறைப்பதிலும் பொருட்கள் தட்டுப்பாட்டை இல்லாமல் செய்வதிலும் அரசாங்கத்திற்கு இருக்கும் ஆற்றல் பொதுவில் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

பொருளாதார உறுதிப்பாட்டுடன் இணைந்ததாக மந்தநிலையும் இருந்துவருகிறது. வாழ்க்கைத்தரம் பெருமளவுக்கு குறைக்கப்பட்ட நிலையிலேயே பெரிதாக மெச்சப்படும் பொருளாதார உறுதிப்பாடு ஏற்பட்டிருக்கிறது. படுமோசமான நெருக்கடிக்கு பிறகு ஒரு வருடம் கடந்த நிலையில் சனத்தொகையில் பெரும்பாலான பிரிவினரின் சம்பளங்கள் பொருளாதாரத்தில் பணவீக்கத்தின் தாக்கத்துக்கு ஓரளவுக்கேனும் ஈடுகொடுக்கக்கூடிய முறையில் அதிகரிக்கப்படவில்லை.

பணவீக்க வீதம் வீழ்ச்சியடைந்திருக்கின்ற போதிலும் கூட சம்பளங்கள் அதிகரிக்கப்படாத நிலையில் பொருட்களின் விலைகள் தொடர்ந்து அதிகரித்தவண்ணமே இருக்கின்றன. இத்தகைய சூழ்நிலையில் மக்களில் அதிகப்பெரும்பாலானவர்களின் வாழ்க்கைத்தரம் தொடர்ந்து வீழ்ச்சிகண்டுகொண்டேபோகிறது.

இலங்கையில் மூன்றாம் வகுப்பு மாணவர்களில் 85 சதவீதமானோர் எழுத்தறிவிலும் கணக்கு அறிவிலும் குறைந்தபட்ச தேர்ச்சியை அடையவில்லை என்று யுனிசெவ் அமைப்பின் அண்மைய ஆய்வொன்றின் மூலம் அறியக்கடியதாக இருக்கிறது. கல்விக்கான செலவினம் தொடர்பிலான சர்வதேச அளவுகோல் நிகர உள்நாட்டு உற்பத்தியில் 4 - 6 சதவீதமாக இருக்கும் நிலையில், அதற்கும் மிகவும் குறைவாக வெறுமனே 2 சதவீதத்தில் இருக்கிறது இலங்கையின் கல்விக்கான செலவினம். தெற்காசியாவில் கல்விக்கு மிகவும் குறைவாக செலவிடும் நாடாக இலங்கை விளங்குகிறது என்றும் யுனிசெவ் கூறியிருக்கிறது.

கடந்த வருடம் இலங்கை வங்குரோத்து நிலையை அடைவதற்கு முன்னதாக அது நடுத்தர வருமானமுடைய நாடு என்ற அந்தஸ்தை அடைந்திருந்தது.பொருளாதார நெருக்கடியை தொடர்ந்து வந்த வங்குரோத்து நிலை பொருட்களின் விலைகளை இரண்டு,மூன்று மடங்குகளாக அதிகரித்தது. பணவீக்கம் 70 சதவீதத்துக்கும் அதிகமானதாக இருந்ததாக அரசாங்கம் மதிப்பிட்டது.




ஆனால், அடிப்படை உணவுப் பொருட்களினதும் எரிபொருட்களினதும் விலைகள் இரண்டு, மூன்று மடங்காக அதிகரித்தது. நிதித்துறை மற்றும் வங்கித்துறை போன்ற குறிப்பிடத்தக்க சில துறைகளைத் தவிர, ஏனைய துறைகளில் சம்பளங்கள் பெரும்பாலும் மந்தநிலையிலேயே இருக்கின்றன. சில துறைகளில் சம்பளங்கள் வீழ்ச்சிகண்டிருக்கின்றன என்றும் கூறலாம்.

பொருளாதார மீட்சிக்காக அரசியல்வாதிகள் மெகா திட்டங்களை தீட்டுகின்ற அதேவேளை, அடிப்படை விவசாயத்துறை, மீன்பிடித்துறை,சிறிய மற்றும் நடுத்தர தொழில்துறைகள் மீட்சிபெறுவதற்கு நீண்டதூரம் செல்லவேண்டியிருக்கிறது. இத்தகைய இடர்மிகு சூழ்நிலையில் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக செல்வோரின் எண்ணிக்கையின் அதிகரிப்பு அதிர்ச்சி தருவதாக இருக்கிறது. இலங்கை மத்திய வங்கியின் 2022 வருடாந்த அறிக்கையின் பிரகாரம் கடந்த வருடம் வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்புத் தேடிச்சென்றவர்களின் தொகை 154 சதவீதமாக அதிகரித்திருந்தது.

**இருள்மிகு நிலைவரம்**

நிலைவரத்தில் மாற்றம் ஏற்படும் என்பதற்கான நம்பிக்கை ஆற்றலும் தேச்சியும் கொண்ட ஊழியர்களும் துறைசார் நிபுணத்துவமுடையவர்களும் நாட்டை விட்டு வெளியேறுவதை தடுப்பதற்கு போதுமானதாக இல்லை. இந்த நிலைவரம் தணிவதற்கான எந்த அறிகுறியும் இல்லாமல் தொடருகிறது. தேர்ச்சிபெற்ற ஆளணி இல்லாதமை நாட்டின் முன்னோக்கிய நகர்வை பொருளாதார வீழ்ச்சிக்கு முன்னர் இருந்த நிலைக்கு கொண்டுவருவதற்கான முயற்சிகளை பெருமளவுக்கு கஷ்டமானதாக்கும்.

மருத்துவ ஆளணியின் குறிப்பாக, விசேட மருத்துவ நிபுணர்களின் இழப்பின் விளைவாக ஏற்படக்கூடிய பாதிப்புக்கு ஊடகங்கள் பெருமளவுக்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கின்றன. பல விசேட மருத்துவ நிபுணர்கள் வெளியேறியதையடுத்து மக்கள் சில மருத்துவ சேவைகளைப் பெறுவது கஷ்டமாக இருக்கிறது. தகவல் தொழில்நுட்ப நிபுணர்களின் இழப்பு உயர்ந்த வருமானத்தை தரும் இந்தத் துறையின் விரிவாக்கத்தை கட்டுப்படுத்துகிறது. ஏனென்றால், இந்தத் துறையில் உள்ள கம்பனிகளினால் சர்வதேச சந்தையில் இருந்து தொழில்களைப் பெறமுடியாமல் இருக்கிறது.

பெருமளவில் வெளிநாடுகளுக்கு செல்வோரில் கணிசமான எண்ணிக்கையில் ஆங்கிலம், கணிதம் மற்றும் தகவல் தொழில்நுட்ப பாடங்களுக்கான ஆசிரியர்கள் அடங்குகிறார்கள். கடந்த ஒன்பது மாதங்களில் மாத்திரம் சுமார் 5,000 ஆசிரியர்கள் நாட்டைவிட்டு சென்றிருக்கிறார்கள்.

இதேபோன்றே அரரவட்கையின் விளைவாக தொழிற்சங்கங்களின் வேலைநிறுத்தங்களுக்கான சாத்தியமும் காணப்பட்டது.

அரசாங்கம் கட்டுப்பாட்டை இழந்து எதிர்காலம் குறித்து ஒரு நிச்சயமற்றதன்மை நிலவியது. ஆனால், ஜனாதிபதி விக்கிரமசிங்க அதிகாரத்துக்கு வந்ததையடுத்து அரசாங்க கட்டுப்பாடு விரைவாகவே மீளநிலைநிறுத்தப்பட்டு அராஜக நிலையை நோக்கிய போக்கு முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. மக்களின் விரக்தி பீறிடுவதைக் கட்டுப்படுத்த பாதுகாப்புப் படைகளைப் பயன்படுத்துவது நீண்டகால நோக்கில் செய்யத்தக்க காரியமாக இருக்கப்போவதில்லை என்பதே பிரச்சினையாகும்.

போராட்ட இயக்கத் தலைவர்களில் பெரும் எண்ணிக்கையானோரைக் கைதுசெய்வதற்கு தேசிய பாதுகாப்பு சட்டங்களைப் பயன்படுத்தியதன் மூலமாகவும் மக்கள் போராட்டங்களை கலைக்க பொலிஸார் தடியடி, கண்ணீர்ப்புகைப் பிரயோகம் மற்றும் தண்ணீர்ப்பீரங்கி தாக்குதல்களை நடத்தியதன் மூலமாகவுமே அரசியல் உறுதிப்பாடு மீளநிலைநிறுத்தப்பட்டது. போராட்டங்கள் ஓர் அராஜக நிலைக்கு தீவிரமடைந்து பாராளுமன்றம் உட்பட பிரதான அரச கட்டடங்கள் அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் சாத்தியம் இருந்ததால் இவ்வாறு கடுமையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது என்று நியாயம் கற்பிக்கப்பட்டது.

ஆனால், இத்தகைய கடுமையான நடவடிக்கைகள் எந்தவொரு மக்கள் ஆர்ப்பாட்டத்தையும் ஒடுக்குவதற்கு தொடர்ந்து பயன்படுத்தப்படுகின்றன. தமிழர்களுக்கு எதிராக கட்டவிழ்த்துவிடப்பட்ட 1983 கறுப்பு ஜூலை இனவன்செயல்களின் 40 ஆவது வருட நினைவை முன்னிட்டு கொழும்பு கனத்தை மயானத்துக்கு முன்பாக நிகழ்வொன்றை ஏற்பாடு செய்த நடுத்தர வயது சிவில் சமூக செயற்பாட்டாளர்களுக்கு எதிராகவும் கூட கலகம் அடக்கும் பொலிஸார் ஏவிவிடப்பட்டதை காணக்கூடியதாக இருந்தது.

சிறிய போராட்டங்களை அனுமதித்தால் அது கடந்த வருடம் இடம்பெற்றதைப் போன்று இரண்டாவது சுற்று மக்கள் கிளர்ச்சிக்கு வழிவகுத்துவிடும் என்று அரசாங்கத்துக்கு இருக்கும் பீதியின் அறிகுறியே இதுவாகும்.

இன,மத வேறுபாடுகள் கடந்து இலங்கைச் சமூகத்தின் சகல பிரிவினரையும் கவர்ந்த கடந்த வருடத்தைய மக்கள் கிளர்ச்சி அரசாங்க மாற்றம் ஒன்றை வேண்டிநின்றது. ஆனால், ஜனாதிபதியைத் தவிர மற்றும்படி முன்னைய அரசாங்கத்தில் இருந்த பெரும்பாலானவர்களே தற்போதைய அரசாங்கத்திலும் அங்கம் வகிக்கிறார்கள். ஊழல் நடவடிக்கைகள் பற்றிய செய்திகள் ஊடகங்களில் நிறைந்து கிடக்கின்றன.ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாகத் தெரியவில்லை.

முன்னைய ஜனாதிபதியின் கீழ் இருந்ததைப் போன்றே வெளிப்படைத்தன்மையும் பொறுப்புக்கூறலும் இல்லாத நடவடிக்கைகளும் தண்டனையின்மையும் தொடரவே செய்கின்றன.

இதற்கு உதாரணங்களாக கேள்விப்பத்திரங்கள் கோராமல் அவசரகால மின்சக்தி கொள்வனவு, குடியுரிமைச் சட்ட மீறல்கள் தொடக்கம் அரசாங்க உறுப்பினர்கள் தங்கக்கடத்தலில் ஈடுபடுவது வரை பல முறைகேடுகளைக் கூறமுடியும். நோயாளிகளுக்கு மரணத்தை விழைவித்த மருந்துவகைகள் கொள்வனவு தொடர்பிலான ஊழல் நிலைவரங்களில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை என்பதை காட்டுகின்றன. இந்த ஊழல் நடவடிக்கைகளுக்கு ஒரு முடிவைக்கட்டி அவற்றில் ஈடுபட்டவர்களை பொறுப்புக்கூற வைத்தால் அரசாங்க தலைவர்களின் உறுதிமொழிகளில் மக்களுக்கு ஓரளவு நம்பிக்கையை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கும்.

**முன்னோக்கிய பாதை**

ஒரு ஜனநாயகத்தில் அரசாங்கம் ஒன்றை மாற்றுவதற்கான வழி தேர்தல்களே. மாற்றத்துக்கான இந்த இயந்திரத்தின் மின்விசையை அரசாங்கம் நிறுத்திவைத்திருக்கிறது. அரசாங்கத்தை பதவி விலகுமாறு நிர்ப்பந்திக்க மக்கள் ஐக்கியப்பட்டு நிற்கிறார்கள் என்றால் சாத்தியமானளவு விரைவாக தேர்தல்களை நடத்தவேண்டும். அவ்வாறு நடைபெறவில்லை.

மாறாக உள்ளூராட்சித் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றன. நிதியில்லை என்று அரசாங்கம் அதற்கு காரணம் கூறியது. இந்த நிலைவரம் அரசாங்கத்தில் இருந்து வெளியேறவேண்டியவர்கள் என்று மக்களால் அம்பலப்படுத்தப்பட்டவர்கள் - கண்டவர்கள் மீண்டும் அரசியலில் மைய அரங்கிற்கு வருவதற்கு கால அவகாசத்தையும் இடத்தையும் கொடுத்திருக்கிறது.

ஜனநாயக தேர்தல்களில் மக்கள் வாக்களிப்பதற்கு வாய்ப்பை வழங்காமல் சட்டத்துக்கு புறம்பான முறையில் உள்ளூராட்சித் தேர்தல்களை ஒத்திவைத்ததன் மூலமே அரசியல் சமுதாயத்தில் உறுதிப்பாடு வந்திருக்கிறது. நாட்டில் தற்போது காணப்படும் உறுதிப்பாடும் மந்தநிலையும் புயலுக்கு முன்னரான அமைதியாக மாறாமல் இருக்கவேண்டுமானால் மக்களுக்கு மாற்றத்தைக் கொடுக்கும் நடவடிக்கைகளை அரசாங்கம் தொடங்கவேண்டியது அவசியமாகும்.

அண்மைக்காலமாக ஜனாதிபதி விக்கிரமசிங்க தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்கத்துக்கான தேவை குறித்து வலியுறுத்திவருகிறார். இதற்காக அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது மற்றும் உண்மை,நல்லிணக்க ஆணைக்குழுவொன்றை அமைப்பது குறித்து அவர் யோசனைகளை முன்வைத்திருக்கிறார். ஆனால், இன்னமும் இவை நடைமுறைப்படுத்தப்படவில்லை. எதிர்காலத்தில் ஒரு வருடம் அல்லது இரு வருடங்களில் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான திட்டமே இருக்கிறது போன்று தெரிகிறது.

அதேவேளை, ஜனாதிபதியின் யோசனைகள் சர்ச்சையை மூளவைத்திருக்கின்றன. எல்லாமே தேர்தல்களுக்கான கண்துடைப்பு என்று சந்தேகிக்கும் மக்கள் மத்தியில் வேறுபாடுகளை அதிகரித்திருக்கின்றன.

**அண்மையில் வடக்கில் மடு**

கத்தோலிக்கத் தேவாலயத்துக்கு சென்ற ஜனாதிபதி பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்கும் தனது விருப்பத்தை வெளிப்படுத்தினார். ஆனால், கத்தோலிக்க செய்திப் பத்திரிகையான ஞானார்த்தபிரதீபய அதன் ஆசிரிய தலையங்கத்தில் , "தேர்தல் வாக்குறுதிகள் நிறைந்த அரசியல் பேச்சுகள் மதத் தலங்களுக்கு பொருத்தமானவை அல்ல என்பதை நாட்டின் முதல் குடிமகன் தெரிந்திருக்கவேண்டும்'' - என்று குறிப்பிட்டிருக்கிறது. மீட்சி இடம்பெற வேண்டுமானால் அரசாங்கத்துக்கும் மக்களுக்குமிடையில் நம்பிக்கை அவசியமாகும். எதிர்காலத்துக்கான வாக்குறுதிகளை வழங்குவதை விடுத்து சமகாலத்தில் அரசாங்கம் மாற்றங்களை நடைமுறைப்படுத்தவேண்டியது அவசியம். நல்லிணக்கத்தைப் பொறுத்தவரை, மாகாணங்கள் அதை தொடங்கவேண்டும் என்று எதிர்பார்த்தலாகாது. அதை மத்தியில் இருந்தே தொடங்கவேண்டும். மத்தியமயப்படுத்தப்பட்ட அரச இயந்திரம் சமத்துவமான கடப்பாட்டுடன் சகல இனங்களுக்கும் மதங்களுக்கும் சேவை செய்யக்கூடியதாக அதை இனநீக்கம் ( De - ethnicise) செய்யவேண்டும்.

மற்றைய சமூகங்களுடனான உறவுகளைப் பொறுத்தவரை வாழு - வாழவிடு என்ற மனநிலை பாடசாலை சிறார்கள் மற்றும் அவர்களின் ஆசிரியர்கள் மத்தியில் இருப்பதாக சமூக மட்டத்தில் அவர்கள் மத்தியில் மேற்கொள்ளப்படும் ஆய்வொன்றின் மூலம் அறியக்கூடியதாக இருக்கிறது. குறிப்பாக, அரசியல் ஒழுங்கின் மீது அவர்களுக்கு நம்பிக்கை யில்லை என்பதையும் ஆய்வு வெளிக் காட்டியிருக்கிறது.

அரசியலில் உள்ளவர்கள் தேசிய ஒருங்கிணைப்பையும் நல்லிணக்கத்தையும் தோற்றுவிப்பதை விடுத்து இன, மத வேறுபாடுகளை தங்களது அரசியல் நோக்கங்களுக்காக பயன்படுத்துகிறார்கள் என்று அந்த மாணவர்களும் ஆசிரியர்களும் நம்புகிறார்கள்.

அரசாங்கத்திடமிருந்து நடவடிக்கைகளே எதிர்பார்க்கப்படுகிறது. அரசாங்க சேவைகளைப் பெறவருபவர்களுக்கு உத்தியோகபூர்வ ஆவணங்களின் மொழிபெயர்ப்புகளை உடனடியாகக் கிடைக்கச்செய்வதைப் போன்ற சிறிய நடவடிக்கைகள் கூட அரசாங்கம் தான் சொல்வதை செயலில் காட்டுவதில் நேர்மையாக இருக்கிறது என்ற நம்பிக்கையை கட்டியெழுப்ப உதவும்.



கலாநிதி
ஜெகான் பெரேரா

## இன்றைய நாளில்...

1947 – இலங்கையின் முதலாவது நாடாளுமன்றத் தேர்தல் இடம்பெற்றது.

1948 – 44 நாடுகளில் இருந்து 147 திருச்சபைகள் இணைந்து "திருச்சபைகளின் உலகப் பேரவை" என்ற அமைப்பு நிறுவப்பட்டது.

1948 – ஏ. கே. செட்டியார் தயாரித்த காந்தி பற்றிய முதல் ஆவணத் திரைப்படம் தமிழிலும் தெலுங்கிலும் வெளியிடப்பட்டது.

1966 – "லூனார் ஆர்பிட்டர் 1" விண்கலம் முதல் தடவையாக நிலவின் சுற்றுவட்டத்திலிருந்து பூமியைப் படம் பிடித்தது.

2011 – லிபிய உள்நாட்டுப் போர்: லிபியத் தலைவர் முஅம்மர் அல் - கடாபி அரசுத்தலைவர் பதவியில் இருந்து அகற்றப்பட்டார். தேசிய இடைக்காலப் பேரவை ஆட்சியைக் கைப்பற்றியது.

# நமது நாட்டு தனவந்தர்களின் சமூகப் பணி போற்றுதற்குரியது

## மத்திய மாகாண ஆளுநர் தெரிவிப்பு



இக்பால் அலி

பொருளாதார நெருக்கடியான இக்கால கட்டத்தில் நமது நாட்டு தனவந்தவர்களின் சமூகப் பணி போற்றுதற்குரியது என்று மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே தெரிவித்தார்.

தமிழ் வர்த்தகர் ஒருவரால் 22 மில்லியன் ரூபா செலவில் கண்டி இந்து சிரேஷ்ட கல்லூரியில் நிர்மாணிக்கப்பட்ட இரண்டாம் மாடிக் கட்டடத் திறப்பு விழா பாடசாலை அதிபர் பெ. சிவகுமார் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே கட்டடத்தை திறந்துவைத்து உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

உண்மையிலேயே இப்பாடசாலைக்கட்டடத்தை நிர்மாணிக்கவேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும். இந்நிலையில், அப்பணியை வர்த்தகரொருவர் முன்னெடுத்திருப்பது பாராட்டத்தக்க விடயமாகும். நாட்டில் கடந்த காலங்களில் கொரோனா தொற்று நிலவியது. அதனைத் தொடர்ந்து உலகப் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. பொருளாதார நெருக்கடி காரணமாக மாகாண சபையால் நிதி ஒதுக்கீடு செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டது.

இதனால் கல்வி மேம்பாடு, கட்டிட நிர்மாணம் மற்றும் உபகரணங்கள் என்பவற்றை வழங்குவதற்கான வாய்ப்புகள் இதுவரையிலும் கிடைக்கவில்லை. இதற்கான வாய்ப்புகள் இனிவரும் காலங்களில் கிடைக்கும் என்று



எதிர்பார்க்கின்றோம் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மத்திய மாகாண பிரதான செயலாளர் ஜீ.எச்.எம்.ஏ. பிரேமசிங்க, கண்டி மாவட்ட செயலாளர் சந்தன தென்னகோன், மத்திய மாகாண பிரதி கல்விப் பணிப்பாளர் திருமதி மாயாதுன்ன, மாகாண கல்விப் பணிப்பாளர் ஏ.ஆர்.சத்தியேந்திரா, கல்விசார் உத்தியோகத்தர்கள், கண்டி வர்த்தக சங்கத்தின் உறுப்பினர்கள், கண்டி இந்து இளைஞர் மன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது பாடசாலை மாணவர்களின் கலை, கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றன.

# 13 - முள்ளில் விழுந்த சேலை: பக்குவமாய் எடுக்கவேண்டும்!

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 13ஆவது திருத்தத்தை நடைமுறைப் படுத்துவதற்கு ஆதரவாக செயல்பட்டு வரும் நிலையில், கூப்பாடு போடாமல் அதனை நடைமுறைப்படுத்துவதற்கு தமிழக் கட்சிகள் ஒன்றுபட வேண்டும் என ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

அவர் இவ்விடயம் தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை - இந்தியா ஒப்பந்தத்தின் பயனாக இலங்கை அரசியலமைப்பில் ஏற்படுத்தப்பட்ட 13ஆவது திருத்தம் தற்போது முற்செடியில் சிக்கிய சேலையைப்போல் உள்ள நிலையில் அதனை கிழியாமல் எடுப்பது எமது இலக்காக இருக்கவேண்டும்.

இதை ஏன் நான் உதாரணமாகக் கூறினேன் என்றால் பதின்மூன்றுக்கு எதிரானவர்கள் தென் இலங்கையில் இருக்கின்ற நிலையில் பதின்மூன்று தொடர்பில் தமிழ் அரசியல்வாதிகள் ஆரவாரப்பட்டால் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

இலங்கை - இந்தியா ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட பின்னர் நான் இலங்கைக்கு வந்தாலும் தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்பதற்காக தேசிய நீரோட்டத்தில் கலந்துகொண்டு பாராளுமன்ற ஜனநாயகத்தின் ஊடாக தேசிய நல்லிணக்கம் ஊடாக பிரச்சினை அணுகுதலை இன்றுவரை செயல்படுத்திக்கொண்டு வருகிறேன்.

பிரேமதாச காலத்தில் வாகனங்களில் 'ஸ்ரீ' எழுத்துப் பதிவிடுவது தமிழ் மக்களின் முதலாவது போராட்டமான 'ஸ்ரீ' எதிர்ப்புப் போராட்டத்தை அப்போதைய தமிழ்த் தலைவர்கள் முன்னெடுத்தனர்.

ஆனால், குறித்த போராட்டத்தை நீடிக்க விடாமல் இரவோடு இரவாக பிரேமதாச அரசாங்கத்தோடு கச்சிதமாக பேசி கலவரங்கள் ஏற்படாத வகையில் (ஸ்ரீ) தீர்மானத்தை இல்லாமல் செய்தோம்.

இதை ஏன் நான் கூறுகிறேன் என்றால் நமது நாட்டில் சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற நிலையில் அவர்களின் விருப்பத்தை மீறி தீர்மானங்களை மேற்கொள்வது கஷ்டமான காரியமாகும்.

அதேபோன்றுதான் 13ஆவது திருத்தம் தொடர்பில் சிங்கள மக்களைக் குழப்புவதற்கு தென்னிலங்கை அரசியல்வாதிகள் செயல் பட்டுவரும் நிலையில் அவர்களின் உசுப்பேத்தல்களுக்கு தமிழ்த் தரப்புகள் கூப்பாடு போட்டால் அரசாங்கத்துக்கு இடையூறு ஏற்படும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 13ஆவது திருத்தத்தை நடைமுறைப் படுத்தவேண்டும் என்பதற்கான ஆரம்பகட்ட தீர்மானங்களை மேற்கொண்டுள்ளார்.

பதின்மூன்றை நடைமுறைப்படுத்துவதற்கு சர்வஜன வாக்கெடுப்பு அவசியமற்ற நிலையில் பாராளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மையுடன் அதனை நடைமுறைப்படுத்த முடியும்.

ஆகவே, பதின்மூன்று தொடர்பில் தேவையற்ற பேச்சுகளைத் தவிர்த்து தந்திரமான முறையில் அதனை நடைமுறைப்படுத்துவதே சிறந்தது என்றார்.

# அநுராதபுரத்தில் தலைமைத்துவ செயலமர்வு

அநுராதபுர மாவட்ட அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளனம் நடத்தும் "இளைஞர், யுவதிகளுக்கான ஒரு நாள் தலைமைத்துவ செயலமர்வு" எதிர்வரும் செப்டெம்பர் 02ஆம் திகதி சனிக்கிழமை காலை 08.30 மணிமுதல் மாலை 04.30 மணிவரை அநுராதபுரம் சீரிசீ வரவேற்பு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இச்செயலமர்வில் வளவாளர்களாக கொழும்பு பல்கலைக்கழகத்தின் சமூகவியல்துறை சிரேஷ்ட பேராசிரியர் எம்.டி.எம்.மஹீஸ், இலங்கை பாராளுமன்றத்தின் சிரேஷ்ட ஆய்வாளர் எம்.அஜிவதீன், இலங்கை சுங்கத் திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் எல்.சஹாப்தீன் மற்றும் ஊக்குவிப்புப் பயிற்றுநர் எம்.எஸ்.எம்.இர்ஹாம் ஷரபி ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.

அநுராதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த 20-35 வயதுக்குட்பட்ட இளைஞர், யுவதிகள் எதிர்வரும் 30ஆம் திகதிவரை இதற்காக விண்ணப்பிக்கலாம்.

மேலதிக தகவல்களுக்கு பொருளாளர் - அரூஸ் 0777477577, ஆசிரியர் ஐ.எம்.பாஹிம் 0766975032, ஆசிரியர் அஷ்ஷெய்க் எம்.ஐ.அஜ்மல் (நளீமி) 0776160833, ஆர்.எவ்.ஸைனப் 0740943417 ஆகியோரை தொடர்புகொள்ளவும்.



இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் திருவிழாவை முன்னிட்டு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் நடத்தும் தெய்வீகத் திருக்கூட்டத் தொடர் நிகழ்வின் முதலாம் நாள் நேற்று முன்தினம் (21) இடம்பெற்றது.

# ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளுள் 15 வீதமானவர்கள் எடை குறைவானவர்கள்

## சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சௌமாலி தெரிவிப்பு

இலங்கையில் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளுள் 15 வீதமானவர்கள் எடை குறைவாக இருப்பதாக பேராதனை பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தின் உணவு மற்றும் தொழில்நுட்ப சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சௌமாலி தவுண்டசேகர தெரிவித்தார்.

கொழும்பு, கம்பஹா, கண்டி, திருகோணமலை மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த தெரிவுசெய்யப்பட்ட ஊட்டச்சத்து குறைபாடுள்ள சிறுவர்களுக்கு பால்மா பொதிகள் வழங்கும் நிகழ்வு கண்டி, கெலிஓயா, புருத்தகஹமுலவில் நடைபெற்றது. இந்நிகழ்வுக்குத் தலைமை வகித்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நம் உடலுக்குத் தேவையான ஊட்டச்சத்தை உணவிலிருந்து பெற வேண்டும். நமது உடல் உறுப்புகளின் செயற்பாட்டுக்குத் தேவையான அனைத்து விற்றமின்கள் மற்றும் தாதுக்கள் நாம் உண்ணும் உணவின் மூலமே பெறப்படுகின்றன.

நாம் உண்ணும் உணவில் சரியான ஊட்டச்சத்து இல்லை யென்றால், பல்வேறு நோய்களுக்கு ஆளாக நேரிடும். குழந்தைகளுக்கு போதிய ஊட்டச்சத்து கிடைக்க வில்லையென்றால், அவர்கள் வயதுக்கு ஏற்ற உயரம் இல்லாமல் போகலாம்.

இலங்கையில் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளுள் 15 வீதமானோர் எடை குறைவாக உள்ளனர்.

சிறு குழந்தைகளே நாட்டின் எதிர்காலம். குழந்தைகளுக்கு சரியான ஊட்டச்சத்து இல்லா விட்டால், அதன் விளைவுகள் 10 முதல் 15 ஆண்டுகளில் தெரியவரும் என்றார்.

# மொரகஹகந்த நீர்த்தேக்கம்:

## மீள் எழுச்சி பெறுகிறது நீரில் மூழ்கிய கிராமங்கள்

மொரகஹகந்த நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் குறைந்து வருவதால், நீர்த்தேக்கத்தின் நிர்மாணப் பணிகளின்போது நீரில் மூழ்கிய கிராமங்கள் மீள எழுச்சி பெற்று வருகின்றன.

மொரகஹகந்த நீர்த்தேக்கத்தில் நீர் நிரம்பியதன் மூலம் ஏழு கிராமங்கள் நீரில் மூழ்கி இலங்கை வரைபடத்தில் இருந்து காணாமல் போயிருந்தன.

இந்நிலையில் மேற்படி நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் குறைந்துள்ளதால் அலஹெர, ஹெட்டிபொல பழைய வீதி தற்போது மீண்டும் தென்பட்டுள்ளது.

கொங்கஹவெல வைத்தியசாலை, பல அரச நிறுவனங்கள் மற்றும் பிரதான வீதிகள் பலவும் நீரில் மூழ்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# குண்டசாலை விவேகானந்தாவில் ஞானதீப விருது வழங்கல் நிகழ்வு



இக்பால் அலி

கண்டி, குண்டசாலை விவேகானந்தா தமிழ் மகா வித்தியாலயத்தின் ஞானதீப விருது வழங்கல் மற்றும் பாடசாலை அபிவிருத்தி தொடர்பான கூட்டம் அதிபர் எஸ்.சிவஞானசுந்தரம் தலைமையில் இடம்பெற்றது.



இதன்போது மலையக கல்வி மேம்பாட்டுத் திட்ட அமைப்பின் ஸ்தாபகர் நடேசன் சுந்தரேசன் மற்றும் முன்னாள் கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் மூக்கையா ஆகியோர் ஞானதீப விருது வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன், பாடசாலைக்கு சமையல் உபகரணங்களும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் பெற்றோர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# தங்காலையில் தீ விபத்து

தங்காலையிலுள்ள கடற்றொழில் மற்றும் நீரியல் வள திணைக்களத்தின் மாவட்ட காரியாலயத்தில் நேற்று (22) காலை தீ விபத்துச் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளதாக தங்காலை தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

தங்காலை பொலிஸாரும் தீயணைப்புப் படையினரும் இணைந்து தீப்பரவலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

மின்கசிவு காரணமாக தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று வீதம் (22.08.2023)

| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை விதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 201.8337 | 213.2228 |
| கனேடியன் டொலர் | 232.6228 | 244.8206 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 42.7555 | 45.8204 |
| யூரோ | 344.6288 | 361.3377 |
| ஜப்பான் யென் | 2.1661 | 2.2683 |
| சிங்கப்பூர் டொலர் | 232.5084 | 244.4864 |
| ஸ்ரேலிங் பவுன் | 403.8870 | 422.2470 |
| சுவிஸ் பிராங் | 358.3156 | 378.4880 |
| ஐ.அ. டொலர் | 316.9953 | 329.7506 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 859.3694 |
| குவைட் | குவைட் தினார் | 1,051.4298 |
| ஓமான் | ஓமான் றியால் | 841.4224 |
| கட்டார் | கட்டார் றியால் | 88.8796 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 86.3654 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 88.1960 |

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
திங்கட்கிழமை 2023.08.21
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

**மஹஜன சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம் 5213
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 21,790,720.00
ஆங்கில எழுத்து U — வெற்றி இலக்கங்கள் 8 6 6 3 8 1

**கொவிசெத**
சீட்டிழுப்பு இலக்கம் 3455 — சீட்டிழுப்பு திகதி 2023.08.21
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு Rs. 60,000,000.00
ஆங்கில எழுத்து G — வெற்றி இலக்கங்கள் 09 45 57 67 — விசேட எழுத்து G
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 71500

**லக்கி 7**
திகதி 21.08.2023 — சீட்டிழுப்பு இலக்கம் 0039
வெற்றி இலக்கினம் மேஷம் — L7 இலக்கம் 2 9
வெற்றி இலக்கங்கள் 8 9 5 9 2 3
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 10,029,939.12

**தன நிதானய**
தேதி 2023/08/21 — சீட்டிழுப்பு இலக்கம் 1243
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 106,090,310.40
ஆங்கில எழுத்து F — வெற்றி இலக்கங்கள் 30 32 52 70 — விஷேசட ஆங்கில எழுத்து F
Double Chance இலக்கம் 38902

**ராசி சுப பலன்** Handahana
சீட்டிழுப்பு திகதி 2023-08-21 — சீட்டிழுப்பு இலக்கம் 522
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,880,515.60
வெற்றி இலக்கினம் சிம்மம் — வெற்றி இலக்கங்கள் 03 12 27 45 — விசேட இலக்கினம் சிம்மம்

**Mega Power**
சீட்டிழுப்பு இலக்கம் 1561 — 21/08/2023 — Double Chance 40998
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 404,932,904.00
ஆங்கில எழுத்து W — சுப்பர் இலக்கம் 09 — வெற்றி இலக்கங்கள் 07 14 71 74
அடுத்த டபள் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

# நல்லூர் கந்தனின் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு ஆலய சூழலில் விசேட கண்காணிப்பு

## பொதுமக்களின் ஒத்துழைப்பைக் கோரியுள்ள பொலிஸ்



யாழ். நிருபர்

வரலாற்றுப் பிரசித்திபெற்ற நல்லூர் கந்தனின் வருடாந்த உற்சவம் நேற்று முன்தினம் (21) திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகி தொடர்ந்து 25 நாட்களுக்கு திருவிழா நடைபெறவுள்ளது.

இந்தத் திருவிழாக் காலத்தில் நல்லூர் ஆலய வளாகத்தில் பொலிஸார் மற்றும் யாழ்ப்பாண மாநகர சபையினரால் விசேட நடைமுறைகள், வீதி ஒழுங்குகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. எனவே, அந்த செயற்பாட்டுக்கு பொதுமக்கள் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்காக யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மஞ்சுள செனரத்தின் வழிகாட்டுதலின் கீழ், நல்லூர் ஆலய சூழலில் பொலிஸார் சிவில் உடையிலும் சீருடையிலும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள். எனினும், பொதுமக்கள் தங்களுடைய உடமைகளை தாங்களே பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்றும் ஆலயத்துக்கு வருகை தரும் பக்தர்கள் வீடுகளை நன்றாக பூட்டி தங்களுடைய வீடுகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி ஆலயத்துக்கு வந்து செல்ல வேண்டுமெனவும் பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார்.

## யாழ். போதனாவில் குருதித் தட்டுப்பாடு

# உயிர்காக்கும் பணிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு இரத்த வங்கி கோரிக்கை

யாழ். நிருபர்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் எல்லாவகை குருதிக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என இரத்த வங்கி அறிவித்துள்ளது.

நாளுக்கு நாள் குருதி விநியோகம் அதிகரித்துச் செல்வதனால் நோயாளர்களுக்குத் தேவையான குருதியை வழங்க முடியாதுள்ளது.

ஆகவே, 18 - 55 வயதுக்கு இடைப்பட்ட, 50 கிலோ கிராமும் அதற்கும் மேற்பட்ட நிறையும் கொண்ட ஆண், பெண் இருபாலாரும் எவ்வித பிரச்சினையுமின்றி இரத்ததானம் செய்யலாம்.

ஏற்கனவே இரத்ததானம் செய்தவர்கள் எவ்வித நோய்களுமின்றி இருந்தால் 60 வயது வரை இரத்ததானம் செய்யலாம்.

எனவே, தட்டுப்பாட்டைக் கருத்திற்கொண்டு ஏற்கனவே இரத்ததானம் செய்து நான்கு மாதங்கள் நிறைவடைந்தவர்களும் புதிதாக இரத்ததானம் செய்ய விரும்புபவர்களும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இரத்த வங்கிக்கு வருகை தந்து இரத்ததானம் செய்து உயிர்காக்கும் உன்னத பணிக்கு ஒத்துழைப்பு வழங்குவதுடன் உங்கள் ஊர்களிலும் இரத்ததான முகாம்களை ஏற்பாடு செய்து எமக்கு அறிவித்தால் நாம் வருகை தந்து குருதியை சேகரிக்கும் பணிகளை முன்னெடுப்போம்.

எம்முடன், 077- 21 05 375 அல்லது 021- 22 23 063 எனும் தொலைபேசி இலக்கங்கள் ஊடாக தொடர்பு கொள்ள முடியும் என அறிவித்துள்ளனர்.

வடக்கு செய்திகள் thamilannorth@gmail.com

# மன்னார் - தலைமன்னார் பிரதான வீதியில் விபத்து; ஒருவர் மரணம்

மன்னார் நகர் நிருபர்



மன்னார் - தலைமன்னார் பிரதான வீதியில் பயணித்த இரு வாகனங்கள் மோதியதில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் (21) மாலை மன்னார் - தலை மன்னார் பிரதான வீதியில் தலைமன்னார் பொலிஸ் பிரிவான பருத்திப் பண்ணையில் இடம்பெற்றுள்ளது.

குறித்த விபத்து தொடர்பாக மேலும் தெரிய வருகையில், தலைமன்னார் ஊர் மனையைச் சேர்ந்த இரண்டு மாதக் குழந்தையின் தந்தையான லோறன்ஸ் மனோகரன் நிசாந்தன் (வயது- 32) என்பவரே விபத்துக்குள்ளாகி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் பேசாலையிலிருந்து மோட்டார் சைக்கிளில் தனது கிராமமான தலைமன்னார் ஊர்மனைக்கு பயணித்துக்கொண்டிருந்தபோது வெளிமாவட்டத்திலிருந்து சுற்றுலா வந்த ஹயஸ் ரக வாகனம் தலைமன்னார் ஊர்மனையிலிருந்து மன்னாருக்கு வந்தபோது இரண்டு வாகனங்களும் மோதி இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரியவந்துள்ளது.

சடலம் மன்னார் பொது வைத்தியசாலைக்கு உடற்கூற்றுப் பரிசோதனைக்காக எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

விபத்துக்குள்ளான மோட்டார் சைக்கிள் மீது மோதுண்ட வாகனம் தலைமன்னார் பொலிஸில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக தலைமன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## சரசாலையில் தூக்கிட்ட நிலையில் இளைஞன் சடலமாக மீட்பு

சாவகச்சேரி நிருபர்

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சரசாலை வடக்கு பகுதியில் நேற்று (22) செவ்வாய்க்கிழமை காலை 33 வயதான இளைஞன் ஒருவர் தூக்கிட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அவரது வீட்டின் பின்புறமாக உள்ள வேப்ப மரத்தில் தூக்கிட்ட நிலையிலேயே அவர் சடலமாக அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சடலம் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனைகளுக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில், மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# கொள்ளையர்களுக்குப் பயந்து குப்பைகள்போல் வைத்திருந்த நகையை கழிவுகளோடு வீசிய வீட்டார்

யாழ். நிருபர்

கொள்ளையர்களிடமிருந்து நகைகளைப் பாதுகாக்கும் நோக்கில் பழைய துணி ஒன்றில் கட்டி குப்பைகள்போல் வீட்டிலேயே பாதுகாத்துவந்த நகைகளை குப்பைகளோடு வீசிய நிலையில் அவற்றை குப்பைமேட்டிலிருந்து சுகாதாரப் பிரிவினர் மீட்டு உரியவரிடம் கையளித்துள்ளனர்.

சாவகச்சேரி, மண்டுவில் வட்டாரத்தில் வேலுப்பிள்ளை வீதியில் வசிக்கும் குடியிருப்பாளர் ஒருவர் தனது வீட்டிலுள்ள சுமார் 08 பவுண் பெறுமதியான நகைகளை கொள்ளையர்களிடமிருந்து பாதுகாக்கும் நோக்கில் பழைய துணி ஒன்றில் கட்டி குப்பைகள்போல வீட்டிலேயே பாதுகாத்து வந்துள்ளார்.

அண்மையில் அவரது வீட்டை சுத்தம் செய்கின்றபோது குறித்த நகைகளும் குப்பைகளோடு குப்பைகளாக கட்டப்பட்டு வீதியில் கொட்டப்பட்டிருந்தன.

இந்நிலையில், நேற்று முன்தினம் (21) மண்டுவில் வட்டாரத்தில் வழமையான கழிவகற்றும் நடவடிக்கையில் சாவகச்சேரி நகராட்சி மன்ற சுகாதாரப் பகுதியினர் ஈடுபட்டிருந்தனர்.

### கண்டெடுத்து உதவிய சுகாதாரத் தொழிலாளி

இதன்போது குறித்த வீட்டின் முன்னால் இருந்த குப்பைகளும் சுகாதாரத் தொழிலாளர்களால் அகற்றப்பட்டு உழவு இயந்திரத்தில் நகராட்சி மன்றத்துக்குச் சொந்தமான குப்பைகள் தரம் பிரிக்கின்ற இடத்துக்கு கொண்டுசெல்லப்பட்டு கொட்டப்பட்டுள்ளன.

இந்நிலையில், வீட்டிலிருந்த நகைகள் காணாமல்போனதையடுத்து நிலைமையை உணர்ந்த உரிமையாளர் குப்பைகளோடு நகைகளும் வீதியில் கொட்டப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் வீதியில் பொருத்தப்பட்டிருந்த சிசிரிவி கெமராக்களை சோதனையிட்டுள்ளார்.

அப்பொழுது அப்பகுதியில் நகராட்சி மன்றக் கழிவகற்றும் வாகனம் மூலம் கழிவுகள் அகற்றப்பட்டிருந்தமையை அவதானித்துள்ளார்.

இதையடுத்து, உடனடியாக சாவகச்சேரி நகராட்சி மன்றத்துக்குச் சென்று நிலைமை தொடர்பாகத் தெரியப்படுத்தியுள்ளார். உடனடியாக செயற்பட்ட நகராட்சி மன்ற நிர்வாக அதிகாரி, நகராட்சி மன்ற சுகாதார மேற்பார்வை உத்தியோகத்தர்கள் ஆகியோர் நகராட்சி மன்ற





கழிவு சேகரிக்கும் இடத்துக்கு வெளியிலிருந்து உள்ளேயும் உள்ளே இருந்து வெளியேயும் எவரையும் அனுமதிக்காதவண்ணம் செயற்பட்டு சுகாதாரத் தொழிலாளர்களைக்கொண்டு தேடுதலை மேற்கொண்டனர்.

இதன்போது குறித்த குடியிருப்பாளர் பழைய துணியில் கட்டி குப்பைகளோடு குப்பையாக வீதியில் வீசிய சுமார் 08 பவுண் நகைகள் குடியிருப்பாளரின் முன்னிலையிலேயே சுகாதாரத் தொழிலாளியான சண்முகம் தமிழ்சனால் மீட்கப்பட்டு உடனடியாகவே உரிமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டது.

நகராட்சி மன்ற சுகாதாரப் பகுதியினரின் நேர்மையான விரைந்த செயல்பாடு நகராட்சி மன்ற குடியிருப்பாளர்கள் மற்றும் நகர வர்த்தகர்கள் மத்தியில் வரவேற்பையும் பாராட்டையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# விரிவுரையாளர்களின் வெளியேற்றம் அதிரிப்பு: தடுத்து நிறுத்த விரைந்து நடவடிக்கை எடுக்குக!

கண்டி நிருபர்

பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் வெளியேற்றம் மிக வேகமாக நடைபெற்று வருவதால் அது தொடர்பாக விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். நடவடிக்கை எடுக்காது விட்டால் நாட்டில் அறிவு வளர்ச்சியில் பாரிய பாதிப்பை ஏற்படுத்தும் என்று பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்கத்தின் தலைவர் பேராசிரியர் பரண ஜயவர்தன நேற்று முன்தினம் (21) தெரிவித்தார்.

கண்டியில் இடம்பெற்ற ஊடக சந்திப்பு ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையிலுள்ள சகல பல்கலைக் கழகங்களிலும் மொத்தம் சுமார் 11,900 விரிவுரையாளர்கள் தற்போது சேவையாற்ற வேண்டிய நிலையில், சுமார் 6,000 பேர் அளவிலேயே சேவையாற்றுகின்றனர். இது 50 சதவீதத்துக்கும் குறைவானவர்கள் உள்ளனர் என்பதையே காட்டுகிறது. இதன் காரணமாக தற்போது கடமையிலுள்ளவர்கள் அதிகளவு சுமையை ஏற்க வேண்டியுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் 6,300 பேரளவில் சேவை புரிந்தனர். கடந்த சில மாதங்களில் அவர்களில் 500 முதல் 600 பேர் வரை நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். இவ்வாறு பல்கலைக்கழக விரிவுரையாளர்களது வெளியேற்றம் அரச பல்கலைக்கழகங்களை மட்டுமே பாதிப்பதாக சிலர் நினைக்கின்றனர். அது பாரிய தவறு. ஏனெனில், பிரபல தனியார் பல்கலைக்கழகங்களிலும் அவர்களே பகுதி நேர விரிவுரையாளர்களாக இருப்பதுடன் நாட்டுக்குத் தேவைப்படும் புத்திஜீவிகளை உருவாக்கும் பணிக்கு அது பாரிய சவாலாகவும் உள்ளது - என்றார்.

அதேவேளை, அதிகரித்த வரிச்சுமை மற்றும் சிறந்த வாழ்க்கைத் தரத்தை அடைவதில் காணப்படும் பிரச்சினைகள் போன்ற பலவற்றுக்கு மத்தியில் கடமையாற்றும் விரிவுரையாளர்களுக்கு வெளிநாடுகளில் தொழில் மற்றும் வேலை வாய்ப்புகளைப் பெறுவது மிக எளிதான விடயமாகவும் உள்ளது. எனவே, அவர்களது வெளியேற்றம் மிக வேகமாகியுள்ளது. ஆகையால் இதனைத் தடுத்து நிறுத்த துரிதகதியில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் - என்றார்.

மலையக செய்திகள் thamilanmalayagam@gmail.com

# இரத்தினபுரியில் கடும் வறட்சி; விவசாயிகள் நிவாரணம் கோரல்

ஏ.ஏ.எம்.பாயிஸ்

இரத்தினபுரி மாவட்டத்தில் நிலவும் கடும் வறட்சியால் வயல் நிலங்களுக்கு மாத்திரமன்றி, சிறுபோக, பெரும்போக பயிர்ச் செய்கையும் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இதனால் தாம் பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியிருப் பதாகவும் தேயிலை, இறப்பர் மற்றும் மரக்கறிச் செய்கைகளில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, வறட்சி தொடர்வதால் தேயிலை, இறப்பர் தொழிற்சாலைகள் மூடப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதால் தொழிலாளர்களுக்கு வேலை வழங்கக்கூடிய அளவுக்கு நிலைமை மோசமடைந்துள்ளதாக தேயிலை மற்றும் இறப்பர் தொழிற்சாலை உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கவேண்டுமென விவசாய அமைப்புகள் அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளன.

## அனுமதிப்பத்திரமின்றி டேப்பன்டைன் மரக்குற்றிகளை ஏற்றிச்சென்ற லொறி பொலிஸாரால் கைப்பற்றல்



ஆர் .தனராஜா

அனுமதிப்பத்திரமின்றி மரக்குற்றிகளை ஏற்றிச் சென்ற லொறியொன்றை ஹாலி - எல பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

ஹாலி - எல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரொக்கத்தன்ன பகுதியில் இருந்து பதுளை நோக்கி டேப்பன்டைன் மரக்குற்றிகளை ஏற்றிச் சென்ற லொறியையே ஹாலி - எல நகரில் வைத்து சோதனைக்குட்படுத்திய போது அனுமதிப்பத்திரமின்றி மரக்குற்றிகளை ஏற்றிச் செல்வது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக ஹாலி-எல பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது 53 வயதுடைய ரொக்கத்தன்ன பகுதியைச் சேர்ந்த நபரொருவரையும் கைது செய்துள்ளதுடன் லொறியையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளதாக தெரிவித்தனர்.

ஹாலி - எல பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ருவான் குணதிலகவுடனான பொலிஸ் குழுவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சந்தேக நபரையும் மரக்குற்றிகளையும் பதுளை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக ஹாலி - எல பொலிஸார் தெரிவித்தனர்.

## மாத்தளை- குருணாகல் புதிய பஸ் சேவை ஆரம்பம்



கண்டி நிருபர்

மாத்தளை, ஒவிலிகந்த என்ற இடத்திலிருந்து குருணாகல் வரைக்குமான புதிய பஸ்சேவை ஒன்றை மாத்தளை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும் இளைஞர் விவகார விளையாட்டுத்துறை இராஜாங்க அமைச்சருமான ரோஹண திசாநாயக்க அண்மையில் ஆரம்பித்து வைத்தார்.

அங்கு உரையாற்றிய இராஜாங்க அமைச்சர் தெரிவித்ததாவது,

கிராமப்புற விவசாயிகளது உற்பத்திகளை வெளியிடங்களுக்கு கொண்டு செல்ல போக்குவரத்து மிக முக்கியமான ஒன்று. அதேநேரம், கிராமப்புற மக்களது வாழ்க்கைத் தரம் உயர்வதற்கு கல்வி, பொருளாதார, சமூக அபிவிருத்திகள் மிக முக்கியமாகும்.

அந்த அடிப்படையில் போக்குவரத்து வசதிகள் முக்கியம். குறிப்பாக, இலங்கை போக்குவரத்துச் சபையின் சேவைகள் இலாப நோக்கமின்றி நடப்பதால் பொதுமக்களுக்கு அதன் சேவை மிக முக்கியமானதாக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# கண்டி பெரஹெரா ஆசனப்பதிவு வருமானம் இம்முறை ஐம்பது மில்லியனைத் தாண்டியது

கண்டி நிருபர்

சரித்திரப் புகழ் பெற்ற கண்டி ஸ்ரீ தலதா மாளிகை இறுதிப் பெரஹெராவைப் பார்வையிட ஒன்லைன் முறையில் இதுவரை 50 மில்லியன் ரூபா வரை செலுத்தப்பட்டு ஆசனங்கள் பதிவாகியுள்ளதுடன் ஒரு ஆசனத்துக்கு ரூ.25 000 முதல் ரூ.30 000 வரை விலை போயுள்ளதாக கண்டி மாநகர சபை ஆணையாளர் சான் விஜேதிலக நேற்று (22) தெரிவித்தார்.

கண்டி மாநகர சபையால் கண்டி குயீன்ஸ் ஹோட்டல் வளாக பாதசாரிகள் நடைபாதையில் ஆசனங்களை அமைத்து சுற்றுலாத் துறையினருக்கு பெரஹெரா காலங்களில் வாடகைக்கு விடுவது வழக்கம். அந்த அடிப்படையில் இம்முறையும் ஆசனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. அவை ஒன்லைன் முறையில் வாடகைக்கு விடப்பட்டன. இறுதி பெரஹெராவைப் பார்வையிட ஒரு ஆசனத்தை 25ஆயிரம் ரூபா முதல் 30 ஆயிரம் ரூபா வரை சிலர் பணம் செலுத்தியுள்ளதாகவும் இவ்வாறு குயீன்ஸ் ஹோட்டல் வளாக நடைபாதையில் 50 மில்லியன் ரூபா திரட்டப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பெரஹெரா இடம்பெறும் இக்காலப் பகுதியில் பல்லேகலையில் ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டியும் நடைபெறவுள்ளது. விசேடமாக இந்தியா மற்றும் பாகிஸ்தானுக்கிடையிலான போட்டியைப் பார்வையிட இரு நாடுகளிலுமிருந்து தலா 20 ஆயிரம் பேர் வரை கண்டியிலுள்ள ஹோட்டல்களில் அறைகளைப் பதிவு செய்துள்ளதாகவும் தற்போது கண்டியிலுள்ள பிரபல முன்னணி ஹோட்டல்களின் சகல அறைகளும் பதிவாகி விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## மத்திய மலைநாட்டில் கடும் வெப்பம்; பல இடங்களின் வனப் பகுதி தீவைப்பு

மஸ்கெலியா நிருபர்

கடந்த சில நாட்களாக மத்திய மலைநாட்டில் கடுமையான வெப்பம் நிலவுவதால் நேற்று காசல்ரீ நீர்த் தேக்கம் அமைந்துள்ள பகுதியின் பல இடங்களில் விஷமிகள் தீ வைத்துள்ளனர்.

இதனால் அப்பகுதியிலுள்ள மாணா பற்றைகள் எரிந்து சாம்பலாகியுள்ளன. இதையடுத்து, வன ஜீவராசிகள் பல அழிந்துபோயுள்ளன.

மேலும், காசல்ரீ நீர்த்தேக்கப் பகுதியில் உள்ள பயிற்சி நிலையத்துக்கு அருகில் நேற்று மாலை 04 மணியளவில் விஷமிகள் தீ வைத்ததால் 02 ஏக்கர் பரப்பளவில் தீ பரவியது. அதனைத் தொடர்ந்து நீர் மின் நிலைய அதிகாரிகள், ஊழியர்கள் இணைந்து தீயை அணைத்ததால் தீ மேலும் பரவாமல் தடுக்க முடிந்தது.



## உலக செய்திகள்

# அணுமின் நிலையத்தின் நீரை கடலில் வெளியேற்றும் ஜப்பான்



பல்வேறு நாடுகளின் எதிர்ப்பை மீறி புகுஷிமா அணு மின் நிலையத்தின் கதிரியக்க நீரை நாளை (24) கடலில் வெளியேற்றவுள்ளதாக ஜப்பான் பிரதமர் ஃபுமியோ கிஷிடா அறிவித்துள்ளார்.

கடந்த 2011ஆம் ஆண்டில் ஏற்பட்ட நிலநடுக்கம் மற்றும் சுனாமி காரணமாக ஃபுகுஷிமா அணுமின் நிலையத்துக்குள் கடல் நீர் புகுந்தது. இதனால் அங்கு மின் இணைப்பு துண்டிக்கப்பட்டதால் அணு உலைகளை குளிர்விக்கும் இயக்கம் நின்று போனது. அதையடுத்து, அந்த மின் நிலையத்தின் 03 அணு உலைகள் உருகின. அதிலிருந்த கதிரியக்க எரிபொருட்கள் கடலில் கலந்தன.

அதையடுத்து, ஜப்பானிலிருந்து கடலுணவுப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு ஐரோப்பிய ஒன்றியம் பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்தது.

அந்த விபத்துக்குப் பின்னர் அணுஉலைகளிலிருந்து கதிரியக்க நீர் வெளியேறியது. அதனை பெரிய தொட்டிகளில் அதிகாரிகள் தேக்கி வைத்தனர்.

தற்போது சுத்திகரிக்கப்பட்ட அந்த நீரை கடலில் கலக்க ஜப்பான் அரசு முடிவு செய்த நிலையில், ஜப்பான் சென்று அந்த நீரை ஆய்வு செய்த ஐ.நா. அணுசக்தி பாதுகாப்பு அமைப்பின் நிபுணர்கள், அதனை கடலில் கலப்பது பாதுகாப்பானதுதான் என்று தெரிவித்தார்.

எனினும், புகுஷிமா அணுஉலை நீரை கடலில் கலப்பதற்கு சீனா, தென்கொரியா போன்ற நாடுகள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன.

இந்நிலையில், நேற்று காலை ஜப்பானில் நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் கதிரியக்க நீரை வியாழக்கிழமை கடலில் வெளியேற்ற முடிவெடுக்கப்பட்டுள்ளது.

அந்த நீரைக் கடலில் கலந்தால், ஜப்பானின் கடலுணவுகளுக்கு தடை விதிக்கப்போவதாக சீனா மற்றும் ஹொங்கொங் அரசுகள் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இராமரை தரிசிக்க அயோத்தி சென்ற ரஜினி



சுப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் தனது ஆன்மீகப் பயணத்தின் தொடர்ச்சியாக அயோத்தியில் கட்டப்பட்டுவரும் இராமர் கோயிலுக்குச் சென்று வழிபாட்டில் ஈடுபட்டார்.

உத்தர பிரதேச மாநிலம் அயோத்தியில் பிரமாண்ட இராமர் கோயில் கட்டப்படுகிறது. இப்பணியில் ஸ்ரீ ராம் ஜென்மபூமி தீர்த்த ஷேத்ரா அறக்கட்டளை ஈடுபட்டுள்ளது.

அயோத்தியில் பிரமாண்ட கோயிலில் ராம் லல்லா சிலை பிரதிஷ்டை செய்யப்படவுள்ளது. கோயிலின் கருவறை மற்றும் சந்நிதி தயாராகி விட்டது. எதிர்வரும் 2024ஆம் ஆண்டு ஜனவரியில் மகர சங்கராந்திக்குப் பின்னர் 16 முதல் 24ஆம் திகதிக்குள் ராம் லல்லா சிலை பிரதிஷ்டை செய்யப்படவுள்ளது.

தற்போது கோயிலில் முதல் தளம் அமைக்கும் பணியில் 80 சதவீதம் நிறைவு பெற்றுள்ளது.

### 39 நாட்கள் பயணத்தின் பின்னர்

# இன்று நிலவில் தரையிறங்குகிறது சந்திரயான்- 3



## வரலாற்று நிகழ்வை நேரலை செய்கிறது இஸ்ரோ

நிலவை ஆய்வு செய்வதற்காக இஸ்ரோ விண்வெளி ஆய்வு நிறுவனத்தால் விண்ணில் செலுத்தப்பட்ட சந்திரயான்- 3 விண்கலம் இன்று (23) மாலை 6.04 மணியளவில் சந்திரனில் தரையிறங்கவுள்ளது.

இதன்மூலம் நிலவின் தென்துருவத்தில் முதலில் தரையிறங்கும் நாடு என்ற பெருமையை இந்தியா பெறுகின்றது.

சந்திரயான்- 3 விண்கலம் சுமார் 39 நாட்கள் நிலவின் சுற்றுவட்டபாதையில் பயணித்த நிலையில் 40ஆவது நாளான இன்று மாலை 6.04 மணியளவில் நிலவில் தரையிறங்கவுள்ளது.

நிலவில் ஒரு பகல் பொழுது 14 பூமி நாட்கள் என்பதால், அங்கு சூரிய வெளிச்சம் கிடைக்கும் நேரத்தில் தரையிறங்கினால் மட்டுமே திட்டமிட்டபடி ஆய்வுகளை மேற்கொள்ள முடியும். அதன்படி நிலவில் சூரிய உதயம் தொடங்கும் நேரத்தை கணக்கிட்டு, சந்திரயான் -3இன் விக்ரம் லேண்டர் இன்று மாலை தரையிறங்கவுள்ளது.

நிலவின் தென் துருவப்பகுதியை ஆய்வு செய்வதற்காக, சந்திரயான் - 3 விண்கலம், ஆந்திராவின் ஸ்ரீஹரிகோட்டாவிலுள்ள சதீஷ் தவான் விண்வெளி தளத்திலிருந்து கடந்த மாதம் 14ஆம் திகதி வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டது. இதன் செயற்பாடுகளை இஸ்ரோ விஞ்ஞானிகள் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

இந்த விண்கலம் மூன்று பிரிவுகளை கொண்டதாகும். புரபல்ஷன் மாட்யூல் எனப்படும் உந்து கலன், லேண்டர் எனப்படும் நிலவில் தரையிறங்கும் சாதனம், ரோவர் எனப்படும் நிலவில் ஆய்வு செய்யும் வாகனம் அடங்கியதே சந்திரயான் - 3 விண்கலமாகும்.

இதில் உந்து கலனுக்குள் லேண்டர் சாதனமும் லேண்டர் சாதனத்துக்குள் ரோவர் வாகனமும் இடம்பெற்றுள்ளன.

பூமியின் சுற்று வட்டப் பாதையிலிருந்து, கடந்த 5ஆம் திகதி நிலவின் சுற்று வட்டப் பாதைக்கு சந்திரயான் - 3 விண்கலம் செலுத்தப்பட்டது.

சந்திரயான் - 3 விண்கலத்திலுள்ள, புரபல்ஷன் மாட்யூல் எனப்படும் உந்து கலத்திலிருந்து, நிலவில் தரையிறங்கவுள்ள, விக்ரம் லேண்டர் சாதனம் கடந்த 17ஆம் திகதி பிரிந்து நிலவின் சுற்றுப்பாதையில் சுற்றி வந்தது.

இந்நிலையில் கடந்த 2019ஆம் ஆண்டு ஏவப்பட்ட சந்திரயான் - 2 ஆர்பிட்டர் இப்போதும் நிலவின் சுற்றுவட்ட பாதையில் சுற்றி வந்து கொண்டிருக்கிறது. இது ஏழு ஆண்டுகள் செயற்படும் திறன் உடையது. இந்த சந்திரயான் - 2 ஆர்பிட்டர் மற்றும் சந்திரயான் - 3 லேண்டர் சாதனம் இடையே இருவழி தகவல் தொடர்பு நேற்றுமுன்தினம் வெற்றிகரமாக நிறுவப்பட்டதாக இஸ்ரோ தெரிவித்தது.

இந்நிலையில் இஸ்ரோ நேற்று வெளியிட்ட அறிக்கையில்,

விக்ரம் லேண்டர் திட்டமிட்டபடி இன்று மாலை தரையிறக்கப்படவுள்ளது. தற்போது விக்ரம் லேண்டரின் பயணம் சீராக உள்ளது. இன்று மாலை 6.04 மணிக்கு சந்திரயான்-3 மிஷனின் இலக்காக நிலவின் தென் துருவத்தில் விக்ரம் லேண்டர் தரையிறங்க உள்ளது.

தொடர்ந்து அதிலிருந்து பிரக்யான் ரோவர் நிலவின் பரப்பில் ஆய்வு மேற்கொள்ளவுள்ளது. இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனத்தின் முக்கிய மைல்கல்லாக இது பார்க்கப்படுகிறது. இந்தமுறை லேண்டர் நிலவில் தரையிறங்குவதில் எந்த சிக்கலும் இருக்காது. விண்கலத்தின் அனைத்து செயற்பாடுகளும் திட்டமிட்டபடி இடம்பெற்று வருகின்றன. விண்கலத்தின் செயற்பாடுகள் தொடர்ந்து கண்காணிக்கப்படுகின்றன.

நிலவில் தரையிறங்கும் நிகழ்வு இன்று மாலை 5:20 மணி முதல் நேரடியாக ஒளிபரப்பு செய்யப்படுகிறது என தெரிவித்துள்ளது.

அத்தோடு விக்ரம் லேண்டரிலுள்ள லேண்டர் பொஷிசன் டிடெக்சன் கெமரா மூலம் 70 கி.மீ., தொலைவிலிருந்து எடுக்கப்பட்ட நிலவின் புகைப்படங்கள் அடங்கிய வீடியோவையும் வெளியிட்டுள்ளது.

லேண்டர் தரை இறங்கியவுடன் அதன் உள்ளே இருந்து, ரோவர் வாகனம் வெளியே வந்து, நிலவின் மேற்பரப்பில் சுற்றி வந்து ஆய்வு மேற்கொள்ளும்.

ரஷ்யா அனுப்பிய லூனா -25 விண்கலம் தோல்வியில் முடிந்த நிலையில், சந்திரயான் -3 லேண்டர் தரையிறக்கம் உலக நாடுகளிடையேயும் பலத்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளன.

வரலாற்று சிறப்புமிக்க நிகழ்வாக மாறியுள்ள சந்திரயான் -3 லேண்டர் நிலவில் தரையிறங்கும் நிகழ்வை நேரலை செய்யவுள்ளதாக இஸ்ரோ அறிவித்துள்ளது. இன்று (23) மாலை 6.04 மணிக்கு லேண்டர் நிலவில் தரையிறங்கவுள்ளது.

இந்த நிகழ்வை இஸ்ரோவின் அதிகாரப்பூர்வ வலைதளமான https://isro.gov.in என்ற தளத்திலும் இஸ்ரோ யூடியூப் பக்கத்திலும் இஸ்ரோ முகப்புத்தகப் பக்கத்திலும் நேரலையில் காணலாம்.

# நாளை நீதிமன்றில் சரணடைவேன்



"ஜோர்ஜியா நீதிமன்றத்தில் நாளை (24) வியாழக்கிழமை அதிகாரிகள் முன்னிலையில் சரணடைவேன்'' என அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

கடந்த 2020ஆம் ஆண்டு அமெரிக்காவின் ஜோர்ஜியா மாகாணத்தில் நடைபெற்ற அந்த நாட்டு ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளை மாற்றியமைக்க முயற்சி செய்ததாக ட்ரம்ப் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை மாகாண நீதிமன்றம் உறுதிப்படுத்தியுள்ளது.

ஜோர்ஜியாவில் கடந்த முறை நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் தனது தோல்வியை ஏற்க மறுத்து, தேர்தல் முடிவுகளை மாற்றியமைப்பதற்கு ட்ரம்ப் முயன்றதாக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரம் உள்ளதை ஃபுல்டன் மாவட்ட நீதிமன்றம் திங்கட்கிழமை உறுதி செய்தது.

இது தொடர்பாக ட்ரம்ப் உள்ளிட்ட18 பேர் மீது 41 குற்றச்சாட்டுகளை உறுதிப்படுத்தும் ஆவணத்தை நீதிமன்றம் வெளியிட்டது.

# இஸ்ரேல் மீதான தாக்குதல் பின்னணியில் ஈரான்



இஸ்ரேல் மீது பலஸ்தீனர்கள் அண்மையில் நடத்திய அனைத்து தாக்குதல்களின் பின்னணியில் ஈரான் இருப்பதாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்ஜமின் நெதன்யாகு குற்றம்சாட்டியுள்ளார்.

ஹெப்ரான் நகரில் இரண்டு இஸ்ரேல் இராணுவத்தினர் சுட்டுக்கொல்லப்பட்டதை தொடர்ந்து அங்கு தேடுதல் வேட்டை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த பகுதிக்கு வந்து ஆய்வில் ஈடுபட்ட பிரதமர் நெதன்யாகு மற்றும் பாதுகாப்பு அமைச்சர் யோவ் காலண்ட் ஆகியோர் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தனர். அப்போது இஸ்ரேலியர்கள் மீதான தாக்குதலின் பின்னணியில் ஈரான் இருப்பதாக தெரிவித்தனர்.



# 11 தீர்மானங்களுடன் இனிதே நிறைவுற்ற மக்கா சர்வதேச இஸ்லாமிய மாநாடு

உலகின் 85 நாடுகளில் இருந்து 150 பெருந்தகைகள் கலந்துகொண்ட சர்வதேச இஸ்லாமிய மாநாடு அண்மையில் 11 தீர்மானங்களுடன் இனிதே நிறைவுற்றது.

ஒருவர் தன்னிடம் இல்லாததை அடுத்தவரிடமிருந்து பெற்றுக்கொண்டு தன்னை முழுமைப்படுத்திக் கொள்ளல் அடுத்தவர்களுடன் தொடர்சியான நல்லுறவைப் பேணுதல் எனும் கருத்தைச் சுமந்த ''தொடர்பாடல், முழுமை பெறல்' எனும் தலைப்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இம்மாபெரும் மாநாடு மக்காவின் ஹரம் ஷரீபுக்கு அண்மையில் உள்ள ஜபல் உமரில் அமைந்துள்ள புதிய ஹில்டன் நட்சத்திர உணவகத்தின் மிகச்சிறப்பான வரவேற்பு மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இம்மாநாட்டை ஆரம்பித்து வைத்துப் பேசிய சவூதி அரேபிய இஸ்லாமிய விவகார அமைச்சர் கலாநிதி அப்துல் லதீப் ஆலுஷ் ஷேய்க் அவர்கள் இக்காலத்தில் இவ்வாறானதொரு மாநாட்டின் அவசியத்தை வலியுறுத்தியதோடு இதை நடத்துவதற்கான அனுமதியையும் சகலவிதமான ஒத்துழைப்புக்களையும் வழங்கிய மன்னர் சல்மான் பட்டத்து இளவரசர் முஹம்மத் பின் சல்மான ஆகியோருக்கு நன்றி தெரிவித்தார். இஸ்லாத்தின் நீதத்துக்கு கலங்கத்தை ஏற்படுத்தி தீவிரவாத சிந்தனைகளோடு அதனைத் தொடர்படுத்துகின்ற அடிப்படையில் சில வழி கெட்ட இயக்கங்கள் முயற்சிக்கின்ற இவ்வேளையில் தீவிரவாதம் வெறுப்புப்பேச்சுக்கு எதிரான இஸ்லாத்தின் நடுநிலை நீதம் என்பவற்றுக்கு பணி செய்கின்ற இவ்வாறான கருத்துப்பரிமாறல்கள் ஒருவருக்கொருவர் ஒத்தாசை புரிகின்ற நிகழ்வுகள் அவசியம் இடம்பெற வேண்டும் என்பதையும் சுட்டிக்காட்டினார். மேலும் சில சிந்தனைப் பிரிவுகள் தங்களின் நிகழ்ச்சி நிரல்களை மார்க்கத்தின் பேரிலாவது நிறைவேற்றிக்கொள்ள வேண்டும் என்பதற்காக அரசியல் ரீதியான ஆட்சேர்ப்புக்களைச் செய்வதில் ஈடுபடுகின்றன. மார்க்கத்தை தங்களின் இலக்குகளை அடைவதற்கான ஏணிகளாக பயன்படுத்துகின்றன. எனவே, அரசியலுக்காக மார்க்கத்தைப் பயன்படுத்தும் போக்கை சீர்செய்வதற்குரிய அதிக முயற்சிகளை நாம் செய்ய வேண்டியுள்ளது என்றார்.

இதன் ஆரம்ப நிகழ்வில் பேசிய இஸ்லாமிய ஒத்துழைப்பு மையத்தின் பொதுச் செயலாளர் ஹுஸைன் இப்றாஹீம் தாஹா 'தவாஸுல் தகாமுல்' எனும் தலைப்பில் நடத்தப்படும் இம்மாநாடு எல்லா வழிகளிலும் அதிகமான சவால்களை முஸ்லிம் சமூகம் எதிர்நோக்கியுள்ள இக்காலத்தில் நடைபெறுகின்றது. இஸ்லாத்தைக் கொச்சைப்படுத்துவதற்கான அரசியல் ரீதியான முன்னெடுப்புக்கள், சிந்தனை ரீதியான சவால்கள், எதிர்ப்பலைகள் அதிகரித்துள்ளது. எனவே,



திட்டமிட்டு செயற்படும் இவ்வாறான சக்திகளுக்கும் பிரசாரங்களுக்கும் முன்னால் ஒரே அணியாக நிற்க வேண்டியது நமது கடமையாகும். இதற்காகவும் இஸ்லாமிய ஒத்துழைப்பு மையம் முஸ்லிம்களுக்கும் இஸ்லாத்துக்கும் சேவை செய்வதற்காக அனைத்துத் துறைகளிலும் உதவி புரிவதற்காகவும் தெரிவித்த அவர், சவூதி அரேபிய மன்னர் சல்மான் பட்டத்து இளவரசர் முஹம்மத் பின் சல்மான் ஆகியோருக்கு நன்றிகளைத் தெரிவித்தார்.

இரண்டு நாட்களில் எட்டு அமர்வுகளாக நடத்தப்பட்ட இம்மாநாட்டில் ஏழு பிரதான தலைப்புக்களில் ஆய்வுக் கட்டுரைகள் உலகின் தலைசிறந்த ஆலிம்களால் முன்வைக்கப்பட்டன.

இதன் முதல் அமர்வு இஸ்லாமிய விவகாரத் திணைக்களங்கள், மார்க்கத்தீர்ப்பாயங்கள் போன்றவை, மார்க்க மேதைகள் இஸ்லாத்துக்கும் முஸ்லிம்களுக்கும் ஆற்றிய சேவைகள் இஸ்லாமிய ஒற்றுமையைப் பலப்படுத்துவதற்கான முன்னெடுப்புக்கள் எனும் தலைப்பில் நடைபெற்றது. இதற்கு மதீனா மார்க்கத் தீர்ப்புக்கான தலைமைப் பொறுப்பாளர் கலாநிதி ஸாலிஹ் அஸ்ஸுஹைமி தலைமை தாங்கினார். இவ்வமர்வில் கொழும்பு பின் பாஸ் மகளிர் அரபுக்கல்லூரியின் முதல்வர் கலாநிதி முஹம்மத் அஸ்ஹர் முஹம்மது ஹனீபா அவர்களும் ஓர் ஆய்வாளராக கலந்துகொண்டு உரையாற்றினார்.

இரண்டாவது அமர்வு, சவூதி அரேபிய அறிஞர்கள் பேரவையின் உறுப்பினர் பேராசியர் ஜிப்ரீல் புஸைலி அவர்களின் தலைமையில் இஸ்லாமிய விவகாரத் திணைக்களங்கள், மார்க்கத்தீர்ப்பாயங்கள் போன்றவை, மார்க்க மேதைகளுக்கு மத்தியில் தொடர்பாடலும் முழுமைத்துவமும் என்பதில் இருப்பவையும் இருக்க வேண்டியவையும் எனும் தலைப்பில் இடம்பெற்றது. இதில் எமது நாட்டைச்சேர்ந்த தாருஸ்ஸலாம் அரபுக் கல்லூரியின் விரிவுரையாளர் கலாநிதி அம்ஜத் ராஸிக் அவர்களும் சிறப்புரை ஆற்றியமை குறிப்பிடத்தக்கது.

பேராசியர் முஹம்மத் பின் ஹாலித் அவர்களின் தலைமையில் நடைபெற்ற மூன்றாவது அமர்வு இஸ்லாமிய விவகாரத் திணைக்களங்கள், மார்க்கத் தீர்ப்பாயங்கள் போன்றவை, மார்க்க மேதைகள் ஆகியோர் சகிப்புத் தன்மைக்கான விழுமியங்கள், சமூகங்களுக்கிடையிலான சக வாழ்வை உறுதிப்படுத்துவதில் செய்த முயற்சிகள் எனும் தலைப்பில் நடத்தப்பட்டது.

அல்குர்ஆன் அஸ்ஸுன்னாவைப் பற்றிப்பிடித்தலும் அதனைப் போதித்தலும் அதற்காக சேவை செய்தலும் எனும் தலைப்பில் இடம் பெற்ற நான்காவது அமர்வுக்கு பேராசிரியர் ஸுலைமான் பின் சலீம் அர்ருஹைலி அவர்கள் தலைமை தாங்கினார்.

நீதித்துறைக்கான உயர் கற்கைகள் கூடத்தின் ஆசிரியர் பேராசிரியர் முஹம்மத் அல்புரைஹ் அவர்களின் தலைமையில் நடைபெற்ற ஐந்தாவது அமர்வில் அல்குர்ஆன் அஸ்ஸுன்னாவின் நீதம் நடுநிலையைப் போதித்தலும் அவற்றைப்



பரப்புவதற்காக சேவை செய்தலும் எனும் தலைப்பில் இடம்பெற்றது.

ஆறாவது அமர்வு இஸ்லாமிய விவகாரத் திணைக்களங்கள், மார்க்கத்தீர்ப்பாயங்கள் போன்றவை, மார்க்க மேதைகள் என்போர் தீவிரவாதம் கடும்போக்கை எதிர்ப்பதில் ஆற்றிய பங்களிப்புக்கள் எனும் தலைப்பில் நடைபெற்றது. இதற்கு மக்காவின் மார்க்கத் தீர்ப்பாயத்துக்கான தலைவர் பேராசிரியர் முஹம்மத் பின் உமர் பாஸ்மோல் தலைமை தாங்கினார்.

இமாம் முஹம்மத் பின் ஸுஊத் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர் பேராசிரியர் அப்துல்லாஹ் பின் இப்றாஹீம் அல்லுஹைதான் தலைமையில் நடைபெற்ற ஏழாவது அமர்வில் இஸ்லாமிய விவகாரத் திணைக்களங்கள், மார்க்கத்தீர்ப்பாயங்கள் போன்றவை, மார்க்க மேதைகள் ஆகியோர் நாஸ்தீகம் பண்பாட்டுச் சீரழிவு என்பதிலிருந்து சமூகத்தைப் பாதுகாப்பதற்காக எடுத்த முயற்சிகள் எனும் தலைப்பில் ஆய்வுகள் சமர்ப்பிக்கப்பட்டன.

இம்மாட்டில் கலந்து கொண்ட பலரும் தொடர்ச்சியாக முஸ்லிம்களுக்காகவும் முஸ்லிம் நாடுகளுக்காகவும் உழைக்கும் சவூதி அரேபிய மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் பட்டத்து இளவரசர் முஹம்மத் பின் சல்மான் அவர்களின் நல்வாழ்வுக்காக பிரார்த்தித்ததோடு தொடர்ந்தும் இவ்வாறான மாநாடுகளை நடத்தி இஸ்லாமிய உம்மத்தை ஒற்றுமைப்படுத்த அல்லாஹ் அவர்களுக்கு உதவ வேண்டும் எனப் பிரார்த்தனை செய்தார்கள்.

இம்மாநாட்டின் தீர்மானங்களாக பின்வரும் 11 அம்சங்கள் அறிவிக்கப்பட்டன. இந்த 11 விதந்துரைப்புக்களையும் உள்ளடக்கியதாக எதிர்வரும் காலத்தில் இவ்வாறான மாநாடுகள் தொடர்ச்சியாக நடைபெற வேண்டும் என்பதும் உறுதிப்படுத்தப்பட்டது.

01. இம்மாநாடு இரு புனிதஸ்தலங்ளின் சேவகரின் கீழ் நடைபெறுவதற்கு ஒப்புதல் வழங்கிய மன்னர் சல்மான் பட்டத்து இளவரசர் முஹம்மது பின் சல்மான் ஆகியோருக்கு இம்மாநாடு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றது. அவர்களுக்காகப் பிரார்த்திக்கின்றது.

02. சமூகங்களுக்கிடையில் சக வாழ்வு, சகிப்புத்தன்மையை வலுப்படுத்தல், கருத்து முரண்பாடு மற்றும் பிரிவினையை ஒழித்தல், இஸ்லாமிய ஒற்றுமையைப் பலப்படுத்தல், இஸ்லாத்துக்காகவும் முஸ்லிம்களுக்காகவும் சேவை செய்தல் என்பவற்றில் அறிஞர்களாலும் மார்க்கத் தீர்ப்பாயங்களாலும் இஸ்லாமிய விவகார அமைச்சுக்கள், திணைக்களங்களாலும் செய்யப்பட்டிருக்கும் முயற்சிகளை இம்மாநாடு பாராட்டுகின்றது.

03. நிச்சயமாக இஸ்லாமிய சமூகத்தின் ஒற்றுமைக்கான முதலாவது அத்திவாரம் வணக்க வழிபாடுகளினால் அல்லாஹ்வை ஒருமைப்படுத்துவதுதான். இதன்பாலே அனைத்து நபிமார்களும் அழைத்தார்கள் என்பதை இம்மாநாடு உறுதிப்படுத்துகின்றது.

04. பத்வாக்கள் வழங்குவதற்கு தகுதியானவர்களிடமிருந்தே பத்வாக்கள் பெறப்பட வேண்டும். உதிரியான பத்வாக்களைத் தவிர்ப்பதும் அத்தியவசியமானது என்பதை இம்மாநாடு வலியுறுத்துகின்றது.

05. நாஸ்தீகம், பண்பாட்டுச் சீரழிவு என்பவற்றிலிருந்து சமூகங்களைப் பாதுகாப்பதற்கு பரிகாரம், பாதுகாப்பு என்பவற்றை இலக்காகக் கொண்ட பல்வேறு செயற்றிட்டங்களின் ஊடாக இவை மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதையும் இம்மாநாடு வலியுறுத்துகின்றது.

06. இஸ்லாத்துக்காகவும் முஸ்லிம்களுக்காக சேவை செய்வதிலும் மார்க்க விவகாரத் திணைக்களங்கள், மார்க்கத் தீர்ப்பாயங்கள், அறிஞர்களுக்கு மத்தியில் தொடர்ச்சியான உறவைப் பேணி அவர்களுக்கிடையில் முழுமைத்துவத்தை உருவாக்குவதற்காகவும் சவூதி அரேபிய அரசாங்கத்தினால் வழங்கப்பட்டு வரும் பங்களிப்புக்களை இம்மாநாடு பெரிதும் மதிக்கின்றது.

07. உலக முஸ்லிம்களுக்கு மத்தியில் கருத்தொற்றுமை, உடன்பாடு என்பவற்றை உறுதிப்படுத்தும் வகையில் இஸ்லாமிய விவகாரங்களில் அறிஞர்கள், மார்க்கத் தீர்ப்பாயங்கள், இஸ்லாமிய விவகாரத் திணைக்களங்கள் தொடர்ச்சியான உறவையும் அனுபவப் பகிர்வையும் ஒத்துழைப்புக்களையும் வழங்குமாறு இம்மாநாடு அழைப்பு விடுக்கின்றது.

08. குர்ஆனையும் ஸுன்னாவையும் பற்றிப்பிடிப்பதே மார்க்கத்தின் அடிப்படை, வழிகேடுகள், நெறி பிறழ்வுகளிலிருந்து அதன் மூலமே பாதுகாக்கப்பட முடியும் என்பதை இம்மாநாடு உறுதிப்படுத்துகிறது.

09.பண்பாட்டுச் சிதைவு, எல்லை மீறல், தீவிரவாதம் என்பவற்றுக்கு எதிராகப் போராடுவதும் அவசியம் எனவும் திட்டமிடப்பட்ட நிகழ்ச்சிகள் மூலம் இமாம்கள், கதீப்களை தயார்படுத்துவதன் ஊடாக இதை சாத்தியப்படுத்தலாம் என்பதையும் இம்மாநாடு உறுதிப்படுத்துகின்றது.

10. தீவிரவாதக் குழுக்களின் சிந்தனைகள் அதன் ஒழுங்கீனமான போக்குகள் அதனால் இஸ்லாத்துக்கு ஏற்படும் ஊறுகள் என்பவற்றை எடுத்துரைப்பதும் அவைகள் தங்கள் செயற்பாடுகளின் மூலம் பித்னாக்களையும் பிளவுகளையும் தோற்றுவிக்கின்றன. சமூகங்களுக்கிடையில் பாதுகாப்பின்மை மற்றும் நிலையற்ற தன்மையையுமே பரப்புகின்றன என்பதை தெளிவுபடுத்துவதையும் இம்மாநாடு அவசியப்படுத்துகின்றது.

11. புனித குர்ஆனின் பிரதிகளை தொடர்ச்சியாக எரித்து கோபத்தை ஊட்டும் செயற்பாடுகளில் ஈடுபடுவதை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கின்றது. இது மனித குலத்துக்கு மத்தியில் இணைந்து வாழ்வதற்கான விழுமியங்களுக்கும் முரணானதாகும் என்பதை இம்மாநாடு உறுதிப்படுத்துகின்றது.



கலாநிதி, M.B.M. இஸ்மாயில் (மதனி)
பணிப்பாளர்,
தாருஸ்ஸலாம்
அரபுக் கல்லூரி, வாழைச்சேனை

## சாய்ந்தமருது பல்நோக்குக் கூட்டுறவுச் சங்க மாதிரிக் கடை பூட்டு

# பல இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் முகாமையாளரால் மோசடி செய்தமை அம்பலம்

பொலிவேரியன் செய்தியாளர்

சாய்ந்தமருது பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்குச் சொந்தமான மாதிரிக் கடை திறந்து வைக்கப்பட்டு பொதுமக்களுக்கு அத்தியாவசியப் பொருட்களையும் ஏனைய முக்கியமான பொருட்களையும் நியாயமான விலையில் விற்பனை செய்து வந்தமை மக்களுக்கு மிகவும் உதவியாக இருந்தது.

ஆனால், மேற்படி மாதிரிக் கடை பல மாத காலமாக மூடப்பட்டிருப்பது பொதுமக்களின் கவனத்துக்கு வந்தவேளை, சங்க முகாமையாளரிடம் இதுபற்றி விசாரணை செய்தனர். குறித்த மாதிரிக் கடை முகாமையாளர் சுகயீனம் காரணமாக விடுமுறையில் இருப்பதாக பதில் தெரிவித்திருந்தார்.

இதனை ஏற்றுக்கொள்ளாத பொதுமக்கள், கல்முனை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரிடம்



மே மாதம் 15ஆம் திகதி அரச தகவல் அறியும் சட்டத்திட்டங்களுக்கு அமைவாக எழுத்து மூலம் கேட்கப்பட்டபோது, ஜூன் மாதம் 20ஆம் திகதிய கடிதப்படி மாதிரிக்கடை முகாமையாளர் சுகயீன விடுமுறையில் இருப்பதாகவும் ஆனால் மாதிரிக்கடை 2022ஆம் ஆண்டு மார்ச் 31ஆம் திகதி வருடாந்த இருப்பெடுப்பின்போது 12,84,297.59சதம் பெறுமதியான பெருந் தொகைப்பொருட்கள் மாதிரிக் கடை முகாமை யாளரால் மோசடி செய்யப்பட்டுள்ளதாகவும் கல்முனை கூட்டுறவுச் சங்க உதவி ஆணையாளர் எழுத்து மூலம் அறிவித்தார்.

அதனைத்தொடர்ந்து பொதுமக்கள் சங்க நிர்வாகத்தினரும் மார்ச் 31ஆம் திகதி வருடாந்த இருப்பெடுப்பின்போது ஏற்பட்ட குறைவு எவ்வளவு என்றும் மாதிரிக்கடை முகாமையாளரிடம் சங்கம் பெற்றுக்கொண்ட ரொக்கப் பிணை, ஆதனப் பிணை என்ற விபரங்களை அரச தகவல் அறியும் சட்ட திட்டங்களுக்கமைவாக கேட்டபோது சங்க நிர்வாகம் இதுவரை வெளிப்படுத்தவில்லை.

ஆகவே, கூட்டுறவு திணைக்களம் இதனை விசாரணை செய்து நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com




நிந்தவூர் செய்தியாளர்

காரைதீவு பிரதேச சபைக்குட்பட்ட விபுலானந்த தேசிய பாடசாலைக்கு செல்லும் வீதியில் அமைந்துள்ள பிரதான பாலம் இடிந்து விழும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளது.

இப்பாலத்தை தினசரி ஆயிரத்துக்கும் அதிகமான பொதுமக்கள் பயன்படுத்தி வருகின்றனர். காரைதீவு விபுலானந்த தேசிய பாடசாலைக்கு செல்லும் ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள்



பயணிக்கும் இவ்வீதியில் கனகரெட்ணம் விளையாட்டு மைதானம், விதாதா வளநிலையம், வீரபத்திரசுவாமி ஆலயம், ஸ்ரீசித்தானைக்குட்டி ஆலயம் என்பன அமைந்துள்ளன.

காரைதீவு தோணாவுக்கு மேலாக அமையப்பெற்றுள்ள இப்பாலம், சுமார் 50 வருடங்கள் பழைமை வாய்ந்தது. பாலத்துக்குள் போடப்பட்டுள்ள இரும்புக் கம்பிகள் துருப்பிடித்து வெளியே தெரிவதோடு, பாலத்தினூடாக வாகனங்கள் செல்லும்போது ஒருவிதமான அதிர்வும் ஏற்பட்டு எந்நேரத்திலும் இடிந்து விழக்கூடிய நிலையில் உள்ளது.

அண்மையில் இவ்வீதி கார்பட் வீதியாக புனரமைப்பு செய்யப்பட்டபோது பிரதேசவாசிகளால் சம்பந்தப்பட்ட பொறியியலாளரிடம் இப்பாலம் சம்பந்தமாக எடுத்துக் கூறியபோதும் எந்தவித நடவடிக்கைகளும் இதுவரை எடுக்கப்படவில்லை. எனவே, தற்போது பழுதடைந்த பாலத்தை முற்றாக அகற்றி புதிய பாலமொன்றை அமைத்து தருமாறு பொதுமக்கள் வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடம் வேண்டுகோள் விடுக்கின்றனர்.




யஹியாகான் பௌண்டேஷனால் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் சமூகசேவை செயற்றிட்டத்தின்கீழ் வறுமைக்கோட்டின்கீழ் வாழும் குடும்பங்களுக்கு தையல் இயந்திரங்கள் வழங்கும் நிகழ்வு சாய்ந்தமருதில் அண்மையில் இடம்பெற்றது. இதன்போது பௌண்டேஷனின் தலைவர் ஏ.சி.யஹியாகான் கலந்துகொண்டு தையல் இயந்திரத்தை வழங்கினார்.

படம்: மாவடிப்பள்ளி செய்தியாளர்

## ஸ்ரீ செண்பகா மகா வித்தியாலயத்தில் விசேட கல்வி அலகு பிரிவு திறந்து வைப்பு



கிண்ணியா செய்தியாளர்

திருகோணமலை மூதூர் கல்வி வலயத்துக்குட்பட்ட ஈச்சலப்பற்று தி/மூ/ஸ்ரீ செண்பகா மகாவித்தியாலயத்தில் விசேட கல்வி அலகு பிரிவொன்று செவ்வாய்க்கிழமை (22) திறந்துவைக்கப்பட்டது.

வெருகல் பிரதேச செயலாளர் எம்.ஏ.அனஸ் தலைமையில் இடம்பெற்ற குறித்த விசேட கல்வி அலகை சமூக சேவைகள் திணைக்களம் இணைந்து செயற்படுத்தியது. விசேட தேவையுடைய மாணவர்களுக்கும் கல்வியை வழங்கும் நோக்கில் சமூக சேவைகள் திணைக்களம் இவ்வாறான திட்டத்தை செயற்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதில் மாவட்ட சமூக சேவைகள் இணைப்பாளர் த.பிரணவன், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், உதவி பிரதேச செயலாளர், பிரதேச செயலக சமூக சேவைகள் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், விசேட கல்வி அலகு மாணவர்களின் பெற்றோர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.



'சுகாதாரமான சுற்றுச்சூழலை உருவாக்குவோம்' எனும் தொனிப்பொருளில் அன்னமலை பிரதேச வைத்தியசாலை வளாகத்தில் இடம்பெற்ற சிரமதான நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (20) நடைபெற்றது. இதன்போது, சவளக்கடை பொலிஸ் உத்தியோகத்தர்கள், சமுர்த்தி பயனாளிகள் என பலரும் கலந்துகொண்டு தத்தமது பங்களிப்புகளை வழங்கியிருந்தனர்.

படம்: அம்பாறை மாவட்ட செய்தியாளர்





மட்டக்களப்பு குருக்கள்மடம் அருள்மிகு ஸ்ரீலஸ்ரீ செல்லக்கதிர்காம சுவாமி ஆலய வருடாந்த மகோற்சவம் ஆலய பிரதம குரு சிவத்திரு நவரெத்தின முரசொலிமாறன் குருக்கள் தலைமையில் திங்கட்கிழமை (21) கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. தொடர்ந்து 10 நாட்கள் இடம்பெறும் திருவிழாவில் 28ஆம் திகதி வேட்டைத் திருவிழாவும் 29ஆம் திகதி தேர்த்திருவிழாவும் இடம்பெற்று 30ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையவுள்ளது.

படங்கள்: மட்டக்களப்பு, குருக்கள்மடம் செய்தியாளர்கள்

## 'இனிய நந்தவனம்' சஞ்சிகை வெளியீடு காத்தான்குடியில்

ஆரையம்பதி செய்தியாளர்

காத்தான்குடி இஸ்லாமிய இலக்கிய கழகம் நடத்திய தமிழ்நாட்டில் இருந்து வெளிவரும் 'இனிய நந்தவனம்' இலக்கிய சஞ்சிகை இலங்கை சிறப்பிதழ் வெளியீட்டின் அறிமுக விழா காத்தான்குடி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் திங்கட்கிழமை(21) இடம்பெற்றது.

இஸ்லாமிய இலக்கிய கழகத்தின் தலைவர் கவிமாமணி ரீ.எல்.ஜவ்பர்கான் தலைமையில் இடம்பெற்ற இவ் அறிமுக விழாவில் பிரதம அதிதியாக



மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா கலந்துகொண்டிருந்தார்.

முதன்மை விருந்தினர்களாக கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் பணிப்பாளர் எஸ்.நவநீதன் மற்றும் காத்தான்குடி பிரதேச செயலாளர் யூ.உதயசிறீதர், சிறப்பு விருந்தினர்களாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஆலோசகர் இலக்கிய புரவலர் ஹாசிம் உமர் மற்றும் தினகரன், வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் செந்தில் வேலவர் உட்பட சிறப்பு அதிதிகள் பலரும் கலந்துகொண்டதுடன் இந்நூலின் முதன்மை பிரதியினை மட்டக்களப்பு செ‌ன். ஜோன்ஸ் அம்பியூலன்ஸ் மாவட்ட தலைவர் ஏ.எல்.எம்.மீராசாகிபு பெற்றுக்கொண்டார்.





கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் ஒரு பிரிவாக இயங்கிவரும் கிறீன் வீச் ஆங்கில பாலர் பாடசாலையின் கிறீன் டே நிகழ்வு அண்மையில் (16) நடைபெற்றது. இந்நிகழ்வில் மாணவர்களின் கைவண்ணத்தினாலான பச்சை நிறமுடைய ஆக்கங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்ததுடன், பச்சை நிறத்திலான கேக் வெட்டி கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் பாடசாலை அதிபர் ஏ.ஜீ.எம்.றிசாத், கிறீன் வீச் பாடசாலை பணிப்பாளர் எம்.ஜூபிர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

படங்கள்: பொலிவேரியன் செய்தியாளர்

## 'இறவா மழலை' கவிதைத்தொகுப்பு வெளியீடு





புளியந்தீவு செய்தியாளர்

ஞாலத்தில் மழலைகள் இறந்து மடிந்தாலும் 'இறவா மழலை' கவிதைத்தொகுப்பு காலந்தோறும் உயிர்வாழும். அதற்கு உதாரணமாக யுவித்திகா இளங்கோவனின் 'இறவா மழலை' கவிதைத் தொகுப்பு அமைந்துள்ளதென மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா புகழாரம் சூட்டினார்.

பெரியபோரதீவு பாரதி வித்தியாலய உயர்வகுப்பு மாணவி இளங்கோவன் யுவித்திகாவின் கன்னிப்படைப்பான 'இறவா மழலை' கவிதைத் தொகுதியின் வெளியீட்டு விழா ஞாயிற்றுக்கிழமை (20) சமூக முன்னோடி கே.தினேஸின் தலைமையில் நடைபெற்றபோது இவ்வெளியீட்டு விழாவில் பிரதம அதிதியாக மட்டு. அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா கலந்துகொண்டார்.

இதன்போது பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கவிதைகள் மனித உணர்வுகளை சுவைபடச் சொல்பவை, யுவித்திகாவின் 200 கவிதைகள் கொண்ட இந்நூல் சமூகத்தின் புரையோடிப்போன பிரச்சினைகளை வாசகர்களின் மனதில் ஆழமாக பதியவைக்கும் பாங்கு கொண்டவை மட்டுமல்ல, அதன் கவிதை நடையும் உயிரோட்டமாக இருக்கிறது. இதனை பெரியபோரதீவு பட்டாபுரம் இளைஞர் ஒன்றியம் பொறுப்பேற்று வெளியிட்டுள்ளது. இது பாராட்டத்தக்க விடயமாகும்.

பாரதி வித்தியாலய மாணவி யுவித்திகாவுக்கு பாரதியின் கவித்துவம் இருக்கவேண்டுமல்லவா! யுவித்திகாவின் திறமையை யாரும் பாராட்டாமல் இருக்க முடியாது. எவ்வாறாயினும், யுவித்திகா கவிதைத் திறமையோடு தன்னை மட்டுப்படுத்திக் கொள்ளாமல் பல்கலைக்கழக கல்வியை தொடரவேண்டும் என்ற ஆதங்கம் என்னிடம் உண்டு. இப்பகுதியின் இளைஞர் ஒன்றியம் திறமைகளை தாங்கிக்கொண்டு திரைமறைவில் வாழ்பவர்களை வெளிக்கொணர்வது கண்டு மகிழ்ச்சியடைவதோடு, பாராட்டுகளையும் தெரிவிக்கிறேன் - என்று அவர் மேலும் தெரிவித்தார்.

24ஆவது சிறந்த ஊடகவியல் விருதுகள் 2022

விருது பிரிவுகள் பட்டியல் (அச்சு ஊடகம்)

- ஆண்டின் மிகச் சிறந்த ஊடகவியலாளருக்கான மேர்வின் டி சில்வா விருது (அனைத்து மொழிகளையும் உள்ளடக்கி ஒரு விருது)
- ஆண்டின் மிகச் சிறந்த புலனாய்வு ஊடகவியலாளருக்கான விருது (அனைத்து மொழிகளையும் உள்ளடக்கி ஒரு விருது)
- ஆண்டின் மிகச் சிறந்த சுவாரஷ்யமான செய்தி வெளியீட்டிற்கான விருது (அனைத்து மொழிகளையும் உள்ளடக்கி ஒரு விருது)
- ஆண்டின் மிகச் சிறந்த இளம் ஊடகவியலாளருக்கான டென்ஸில் பீரிஸ் விருது (அனைத்து மொழிகளையும் உள்ளடக்கி ஒரு விருது)
- ஆண்டின் மிகச்சிறந்த சுகாதார மற்றும் மருத்துவ அறிக்கையிடலுக்கான விருது (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)
- ஆண்டின் மிகச் சிறந்த சூழலியல் அறிக்கையிடலுக்கான விருது (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)
- ஆண்டின் மிகச் சிறந்த விளையாட்டுத்துறை ஊடகவியலாளருக்கான விருது (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)
- ஆண்டின் மிகச் சிறந்த பத்திரிகை பக்க வடிவமைப்புக்கான விருது (அனைத்து மொழிகளையும் உள்ளடக்கி ஒரு பரிசு)
- ஆண்டின் மிகச் சிறந்த வணிகவியல் மற்றும் நிதியியல் ஊடகவியலாளருக்கான விருது (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)
- ஆண்டின் மிகச் சிறந்த கருத்துப்பட ஓவியருக்கான விருது (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)
- ஆண்டின் மிகச் சிறந்த நெருக்கடியான சூழ்நிலைகளின் கீழ் அறிக்கையிடலுக்கான பேராசிரியர் கைலாசபதி விருது (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)
- ஆண்டின் மிகச் சிறந்த புகைப்பட ஊடகவியலாளருக்கான விருது (அனைத்து மொழிகளையும் உள்ளடக்கி ஒரு விருது)
- ஆண்டின் மிகச் சிறந்த பத்தி எழுத்தாளருக்கான பி.ஏ. சிறிவர்த்தன விருது (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)
- தகவல் அறியும் உரிமை சட்டத்தை பயன்படுத்தி எழுதப்பட்ட ஆண்டின் மிகச்சிறந்த செய்தி அல்லது விவரணத்திற்கான விருது (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)
- ஆண்டின் மிகச் சிறந்த சமூகப் பிரச்சினைகளை அறிக்கையிடலுக்கான சுப்பிரமணியம் செட்டியார் விருது (அனைத்து மொழிகளையும் உள்ளடக்கி ஒரு விருது)
- ஆண்டின் மிகச் சிறந்த விவரண எழுத்தாளருக்கான உபாலி விஜேவர்த்தன விருது (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)

விருது பிரிவுகள் பட்டியல் (பத்திரிகை இணையத்தளங்கள்)

- மிகச் சிறந்த பத்திரிகை இணையத்தளம் (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)
- மிகச் சிறந்த காணொளி ஆக்கம் (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)

(தமிழ்/சிங்களம்/ஆங்கிலம்) : ஒவ்வொரு மொழிப் பிரிவிலும் ஒவ்வொரு பரிசு

2022 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதிக்கும் டிசம்பர் 31 ஆம் திகதிக்கும் இடையில் பத்திரிகையொன்றில் தமது ஆக்கங்கள். கருத்துப்பட ஓவியங்கள் மற்றும் புகைப்படங்களின் பிரசுரங்களைக் கொண்ட விண்ணப்பதாரிகள் பத்திரிகையிலிருந்து பெறப்பட்ட தமது மூல ஆக்கங்கள். கருத்துப்பட ஓவியங்கள் அல்லது புகைப்படங்களை ஒவ்வொரு பிரிவுக்கும் தலா 5 வீதம் சமர்ப்பிக்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. மூல பத்திரிகை ஆக்கங்கள் கிடைக்கப்பெறாத பட்சத்தில் பத்திரிகை ஆசிரியர் அல்லது பத்திரிகை ஆசிரியர்கள் சங்கத்தைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவரின் அத்தாட்சிப்படுத்தலுடன் ஆக்கத்தின் பிரதியை அனுப்ப பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

சுதந்திர நடுவர் குழுவினர் வெற்றியாளர்களைத் தெரிவு செய்வர்.

விண்ணப்ப முடிவுத் திகதி: வியாழக்கிழமை, ஆகஸ்ட் 31, 2023.

அனைத்து ஆக்கங்களும் சரியாக கோப்புருவாக்கம் செய்யப்பட்டிருக்க வேண்டும். (தளர்வாக கட்டப்பட்ட பத்திரிகை ஆக்கங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது) ஆக்கங்கள் சகிதம் விண்ணப்பங்கள் குழுத் தலைவர், சிறந்த ஊடகவியல் விருதுகள் 2022, மேற்பார்த்து இலங்கை பத்திரிகை ஸ்தாபனம், 96, பேர்னார்ட் சொய்ஸா மாவத்தை ( கிருள வீதி), கொழும்பு 5 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

# குடிநீர் தேடி அலையும் விலங்குகள் விபத்தில் சிக்கி உயிரிழக்கும் பரிதாபம்!

மட்டக்களப்பு செய்தியாளர்

தற்போது நிலவும் கடும் வறட்சி நிலைமை காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் குடிநீரைத் தேடிச் செல்லும் விலங்கினங்களும் விபத்தில் சிக்குண்டு உயிரிழப்பதை அவதானிக்க முடிகின்றது.

இவ்வாறு அரிய வகை உயிரினங்களும் குடிநீரைத் தேடிச் செல்லும்போது உயிர்களைத் துறக்க வேண்டியுள்ளது. இந்நிலையில், மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை மேற்கு பிரதேச செயலகப் பிரிவிலுள்ள பல கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தற்போதைய கடும் வறட்சியினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதுடன் அப்பகுதியில் உள்ள கால்நடைகள் உன்னிச்சை - மட்டக்களப்பு பிரதான வீதி ஊடாக தினசரி குடிநீருக்காகவும் உணவுக்காகவும் அலைந்து திரிவதனால் வீதி விபத்துகள் அதிகம் ஏற்படுகின்றன.







அப்பகுதியில் இந்நிலைமை இவ்வாறு காணப்படுகின்ற போதிலும், மேய்ச்சலுக்குச் செல்லும் கால்நடைகளை திருடர்களும் மிகவும் சூட்சுமமான முறையில் களவாடிச் செல்வதாகவும் அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, மட்டக்களப்பு நகரில் இருந்து மிக உயரமான இடத்திலுள்ள உன்னிச்சை கிராமத்தில் தினசரி காட்டு விலங்குகளும் தற்போது குடிநீருக்காக கிராமத்துக்குள் வரும்போது அவை வீதியில் செல்லும் கனரக வாகனங்களில் சிக்குண்டு விபத்துக்குள்ளாகின்றன. இதேவேளை, அரிய வகை உயிரினங்களும் ஏனைய கால்நடைகளும் உயிரிழக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு செவ்வாய்க்கிழமை(22) உன்னிச்சை பிரதான வீதியில் அரிய வகை மர அணில் ஒன்று விபத்தில் சிக்கி உயிரிழந்ததையும் அவதானிக்க முடிந்தது. அப்பகுதி மக்களின் வாழ்வாதாரமாகக் காணப்படும் இந்தக் கால்நடைகளுக்கு வேண்டிய குடிநீரை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வழங்க உடன் முன்வர வேண்டும் என்பதே அங்குள்ள மக்களின் கோரிக்கை.

நிலவும் கடும் வறட்சி காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை மேற்கு பிரதேச செயலகப் பிரிவில் மாத்திரம் ஆயிரத்து 800 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. மேலும் ஆறு பிரதேச செயலகப் பிரிவுகளில் 09ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவிக்கின்றது.

வாகரை வடக்கு, மண்முனை மேற்கு, வெல்லாவெளி, மண்முனை தென்மேற்கு உள்ளிட்ட பிரதேச செயலகப் பிரிவுகளில் அதிகளவிலான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இதேவேளை, மாவட்டத்தின் படுவாங்கரை பகுதியில் மேற்கொண்டுள்ள எங்களது விவசாயச் செய்கை, மேட்டுநிலப் பயிர்ச்செய்கை உள்ளிட்ட வாழ்வாதார தொழில்களும் வறட்சியினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

# இலங்கைக்கான உலக உணவுத் திட்ட பணிப்பாளர் - அரச அதிபர் சந்திப்பு



மட்டக்களப்பு, களுதாவளை செய்தியாளர்

உணவு பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு உலக உணவுத் திட்ட நிறுவனம் அரசாங்கத்துடன் இணைந்து பல செயற்றிட்டங்களை மட்டக்களப்பில் நடைமுறைப்படுத்தி வருகின்றது.

அந்தவகையில், மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா மற்றும் இலங்கைக்கான உலக உணவுத் திட்டப் பணிப்பாளர் அப்துல் சித்திக் ஆகியோருக்கிடையிலான விசேட சந்திப்பு மாவட்ட செயலகத்தில் திங்கட்கிழமை(21) இடம்பெற்றது.

உலக உணவுத்திட்டத்தினால் போதிய வருமானம் அற்ற தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு உலருணவுப் பொருட்கள் விநியோகம் மற்றும் மக்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்துவதற்காக கால்நடைகளும் வழங்கப்பட்டு வருகின்றன. இதன்போது உலக உணவுத் திட்டத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டத்துக்காக அரச அதிபர் இலங்கைக்கான பணிப்பாளருக்கு நன்றி தெரிவித்தார். மேலும், தற்போதைய வறட்சியான காலநிலை காரணமாக மாவட்டத்தில் பாதிப்புகளை இக் கலந்துரையாடலின்போது சுட்டிக்காட்டினார்.

இந்நிகழ்வில் ஜனாதிபதி செயலக உலக உணவுத் திட்டப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி சுலக்சன ஜயவர்த்தன, மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி சசிகலா புண்ணியமூர்த்தி, பிரதி திட்டமிடல் பணிப்பாளர்களான ஆர்.ஜதிஸ்குமார், வி.நவநீதன், உலக உணவுத் திட்ட உயர் அதிகாரிகள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# தொடரும் கடலரிப்பினால் பள்ளிவாசலுக்குச் சேதம்



சாய்ந்தமருது செய்தியாளர்

சாய்ந்தமருது பிரதேசத்தில் தொடரும் கடலரிப்பு காரணமாக மஸ்ஜிதுல் ஹஸனாத் பள்ளிவாசலின் ஒரு பகுதி கடுமையாக சேதமுற்றுள்ளதுடன் சுற்று மதிலின் பின்புறம் கடலுக்கு இரையாகியுள்ளது.

ஒலுவில் துறைமுக நிர்மாணத்துக்கு பின்னரான காலப்பகுதியில் அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பகுதிகளில் பிரதேசத்துக்கு பிரதேசம் மாறிமாறி கடலரிப்பு உக்கிரமடைந்து காணப்படுகிறது.

சில மாதங்களுக்கு முன்னர் கடலரிப்பு காரணமாக சாய்ந்தமருது பிரதேசத்தில் சிறுவர் பூங்கா, மீனவர் வாசிகசாலை, பௌசி விளையாட்டு மைதானம், மாளிகைக்காடு கலாசார மண்டபம் என்பவற்றின் பின்புற சுற்றுமதில்கள் இடிந்து வீழ்ந்துள்ளன. வாடிகள், தென்னந்தோப்புகளும் காவுகொள்ளப்பட்டுள்ளன. தற்போது கடந்த சில நாட்களாக உக்கிரமடைந்துள்ள கடலரிப்பினால் ஹஸனாத் பள்ளிவாசலின் பின்புற கட்டிடம் சேதமடைந்திருக்கிறது. இதனால் பள்ளிவாசல் பெரும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளது.

அத்துடன் அதனைச் சூழவுள்ள கட்டிடங்களும் பாதிப்புக்குள்ளாகும் நிலை தோன்றியுள்ள அதேவேளை, அழிவடைந்துள்ளன. இவ்விடயம் பற்றி திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பைசால் காசிமின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டதையடுத்து அவர், உடனடியாக கரையோரம் பேணல் திணைக்களம் மற்றும் அனர்த்த முகாமைத்துவ திணைக்களம் என்பவற்றின் உயரதிகாரிகளைத் தொடர்பு கொண்டு நிலைமைகளை எடுத்துக் கூறியுள்ளதுடன் கடலரிப்பைக் கட்டுப்படுத்துவதற்கான அவசர நடவடிக்கைகளையும் எடுக்குமாறு வலியுறுத்தியுள்ளார்.

# ஜனாஸா அடக்கம் குறித்து பெண்களுக்கான கருத்தரங்கு




மாளிகைக்காடு, இஸ்மாயில்புரம் செய்தியாளர்கள்

மனித மேம்பாட்டு அமைப்பு ஸ்ரீலங்கா மற்றும் வை.எம்.எம்.ஏ. மாவடிப்பள்ளி கிளையின் ஏற்பாட்டில் சாய்ந்தமருது சைனிங் ஸ்டார் பெண்கள் அமைப்பின் காரியாலயத்தில் பெண்களுக்கான ஜனாஸா அடக்கும் முறை சம்பந்தமான செயன்முறைக் கருத்தரங்கு திங்கட்கிழமை(21) நடைபெற்றது.

மனித மேம்பாட்டு அமைப்பின் கலாசாரப் பிரிவின் தலைவர் எ.எம்.எ.அஸ்ரி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வளவாளராக மாவடிப்பள்ளி வை.எம்.எம்.ஏயின் செயலாளர் ஏ.அஷ்ரப் (மௌலவி) கலந்து கொண்டு விரிவுரையாற்றினார்.

இந்நிகழ்வில் சாய்ந்தமருது 14ஆம் பிரிவின் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் எம். அபுல் ஹுதா, சைனிங் ஸ்டார் பெண்கள் அமைப்பின் தலைவி பிரோஸா காரியப்பர், செயலாளர் ஆயிஷா சித்தீக்கா, பொருளாளர் தஸ்னீம் காரியப்பர் மற்றும் மனித மேம்பாட்டு அமைப்பின் கலாசாரப் பிரிவின் துணைத் தலைவர் ஏ.எல். றில்வான், உயர் பீட உறுப்பினர் எம்.முபீத் என பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது இஸ்லாமிய ஜனாஸா அடக்கும் முறை சம்பந்தமான பல விடயங்கள் செயல்முறை மற்றும் கேள்வி பதில் ரீதியாக கலந்துகொண்ட பிரதிநிதிகளுக்கு விரிவுரை அளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# அட்டாளைச்சேனை பயிற்சிக் கலாசாலையை கல்விக் கல்லூரியுடன் இணைக்கும் நடவடிக்கை இடைநிறுத்தம்

அட்டாளைச்சேனை மேலதிக செய்தியாளர்

அட்டாளைச்சேனை அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையை கல்விக் கல்லூரியுடன் இணைக்கும் நடவடிக்கையை கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜயந்த இடைநிறுத்தியுள்ளதாக முன்னாள் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பிரதி தேசிய அமைப்பாளருமான எம்.எஸ்.உதுமாலெப்பை செவ்வாய்க்கிழமை(22) தெரிவித்தார்.



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், அட்டாளைச்சேனை அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையை கல்விக்கல்லூரியுடன் இணைக்கும் நடவடிக்கையை இடைநிறுத்திய கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜயந்தவுக்கு எனது நன்றிகள். எனது தலைமையில் அட்டாளைச்சேனை அல் - இபாதா கலாசார மன்றத்தின் உயர்பீட உறுப்பினர்கள் அண்மையில் கல்வியமைச்சரை சந்தித்தோம். இச்சந்திப்பின்போது, அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை 80 வருட காலமாக தேசிய மட்டத்தில் ஆசிரியர்களுக்கான பயிற்சிகளை வழங்கி வருகின்றமை குறித்தும் இக்கல்லூரி உருவாக்கப்பட்டு இன்று வரை தேசிய மட்டத்திலும் மாகாண மட்டத்திலும் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்வது குறித்தும் தெளிவுபடுத்தப்பட்டது.

பின்னர், அண்மையில் கல்வியமைச்சில் இருந்து அட்டாளைச்சேனை அரசினர் ஆசிரியர் பயிற்சி கலாசாலைக்கு விஜயம் செய்த கல்வியமைச்சின் உயர் அதிகாரிகள் குழு, குறித்த பயிற்சிக் கலாசாலையை அட்டாளைச்சேனை தேசிய கல்விக் கல்லூரியுடன் இணைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டது.

நமது நாட்டில் தமிழ் மொழி ஆசிரியர்களை பயிற்றுவிப்பதற்காக அட்டாளைச்சேனை, மட்டக்களப்பு, கொட்டகலை, கோப்பாய் ஆகிய அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகள் இயங்கி வருகின்றன. அந்தவகையில், கல்வியமைச்சினால் அனைத்து தமிழ் மொழி அரசினர் ஆசிரியர் பயிற்சி கலாசாலைகளையும் கல்விக்கல்லூரிகளுடன் இணைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுமானால் எதுவித பிரச்சினையும் இல்லை. மாறாக, 80 வருட காலமாக இயங்கிவரும் அட்டாளைச்சேனை அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையை மட்டும் தேசிய கல்விக்கல்லூரியுடன் இணைக்கும் முயற்சிகளை மேற்கொண்ட நடவடிக்கையானது மக்கள் மத்தியில் பாரிய அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

இதுதொடர்பான விடயங்களைக் கேட்டறிந்த கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜயந்த, அட்டாளைச்சேனை அரசினர் ஆசிரியர் பயிற்சி கலாசாலையை அட்டாளைச்சேனை தேசிய கல்விக்கல்லூரியுடன் இணைக்கும் நடவடிக்கையை உடனடியாக இடைநிறுத்துமாறும் இது சம்பந்தமான அறிக்கையை சமர்ப்பிக்குமாறும் ஆசிரியர் கல்விக்குப் பொறுப்பான பிரதம ஆணையாளர் புண்ணியதாசவுக்கு பணிப்புரை விடுத்தார்.

இவ்வாறான நடவடிக்கையை மேற்கொண்ட கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜயந்த மற்றும் பிரதம ஆணையாளர் புண்ணியதாசவையும் கல்வியமைச்சில் நேரடியாகச் சந்தித்து மக்கள் சார்பாக நன்றி தெரிவித்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# அருகம்பேயில் சுற்றுலா திட்டம் ஆரம்பித்து வைப்பு



இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையானது சுற்றுலா மற்றும் கைத்தொழில் சம்மேளனத்துடன் இணைந்து அண்மையில்(16) அருகம்பேயில் பல சுற்றுலா நிகழ்ச்சித் திட்டங்களை ஆரம்பித்து வைத்தது.

அருகம்பே பிரதான கடற்கரையில், கடற்கரை சுத்தம் செய்தல், களப்பு பிரதேசங்களில் சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச் செல்லும் சிறிய படகு ஓட்டுனர்களுக்கு பாதுகாப்பு அங்கிகள் வழங்கி வைத்தல், அருகம்பே கடற்கரையில் குப்பைத் தொட்டியை வைத்தல், ஊரணி விஸ்கி கடல் பிரதேசத்தில் மண் அரிப்பைத் தடுக்க மண் மூட்டைகள் அடுக்குதல் போன்ற வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

ஆரம்ப நிகழ்வில், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் நளின் பெரேரா பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார். அறுகம்பே சுற்றுலா வலயத்துக்கு, சுற்றுலா மற்றும் காணி அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ, இந்த வேலைத்திட்டங்களை முன்னெடுக்குமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கினார்.

இந்நிகழ்வின் போது பணிப்பாளர் நாயகம் கூறியதாவது: சுற்றுலாத்துறையானது அதிக வருமானம் ஈட்டித்தரும் ஒரு துறையாகக் கருதப்படுகின்றது. இத்துறையின் வளர்ச்சியானது அதிக வேலைவாய்ப்பை பெற்றுத்தரும் அதேவேளை, பொருளாதார வளர்ச்சியாக பயன்படுத்தலாம் என்றும் சுட்டிக்காட்டினார்.

இவ்வேலைத் திட்டங்களில் தன்னார்வ தொண்டர்கள், இளைஞர் அமைப்பு,



விளையாட்டுக்கழகம், ஹோட்டல் உரிமையாளர்கள், அறுகம்பே வாகன உரிமையாளர்கள் சங்கம், அரச அதிகாரிகள், முப்படையினர், பொத்துவில் பொலிஸார், பிரதேச சபையினர், பிரதேச செயலக CCD மற்றும் MEPA ஆகியவற்றின் பல முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

சுற்றுலா மற்றும் கைத்தொழில்துறையின் தலைவர் ஏ.எம்.ஜாஃபர் மேற்படி திட்டத்துக்கு ஒத்துழைப்பை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். இவ்வேலைத்திட்டத்தை அமுல்படுத்த உதவிய சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ, அமைச்சின் செயலாளர், சுற்றுலா அதிகார சபைத் தலைவர், பொத்துவில் பிரதேச சபைச் செயலாளர் ஆகியோருக்கு நன்றி தெரிவித்தார்.

இந்நிகழ்வில் அமைச்சரின் ஊடகச் செயலாளர் தம்மிக்க யடிகிந்த, SLTDA உதவிப் பணிப்பாளர்களான வருண எட்டிபொல, அனுர ரணவீர, பொத்துவில் உள்ளூராட்சி அதிகார சபையின் செயலாளர் ரகுமான், SLTDA உதவிப் பணிப்பாளர் அருகம்பே சுற்றுலாப் பொலிஸ் பொறுப்பதிகாரி திசாநாயக்க மற்றும் STF அருகம்பே OIC ஆகியோரும் கலந்து கொண்டனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# சிவானந்தா தேசிய பாடசாலை ஆசிரியை தூக்கிட்டு தற்கொலை

மண்டூர் செய்தியாளர்

காத்தான்குடி பொலிஸ்பிரிவுக்குட்பட்ட புதுக்குடியிருப்பு பகுதியில் ஆசிரியை ஒருவர் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்ட சம்பவம் திங்கட்கிழமை(21) இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பிரதான வீதி புதுக்குடியிருப்பு பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தாயாரான மட்டக்களப்பு சிவானந்தா தேசிய பாடசாலை ஆசிரியை சுதாகரன் விஜிதகுமாரி என்பவரே இவ்வாறு தனக்குத்தானே தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டவராவார்.

அண்மையில் குறித்த பெண்ணின் கணவர் வெளிநாட்டில் இருந்து வீடு திரும்பிய நிலையில், குடும்பப் பெண்ணுக்கும் தாய் தந்தையருக்குமிடையில் ஏற்பட்ட தகராறே காரணம் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் வேண்டுதலுக்கமைவாக சம்பவ இடத்துக்குச் சென்ற காத்தான்குடி பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி வேலு மணிமாறன் சடலத்தைப் பார்வையிட்ட பின்னர் உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தும்படி சட்ட வைத்திய அதிகாரியிடம் பரிந்துரைத்தார். விசாரணைகளின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் கையளிக்கும்படி பொலிஸாருக்கு உத்தரவிட்டார். மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## போடியார் புலம்பல்!



***ஜனாதிபதி வேட்பாளராக மொட்டுக்கட்சி தெரிவு செய்த ஆள் இனப்படுகொலையாளியின் இளைய மகன் நாமல் ராஷபக்ஷ எண்டு அந்த கட்சி ஆக்கள் சொல்லியிருக்கிறாங்க எலுவா...? அப்பனும், சித்தப்பாமாரும், எலக்சன் கேட்டா ஒண்டுமே புடுங்க ஏலாது எண்டத தெரிஞ்சு இப்ப நாமல வச்சு படம் காட்டப்போறாங்க போல... இந்தப்படம் ஜனாதிபதி எலக்சனில எடுபடாது.. அதுவும் தமிழ்மக்கள் இந்த கொலகாற குடும்பத்துக்கு ஆதரவு வழங்கமாட்டாங்க.... இது அந்த குள்ள நரிக்குத்தான் இப்ப வாசியாக மாறப்போகுது...இருந்து பாருங்கவன் வாற வருஷம் நடக்கப்போற கூத்துகள.......!***

# நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு உணவகங்களில் திடீர் சோதனை

மாளிகைக்காடு, அம்பாறை மாவட்ட செய்தியாளர்கள்

ஹோட்டல்களின் தரத்தைப்பேணும் வகையில் நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினால் உணவகங்களில் திடீர் பரிசோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் கே.எல்.எம்.றயீஸின் வழிகாட்டலில் நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவு உணவகங்களில் திடீர் சோதனை இடம்பெற்றது. இதன்போது, மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற அதேவேளை, நீரில் கழுவாமல் வெட்டப்பட்ட வெங்காயம் மற்றும் சீர்குலைந்து காணப்பட்ட பாத்திரங்கள், ஒரு தடவை உபயோகித்த பின்னர் மீள்பாவனைக்காக வைக்கப்பட்ட எண்ணெய்கள் என்பனவும் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன.



எனவே, இதனை தடுக்கும்பொருட்டும் மனித நுகர்வுக்கு பொருத்தமற்றதை கண்டால் மக்கள் விழிப்புடன் இருந்து 067 22 50 834 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு தெரியப்படுத்தவும் என சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் கே.எல்.எம்.றயீஸின் கேட்டுக்கொண்டார்.

இதன்போது பொதுச் சுகாதார பரிசோதகர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பலர் கலந்து கொண்டு பரிசோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

# முத்தமிட்டதற்கு மன்னிப்புக் கோரிய ஸ்பெயின் உதைபந்து சங்கத் தலைவர்



பீபா மகளிர் உலகக்கிண்ண உதைபந்து தொடரில் உலக சம்பியனான ஸ்பெயின் அணியின் முன்கள வீராங்கனை ஜெனிபர் ஹெர்மோசாவை இறுக்கி அணைத்ததுடன், உதட்டில் முத்தமிட்ட ஸ்பெயின் உதைபந்து சங்கத் தலைவர் லூயிஸ் ருபியாலெஸ் மன்னிப்புக் கோரினார்.

பரிசளிப்பு விழாவின் போது ஸ்பெயின் வீராங்கனைகளின் கழுத்தில் தங்கப்பதக்கம் அணிவிக்கப்பட்டது. பரிசளிப்பு விழா மேடையில் நின்ற ஸ்பெயின் உதைபந்து சங்கத் தலைவர் லூயிஸ் ருபியாலெஸ் சில வீராங்கனைகளைக் கட்டிப்பிடித்துப் பாராட்டினார். முன்கள வீராங்கனை ஜெனிபர் ஹெர்மோசாவை இறுக்கி அணைத்ததுடன் உதட்டில் முத்தமிட்டார்.

இதனால் அதிர்ச்சிக்குள்ளான அந்த வீராங்கனை சிறிது நேரத்தில் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில், ''ருபியாலெஸ் நடந்து கொண்ட விதம் எனக்கு பிடிக்கவில்லை'' - என்று பதிவிட்டு பரபரப்பை ஏற்படுத்தினார். இதனால் இது சர்ச்சையாக வெடித்தது. இந்த விவகாரத்தால் பல்வேறு தரப்பிலிருந்தும் எதிர்ப்பு கிளம்பியதால் -ஸ்பெயின் உதைபந்து சங்கத் தலைவர் ருபியாலெஸ் மன்னிப்புக் கோரினார்.

இது குறித்து அவர் கூறுகையில், ''நான் செய்தது முற்றிலும் தவறு என்பதை ஒப்புக் கொள்கிறேன். உற்சாகம், பரவசத்தின் வெளிப்பாடாக இவ்வாறு நடந்து கொண்டேனே தவிர, இதில் உள்நோக்கம் எதுவும் இல்லை. என்றாலும், ஹெர்மோசாவிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். ஒரு தலைவராக இருக்கும்போது மிகவும் கவனமுடன் நடந்து கொள்ள வேண்டும் என்பதைப் புரிந்து கொள்கிறேன். இது எனக்கு ஒரு பாடமாகும்''- என்றார்.

# மாவட்ட மட்டப் போட்டிக்கு தெரிவான பாலமுனை அல்-அக்ஸா



அட்டாளைச்சேனை மேலதிக நிருபர்

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் ஏற்பாட்டில் அட்டாளைச்சேனை பிரதேச செயலக இளைஞர் கழகங்களுக்கிடையில் நடைபெற்ற உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் பாலமுனை அல்-அக்ஸா இளைஞர் கழக அணி வெற்றிபெற்று அம்பாறை மாவட்டப் போட்டிக்குத் தெரிவானது.

அட்டாளைச்சேனை பிரதேச செயலக இளைஞர் சேவை அதிகாரி பீ.எம்.றியாத் தலைமையில் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் ஒலுவில் மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை இறுதிப் போட்டி நடைபெற்றது.

இறுதிப் போட்டியில் அட்டாளைச்சேனை அஷ்ரப் இளைஞர் கழக அணியை 2 - 1 என்ற கோல்கள் அடிப்படையில் அல் - அக்ஸா அணியினர் வெற்றி பெற்று 2023ஆம் வருடத்துக்கான அட்டாளைச்சேனை பிரதேச இளைஞர் கழக சம்பியனாகத் தெரிவாகி அம்பாறை மாவட்டப் போட்டிக்குத் தகுதிபெற்றனர்.

# இன்டர்நெஷனல் ரி 20லீக்கில் 13 இலங்கை வீரர்கள்

ஐக்கிய அரபு இராச்சியத்தில் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் நடைபெறவுள்ள இன்டர்நெஷனல் ரி20 லீக் தொடருக்காக இலங்கை அணியைச் சேர்ந்த 8 வீரர்கள் மூன்று வெவ்வேறு அணிகளுக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர்.

டுபாய் கெபிட்டல்ஸ் – தசுன் ஷானக, நுவான் துஷார, சதீர சமரவிக்ரம

மும்பை எமிரேட்ஸ் – விஜயகாந்த் வியாஸ்காந்த், குசல் பெரேரா

சார்ஜா வொரியர்ஸ் – டில்ஷான் மதுசங்க, குசல் மெண்டிஸ், மஹீஷ் தீக்ஷன. இதேவேளை, மேற்குறிப்பிட்ட வீரர்களுக்கு முன்னர் இலங்கை அணியில் மேலும் 5 வீரர்கள் அணிகளால் தக்கவைக்கப்பட்டிருந்தனர். இதில் டுபாய் கெபிட்டல்ஸ் அணிக்காக துஷ்மந்த சமீர, அபு தாபி நைட் ரைடர்ஸ் அணியில் சரித் அசலங்க மற்றும் டெசர்ட் வைப்பர்ஸ் அணிக்காக மதீஷ பத்திரண, தினேஷ் சந்திமால் மற்றும் வனிந்து ஹஸரங்க ஆகியோர் தக்கவைக்கப்பட்டுள்ளனர்.

# பாடசாலை நீர் விளையாட்டுப் போட்டிகள் இன்று ஆரம்பம்




ஏ. அகீல் சிஹாப்

அகில இலங்கை பாடசாலைகளுக் கிடையிலான 48 ஆவது நீர் விளையாட்டுப் போட்டிகள் இன்று காலை 8.00 மணி முதல் கொழும்பு சுகததாஸ நீச்சல் தடாகத்தில் ஆரம்பமாகின்றன. இந்தப் போட்டிகள் எதிர்வரும் 28ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்த போட்டிகளில் 200க்கும் மேற்பட்ட பாடசாலைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி 5,000க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் கலந்துகொள்ளவுள்ளனர். மாணவர்கள் 3,010 பேரும், பெண் மாணவிகள் 2,088 பேரும் பங்கேற்கின்றனர்.

10, 12, 14, 16, 18, 20 வயதுக்குட்பட்ட ஆண், பெண் என 12 பிரிவுகளில் தனிப்பட்ட போட்டிகள் 140, குழுநிலை போட்டிகள் 24 என மொத்தமாக 164 போட்டிகள் நடைபெறவுள்ளன. குறித்த போட்டிக்கு இம்முறையும் நெஸ்லே மைலோ பிரதான அனுசரணை வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

Nestlé MILO

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# பழிதீர்த்த பின் சட்டையை கிழித்த ஜோகோவிச்



அமெரிக்காவில் நடைபெற்ற சின்சினாட்டி மாஸ்டர்ஸ் டென்னிஸ் தொடரில் சேர்பியாவின் நோவக் ஜோகோவிச் உலகின் நம்பர் 1 வீரரும், விம்பிள்டன் நடப்பு சம்பியனுமான ஸ்பெயினின் கார்லோஸ் அல்கராஸை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றார். விம்பிள்டன் இறுதிப்போட்டியில் அல்கராஸிடம் தோல்விகண்டதற்கு பழிதீர்த்த ஜோகோவிச் தனது சட்டையைக் கிழித்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு நடைபெற்ற இறுதிப்போட்டியில் உலகின் 2ஆம் நிலை வீரரான ஜோகோவிச் 5-7, 7-6 (9/7), 7-6 (7/4) என்ற செட்களில் விம்பிள்டன் நடப்பு சம்பியனான அல்கராஸை போராடி வீழ்த்தினார்.

இந்தப் போட்டியில் தோல்வி கண்டாலும் அல்கராஸ் உலகின் நம்பர் 1 வீரராகவே எதிர்வரும் கிராண்ட்ஸ்லாம் போட்டியான யு.எஸ். ஓபனிலும் களம் காண்பார் என்பது குறிப்பிடத்தக்கது.

சின்சினாட்டி மாஸ்டர்ஸில் 3 ஆவது முறையாக கிண்ணம் வென்றுள்ள ஜோகோவிச், தற்போது மாஸ்டர்ஸ் போட்டியில் ஒட்டுமொத்தமாக வென்றிருப்பது அவரது 39 ஆவது சம்பியன் பட்டமாகும்.

இது ஜோகோவிச்சின் டென்னிஸ் வரலாற்றில் அவர் வென்றுள்ள 95ஆவது கேரியர் பட்டமாகும். இதன் மூலம் ஓபன் எராவில் டென்னிஸில் அதிகமுறை சம்பியன் பட்டம் வென்றவர்கள் வரிசையில் அமெரிக்காவின் இவான் லெண்டல்ஸை பின்னுக்குத் தள்ளி 3ஆம் இடம் பிடித்துள்ளார் ஜோகோவிச். அமெரிக்காவின் ஜிம்மி காரனர்ஸ் (109), சுவிட்ஸர்லாந்தின் ரோஜர் ஃபெடரர் (103) ஆகியோர் முறையே முதலிரு இடங்களில் உள்ளனர்.




## விளையாட்டுத் துளிகள்

அஜர்பைஜானில் நடைபெறும் உலக செஸ் சம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவின் ஆர்.பிரக்ஞானந்தா இறுதிப்போட்டிக்கு முன்னேறினார். வரலாற்றில் இறுதிப்போட்டிக்கு வந்த இளம் வீரர் (18) என்ற சாதனையை அவர் படைத்தார். இதையடுத்து இறுதிச்சுற்றில், உலகின் நம்பர் 1 வீரரான நோர்வேயின் மேக்னஸ் கார்ல்செனுடன் நேற்று பிரக்ஞானந்தா மோதினார். விஸ்வநாதன் ஆனந்துக்கு பிறகு அரையிறுதிக்கு முன்னேறிய 2-ஆவது இந்தியர் என்ற பெருமையுடன் பிரக்ஞானந்தா உள்ளது குறிப்பிடத்தக்கது.

★★★★★★★

ஐ.சி.சி. உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரின் போட்டி அட்டவணையை மீண்டும் மாற்றுமாறு ஹைதராபாத் கிரிக்கெட் சங்கம் சார்பில் பி.சி.சி.ஐயிடம் கோரிக்கை வைத்ததாக தகவல் வெளியானது. இந்நிலையில், பி.சி.சி.ஐ. செயலாளர் ஜெய் ஷா ஹைதராபாத் கிரிக்கெட் சங்க நிர்வாகிகளை சந்தித்ததாகவும் அப்போது போட்டி அட்டவணையில் இனி எந்த மாற்றமும் செய்யப்படாது எனத் தெரிவித்ததாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

★★★★★★★

ஹங்கேரியில் உள்ள புடாபெஸ்டில் நடக்கும் உலக தடகள சம்பியன்ஷிப்பில் 10,000 மீற்றர் போட்டியில் 27 நிமிடங்கள் 51.42 விநாடிகளில் கடந்து, தொடர்ந்து மூன்றாவது முறையாக ஆடவர் 10,000 மீற்றர் உலகப் பட்டத்தை வென்றார் உகாண்டாவின் செப்டேகி.

★★★★★★★

உலக தடகள சம்பியன்ஷிப் போட்டியின் பெண்களுக்கான 100 மீற்றர் ஓட்டத்தில் அமெரிக்காவின் ஷகாரி ரிச்சர்ட்சன் 10.65 விநாடிகளில் கடந்து புதிய சாதனை படைத்தார்.

# கோலடித்த சில நிமிடங்களில் தந்தையின் மரணச் செய்தி



பீபா மகளிர் உலகக்கிண்ண உதைபந்து தொடர் சிட்னியில் நடந்த இறுதிப் போட்டியில் ஸ்பெயின் வெற்றிக்கு காரணமான வீராங்கனையின் தந்தை இறந்த தகவல் அவரது மகிழ்ச்சிக் கொண்டாட்டத்தில் பேரிடியாக அமைந்தது.

இங்கிலாந்து மற்றும் ஸ்பெயின் அணிகள் மோதிய சம்பியனை தீர்மானிக்கும் ஆட்டத்தில் 1-0 என்ற கோல் கணக்கில் ஸ்பெயின் அணி வரலாறு படைத்தது. ஸ்பெயின் அணிக்காக அந்த ஒற்றை கோலை பதிவு செய்தவர் ஓல்கா கார்மோனா என்ற வீராங்கனை. இவரது தந்தையே அன்று மரணமடைந்தார். இறுதிப்போட்டி முடிவடைந்ததாக அறிவிக்கப்பட்ட கடைசி நிமிடத்தில் குறித்த தகவல் அவருக்கு தெரிவிக்கப்பட்டது.

ஸ்பெயின் உதைபந்து அமைப்பு வெளியிட்ட இரங்கல் செய்தியில் இது குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த இக்கட்டான சூழலில் அன்பையும் ஆதரவையும் அரவணைப்பையும் ஓல்கா மற்றும் அவரது குடும்பத்தினருக்கு பகிர்ந்து கொள்வதாக ஸ்பெயின் உதைபந்து நிர்வாகம் தெரிவித்துள்ளது.

# செல்வா சம்பியன் கிண்ணத்தை தனதாக்கியது ஒலுவில் இலவன் ஸ்டார்



எம்.ஜே.எம். வலீத்

சவளக்கடை செல்வா விளையாட்டுக்கழகம் நடத்திய அணிக்கு 11 பேர்கொண்ட 10 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி ஒலுவில் இலவன் ஸ்டார் மற்றும் மெக்ஸ் வி.க. இடையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை சவளக்கடை செல்வா வி.க மைதானத்தில் இடம்பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மெக்ஸ் அணியினர் 10 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 48 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டனர். 49 என்ற வெற்றியிலக்கை நோக்கி பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஒலுவில் இலவன் ஸ்டார் அணியினர் 7.3 ஓவர்களில் வெற்றியிலக்கை இலகுவாக அடைந்து சம்பியன் கிண்ணத்தையும் 30,000 ரூபா பணப்பரிசையும் தமதாக்கிக் கொண்டனர்.

சுற்றுப்போட்டியின் தொடர் ஆட்ட நாயகன், மற்றும் சிறந்த துடுப்பாட்ட வீரருக்கான விருதை இலவன் ஸ்டார் அணியின் தலைவர் ரஸ்மி பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# தீயில் பயிற்சிபெறும் பங்களாதேஷ் கிரிக்கெட் வீரர்



2023ஆம் ஆண்டுக்கான ஆசியக்கிண்ண கிரிக்கெட் தொடர் எதிர்வரும் 30ஆம் திகதி ஆரம்பமாகும் நிலையில் குறித்த தொடருக்காக பங்களாதேஷ் அணியின் இளம் வீரர் முஹமட் நயிம் ஷேக் தீயில் இறங்கி பயிற்சி செய்யும் வீடியோ இணையத்தில் வைரலாகி வருகிறது.

23 வயதான இடது கை பேட்ஸ்மேன் முஹமட் நயிம் ஷேக் வித்தியாசமான முறையில் பயிற்சி மேற்கொண்டு வருகிறார். அவர் அணியின் மனநல பயிற்சியாளருடன் சேர்ந்து, நெருப்பில் இறங்கி நடந்து பயிற்சி பெற்று வருகிறார். 6 அடி தூர நெருப்பில் நயிம் ஷேக் நடந்து வரும் வீடியோ இணையத்தில் பரவியுள்ளது.

இந்தப் பயிற்சி மனதை வலிமையாக்கும் பயிற்சி என்று கூறப்படுகிறது. முஹமட் நயிம் ஷேக் 2019ஆம் ஆண்டு இந்திய அணிக்கு எதிரான ரி 20 போட்டியில் பங்களாதேஷ் அணியில் அறிமுகமானார்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7